
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூன் - 2003
ம.க.இ.க. மாதத இதழ்
ரூ. 5.00



நசீம் இக்மத் :
துருக்கியிலிருந்து
ஒரு மக்கள் கலைஞன்!



## பாலியல் வன்முறை

அந்தரங்கத்தின் அவலம்!

படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

● "வஞ்சகத்தின் வெற்றி வீரத்தின் தோல்வி" என்ற தலைப்பின் கீழ் இராக் வரலாறு மிகச் சிறந்த உண்மையைப் புரிய வைத்தது. 60 வயதான எனக்கு இதுவரை தெரியாத பலவிவரங்களை விளக்கமாகத் தெரிய - தெளிய வைத்தது. முன்பு மண் ஆசை, பின்பு பொன் ஆசை, இப்போது எண்ணெய் ஆசை. ஆசைப்படுபவர்களுக்கு மிஞ்சப் போவது கரும்பு கைதான். இது வரலாற்று உண்மை! உங்கள் பணி தொடரட்டும்.

— **மருத்துவர். அப்துல் அசிஸ்** (ஆர்.எம்.பி), சென்னை.

● நான் தஞ்சைக்கு வராவிட்டாலும், எங்கள் ஊரில் திரையிடப்பட்ட உங்கள் கலைநிகழ்ச்சி சி.டி. (C.D.) மூலம் தஞ்சைக்கு வந்தது போல் ஆகிவிட்டது. அதில் "சாம்பான்" நாடகத்தைப் பார்த்து மிகவும் வேதனைப் பட்டேன். தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமையை தத்ரூபமாக நடித்த அத்தனை நண்பர்களுக்கும் என் நன்றி! 'மே' இதழில் லாரன்வான்டெர் ஸ்டாட் என்னும் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் இராக் மக்களைக் கொன்று குவித்த அமெரிக்க இராணுவத்தை அதிகாரபூர்வமாக அம்பலப்படுத்தியிருந்தார்.

நான் 10-வது படிக்கும் மாணவன். நாட்டின் அரசியல் பற்றி அதிகமாகத் தெரியாது. நாட்டில் நடக்கிற அநீதிகளையும், தலைவர்களின் தவறுகளையும் வெளிப்படையாக அம்பலப்படுத்தும் ம.க.இ.க. இயக்கம் மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

— **ம. செல்வக்குமார்,** நாராயணத் தேவன்பட்டி, தேனிமாவட்டம்.

● இராக் சிறப்பிதழ் உண்மையில் இணையத் தளங்களை ஊடுருவி அரிய தகவல்களுடனும், போர்க்குணமான உணர்வுடனும் வெளியே வந்த உணர்வை ஏற்படுத்தியது. இணையத் தளங்கள் மூலம் அறிந்து கொள்ள வாய்ப்பும் சூழ்நிலையும் இல்லாத ஆயிரக்கணக்கான ஏழை எளியோர்க்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஈராக்கின் வீரமிக்க வரலாறு ஈராக் மீதான என்னுடைய கண்ணோட்டத்தையே மாற்றி உள்ளது. வண்ணப்படங்களிலான ஈராக்கின் சிதைந்த உருவங்கள் மனதை வெகுவாகவே சிதைத்துள்ளது. பிஞ்சுக் குழந்தைகளின் சிதைவுகள், சோகம் தோய்ந்த பார்வை கண்களை உறுத்துகிறது. அமெரிக்க மாணவி ரச்சேல் மற்றும் தோழர் பீட்டரின் மரணம் என்னுள் மரணத்தின் தருணம் பற்றிய சிந்தனையைத் தூண்டி விட்டுள்ளது.

— **புரட்சித் தூயன்,** தருமபுரி.

● "மிருகங்கள் மனிதனை வெல்லப் போவதில்லை" என்ற சூரியனின் வார்த்தைகள் உண்மைதான். ஆனால் அதுவரை அந்த மனிதனைக் காப்பாற்ற யாரும் இல்லை. இந்த மிருகங்களிடம் இருந்து உயிர், உடமைகளைப் பாதுகாத்துக் கொள்ளப் பயிற்சி பெறவேண்டியது அவசியம்.

மருதையன் அவர்களின் "போர் இன்னும் முடியவில்லை" அற்புதமான விசயங்களின் தொகுப்பு.

– **ரிஸ்வான்,** ஒசூர்.

● 'பிணந்திண்ணிகளின் பானம் - பெப்சி, கோக்' பின்னட்டையைப் பார்த்ததும், கொலைகாரப் போர் ஏற்படுத்தும் வெற்றியை உலக நுகர்வோரின் உணர்வாக மாற்ற வேண்டும் என்கிற அந்த அமெரிக்க விளம்பர நிறுவனத்தை எதனால் அடிப்பது என்று உணர்வு துடிக்கிறது. கம்யூனிஸ்டுகளை ஒழிக்க அமெரிக்க அரசுக்குத் துணை போன ஷேக்குகளுக்கும், முல்லாக்களுக்கும், சதாம்களுக்கும் இன்று கம்யூனிஸ்டுகளே குரல் கொடுக்க வேண்டியிருப்பதை சனநாயகம் நிரூபித்துள்ளது.

— **செம்மலர் மா. நடராசன்,** அறந்தாங்கி.

அமெரிக்க முன்னாள் இராணுவத்தினர் வியட்நாம் போன்ற அனுபவங்களுக்குப் பின் (அடிபட்ட பின்) அறிக்கை தந்தது நம் இந்திய இராணுவ (முன்னாள், இந்நாள்) வீரர்களின் மனச்சாட்சியைத் தட்டுமா? ஈழத்தில் 'நம்மவர்கள்' செய்த வெறித்தனம் கண்முன்னே "பிசாசாக" வருகிறது. ரச்சேலின் கடிதம் ஒவ்வொரு மனிதனின் மனச்சாட்சியையும் உலுக்குவதாக உள்ளது. ஒரு சாதாரண அமெரிக்கப் பெண்ணின் எதிர்ப்பு அவர்கள் நாட்டிலும் மகத்தான போராளிகள் உள்ளதை மீண்டும் வரலாறு பதிவு செய்துள்ளது.

உருக்குலைக்கப்பட்ட இராக் - 8 பக்க வண்ணப்படங்கள் - சிலவற்றைத் தவிர - எந்த தமிழ், ஆங்கிலப் பத்திரிகையிலும் காணப்படாதது. காமிராவின் துயரமான கவிதை நெஞ்சை உலுக்கி நடுமண்டையில் நச்சென்று ஆணி அறைந்தது போல உள்ளது. அமெரிக்கப் பிரஜை ரச்சேல் ஆனாலும், தனது கடந்தகாலச் சேவையின் மூலம் அமெரிக்கா தன்னை ஏதும் செய்யாது என்றெண்ணிய சதாமே ஆனாலும் ஏகாதிபத்தியம் தன்னை எதிர்ப்பவர்களை ஒழிப்பது என்பதே வரலாறு காட்டும் பாடம்.

ஏகாதிபத்திய, பாசிசப் பார்ப்பன பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட "புதிய கலாச்சாரம்" ஒரு மகத்தான அறிவு ஆயுதம் என்பதை மீண்டும்... மீண்டும் நிரூபித்துள்ளீர்கள்.

— **கி. முரளி,** ஈரோடு.

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்
• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 21
• குரல்: 1
• ஜூன் - 2003

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொலைபேசி: 044-23718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# இந்து பயங்கரவாதிகளின் எடுபிடிகளாக போலீசு!

2002-ஆம் ஆண்டு கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்தைச் சாக்கு வைத்து, இசுலாமிய சமூகத்துக்கு எதிராக கோரமான, குரூரமான, வக்கிரமான மதவெறிப் படுகொலைகளை இந்து பாசிச பயங்கரவாதிகள் நடத்தினர். அச்சம்பவங்களை மலையாள மொழி விளக்கத்துடன் சித்தரிக்கும் ஒளிக்குறுந்தகடுகளைக் கோவைப் போலீசார் சமீபத்தில் கைப்பற்றியுள்ளனர். அந்த ஒளிக் குறுந்தகடுகளைப் பிரதி எடுத்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு இசுலாமியரைக் கைது செய்ததோடு, இதற்கு மூளையாகச் செயல்படுபவர்களைத் தேடியும் வருகின்றனர். ஒரு திரிசூலம், அதைத் தொடர்ந்து பெண்களும் குழந்தைகளும் கதறும் குரல்கள், தம்மை நெருங்கும் கொலைவெறிக் கும்பலிடமிருந்து அவர்கள் தப்பியோட முயலுவது, கலவரம் செய்து அவர்கள் படுகொலை செய்யப்படுவது ஆகிய காட்சிகள் அந்தக் குறுந்தகட்டில் வருகின்றன. மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசும், குஜராத்தில் உள்ள நரேந்திரமோடி அரசும் அந்த வன்முறையை நடத்தியதாகவும், பா.ஜ.க.வின் சில முன்னணித் தலைவர்களின் பெயர் குறிப்பிட்டு, அவர்களே சிறுபான்மை சமூகத்தின், ''முதன்மை எதிரிகள்'' என்றும் குற்றஞ்சாட்டுகிறது. இதை வைத்துத் தடைசெய்யவோ, பறிமுதல் செய்யவோ, கைது செய்து வழக்குப் போடவோ எவ்வித அடிப்படையும் ஆதாரமும் கிடையாது.

கோவையில் போலீசார் கைப்பற்றியிருக்கும் ஒளிக்குறுந்தகடு குஜராத்தில் நடந்தேறிய நிகழ்ச்சிகளின் தொகுப்புதானே தவிர கற்பிதமானவை அல்ல; மேலும் போலீசாரின் கூற்றுப்படியே அந்தக் குறுந்தகடு தமது சுயபாதுகாப்புக்கு இசுலாமியர்கள் ஒன்றுபட்டு, பலத்தைத் திரட்டிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைத்தான் கோருகிறது. குஜராத் மதவெறிக் கொலைகளுக்குத் தலைமையேற்ற இந்துத்துவவாதிகளை பழிவாங்கும்படியான, மதக் கலவரத்தைத் தூண்டும்படியான வகையில் அந்த ஒளிக் குறுந்தகடு இருப்பதாக போலீசே கூறவில்லை. அந்தக் குறுந்தகடுகளை வைத்து நிதி திரட்டிவிடுவார்கள் என்று மட்டுமே குற்றஞ்சாட்டும் போலீசு அதற்காகக் கிரிமினல் குற்ற வழக்குப் போட்டுள்ளனர்.

இவ்வாறு செய்ததன் மூலம் இந்து மதவெறிப் படுகொலைகளில் பங்கேற்றும் உடந்தையாகவும் செயல்பட்ட குஜராத் போலீசார் மட்டுமல்ல, தமிழகம் உட்பட நாடெங்கும் ஒருதலைப் பட்சமாகவும், சிறுபான்மைச் சமூகத்துக்கு எதிராகவும் செயல்படுவது மேலும் நிரூபணமாகியுள்ளது. ''இந்து எழுச்சி மாநாடு'' என்ற பெயரில் மாவட்டந்தோறும் இந்து முன்னணி, விசுவ இந்து பரிசத் மற்றும் ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகள் கும்பலைத் திரட்டி சிறுபான்மை மதத்திற்கு எதிராக ஆத்திரத்தையும், பகைமையையும், கொலைவெறியையும் தூண்டும் ஆவேசக் கூச்சல் போடுகின்றனர். பெருநகரங்கள் முதல் கிராமங்கள் வரை விடலைப் பருவ சிறுவர்களைத் திரட்டி இந்துமதவெறி பாசிச - பயங்கரவாத உணர்வுகளை விதைத்து, பொது இடங்களில் வார்ந்தோறும் பகிரங்கமாகவே ஆயுதப் பயிற்சியளிக்கின்றனர். மாற்று மதத்தினரை வதம் செய்யும் நோக்கில் நவீன ஆயுதந்தரித்த மூர்க்கமான புதுப்புது கடவுளர்களைப் படைத்து வழிபடச் செய்கின்றனர்.

அசோக் சிங்கால், பிரவீண் தொக்காடியா, கிரிராஜ் கிஷோர், ஆச்சார்யா தர்மேந்திரா முதல் இங்குள்ள இராமகோபாலன், காஞ்சி சங்கராச்சாரி வரை இந்து பாசிச பயங்கரவாதிகள் வாய் திறந்தாலே மதவெறி கொலைவெறியாட்டத்தைத் தூண்டும் நச்சுக் காற்றுதான் வெளிவிடுகின்றனர். ''நாட்டின் ஒவ்வொரு கிராமத்தையும் அயோத்தியாக மாற்றுவோம்; 30,000 மசூதிகளை இடிப்போம்; ஒவ்வொரு கிராமத்திலும் சிவில் யுத்தம் வெடிக்கும். மதச் சிறுபான்மையினர் மட்டுமல்ல, இந்துத்துவாவை எதிர்க்கும் அனைவரும் மரண தண்டனை பெறுவார்கள்.இந்துத்துவாவை ஏற்கவில்லையெனில், குஜராத்தில் செய்ததைப் போல இசுலாமியர்களைக் கொன்றொழித்து நாட்டின் ஒவ்வொரு கிராமத்தையும் சுத்தப்படுத்துவோம். ஜெர்மனியில் நாஜிக் கட்சி செய்ததைப் போலசெய்வேம்.''- இவ்வாறெல்லாம் மதவெறிக் கூச்சல் போடுவதோடு அவர்கள் நிற்கவில்லை. நவீன ஆயுதங்களை வைத்து பூசை போடுகிறார்கள், இந்து மதவெறிக் குண்டர்களுக்கு ''திரிசூலம்'' வடிவிலான கொலைவெறி ஆயுதங்களை பகிரங்கமாக விநியோகிக்கிறார்கள்.

இப்படித் தினமும் மதவெறி பரப்பி, ஆயுதங்களை விநியோகிக்கும் இந்துமதவெறியர்களுக்குப் போலீசு பாதுகாப்பு அளிக்கிறது. ''பாபரி மசூதியை நாங்கள்தாம் இடித்தோம். குஜராத்தில் தெருவில் இறங்கி கலவரங்கள் புரிந்தவர்கள் எங்கள் ஆட்கள்தாம்'' என்று பகிரங்கமாக பீற்றிக் கொள்ளும் இந்து பாசிச பயங்கரவாதிகளை விட்டுவிட்டு அவர்களின் வெறிச் செயல்களுக்கு பழியானவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது, அந்த உண்மையை வெளிக் கொண்டு வருவது குற்றமெனப் பாய்கிறது போலீசு. இதன்மூலம் இந்து பயங்கரவாதிகளோட அரசு பயங்கரவாதிகள் கைகோர்த்துக் கொண்டிருப்பது அப்பட்டமாகத் தெரிகிறது!

படிப்பகம்

www.padippakam.com

# பொடா பாய்ச்சல்! சுதந்திரம் பறிப்பு! பத்திரிக்கை முதலாளிகளின் நிலை என்ன?

''தமிழ்நாட்டில், பத்திரிக்கைச் சுதந்திரத்துக்கு ஆபத்து சூழ்ந்து வருகிறது.

பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது.

பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசர அவசியம்.''

- இந்தக் குரல் இப்போது உரக்க ஒலிக்கிறது.

அதுவும் குறிப்பாக நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்டு, ''பொடா'' சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்ட பிறகு, இந்து மற்றும் முரசொலி ஆகிய நாளேடுகள் மீது சட்டப்பேரவை உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு விசாரணை உத்திரவிடப்பட்ட பிறகு ஓங்கி ஒலிக்கிறது.

பத்திரிக்கையாளர் இரா. ஜவகர் தலைமையில் ''பத்திரிக்கைச் சுதந்திரம் பாதுகாப்புக் குழு'' என்று ஒன்று அமைக்கப்பட்டு சென்னையில் ஒரு பெரும் அரங்கக் கூட்டம் நடந்துள்ளது. ஆளும் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. தவிர மற்ற அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அதில் பங்கேற்றுள்ளனர். இந்து நாளேட்டின் குடும்பப் பத்திரிக்கையான ''ஃபிரண்ட்லைன்'' பத்திரிக்கை ஆசிரியர் என். ராம் தலைமையேற்றுள்ளார். பத்திரிக்கைகள் மற்றும் பத்திரிக்கைச் செய்தியாளர்கள் மீது ஜெயலலிதா அரசின் தாக்குதல்களைத் தொகுத்து இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிடும்படியும், ''பொடா'' உட்பட நக்கீரன் பத்திரிக்கையாளர் மீதான வழக்குகளை விலக்கிக் கொள்ளும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உண்மையில் இது ஒரு சிக்கலான பிரச்சினையாக உள்ளது. என். ராம் தவிர, தமிழ்நாட்டுப் பத்திரிக்கை ஆசிரியர்கள் மற்றும் முதலாளிகள் உட்பட பத்திரிக்கை நிர்வாகத்தினர் யாரும் ''பத்திரிக்கைச் சுதந்திரம் பாதுகாப்புக் குழு''வில் இடம் பெறவில்லை. அவர்களில் எவரும் அந்தக் குழு சார்பில் நடந்த அரங்கக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

தமிழ்நாட்டுப் பத்திரிக்கைகளைப் படிக்கும் வாசகர்கள், பத்திரிக்கைகளின் சுதந்திரத்துக்கு ஆபத்து சூழ்வதாகவும் சுதந்திரம் பறிக்கப்படுவதாகவும், அது பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கருதமுடியாது. எதிர்த் தரப்பு அரசியல் தலைவர்களும், ஒரு பிரிவு பத்திரிக்கைச் செய்தியாளர்களும்தான் பத்திரிக்கைச் சுதந்திரம் பற்றி ''மெனக்''கெடுகிறார்கள். ஆனால், அரசியல் சார்பற்றவை, நடுநிலைப் பத்திரிக்கைகள் என்றெல்லாம் முகப்பில் முத்திரை குத்திக் கொண்டுவரும் பத்திரிக்கைகள் எவையும் இப்படித் தமது சுதந்திரத்துக்கு ஆபத்து என்று அச்சம் தெரிவிக்கவில்லை.

சமீபத்தில், இந்து நாளேடு மீது சட்டப்பேரவை உரிமைமீறல் நடவடிக்கை எடுத்ததாக எல்லாப் பத்திரிக்கைகளும் கண்டிக்கத்தான் செய்தன. இந்த ஒரு விவகாரம் தவிர வேறு எந்த வகையிலும் தமிழக அரசு தமது சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் செயல்படுவதாகக் கருத்துக் கூறவில்லை. எப்போதும் போல சுதந்திரமாகச் செயல்பட்டு வருவதாகத்தான் அந்த இந்து நாளேடு உட்பட எல்லாப் பத்திரிக்கைகளும் காட்டிக் கொள்கின்றன. இதற்கு விதிவிலக்காக நடந்து கொண்டவை தினகரனும் நக்கீரனும் தான். இவற்றோடு கூடவே அரசியல் சார்புப் பத்திரிக்கைகளும், பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்படுவதாகக் கூறி வருகின்றன.

அப்படியானால் இந்த இரண்டு நிலைப்பாடுகளில் எது உண்மை? தமிழ்நாட்டில், ஜெயலலிதா அரசால் பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்படுவதாக எதிர்த்தரப்பு அரசியல் தலைவர்களும் ஒரு பிரிவு பத்திரிக்கைச் செய்தியாளர்களும், நக்கீரன், தினகரன் ஆகிய இரண்டோடு அரசியல் சார்புப் பத்திரிக்கைகளும் கூறும் புகார் உண்மையா? பத்திரிக்கைச் சுதந்திரம் பற்றி கூடுதல் அக்கறைகாட்ட வேண்டிய பத்திரிக்கைகளே மௌனம் சாதிக்கின்றனவா? இல்லை, பத்திரிக்கைச் சுதந்திரம் உண்மையிலேயே பாதிக்கப்படவில்லையா? அதுவும் இல்லை. ஜனநாயகத்தைக் காத்திட வேண்டிய தூண்களில் ஒன்றாகிய பத்திரிக்கைகள் தமது சுதந்திரம் பாதிக்கப்படுவதாகக் கூடத் தட்டிக் கேட்காத அளவு சொரணை கெட்டுக் கிடக்கின்றனவா?

முதலாவதாக, அரசியல் சார்பற்ற, நடுநிலைப் பத்திரிக்கைகள் எனப்படுவனவற்றின் சுதந்திரத்தைப் பறிக்கவோ, அடக்கி ஒடுக்கவோ வேண்டிய அவசியம் ஜெயலலிதா அரசுக்குக் கிடையாது. சாட்டையை எடுத்தால் கால் சட்டையோடு மூத்திரம் பெய்யக்கூடிய அளவுக்கே துணிச்சல் கொண்டவைகளாக பத்திரிக்கைகள் உள்ளன; எந்தக் கட்சி ஆண்டாலும், ஆட்சியாளர்களுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் நிர்வாகத்துக்கும் ஒத்தூதுபவையாக உள்ளன; இலாபம் ஒன்றையே குறியாக வைத்து தனக்குத்தானே வாய்ப்பூட்டுப் போட்டுக் கொண்டுள்ள பத்திரிக்கைகளிடம் எந்த அரசும் ஏன் பாதகமான நடவடிக்கை எடுக்க வேண்டும்?

**பத்திரிக்கைச் சுதந்திரம் பாதுகாப்புக் குழுவில் கலந்து கொண்ட என்.ராம் படத்தை மட்டும் கத்தரித்து விட்டு 'தி ஹிந்து' வெளியிட்டிருக்கும் படம்!**



www.padippakam.com

இரண்டு நிகழ்வுகளைப் பார்த்தாலே இந்த உண்மை புரியும். ஒன்று, நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்டு, ''பொடா'' சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்ட போது, அரசியல் சார்பற்ற - நடுநிலைப் பத்திரிக்கைகள் எவையும் அதைக் கண்டிக்கும் வகையில் தலையங்கமோ, சிறப்புக் கட்டுரையோ எழுதவில்லை. அதற்கு மாறாக, அரசிதழ் போல போலீசுச் செய்திகளை எழுதின. அல்லது கிசுகிசுக்கள் மட்டுமே எழுதப்படுகின்றன. இரண்டு, ஜெயலலிதா அரசின் இரண்டாண்டு நிறைவு மலரும், முழுப்பக்க விளம்பரங்களும் கோடிக்கணக்கான ரூபாய் அரசு செலவில் ''எல்லா''ப் பத்திரிக்கைகளும் பல நாட்களாக வெளியிடுகின்றன. இந்த இரண்டு நிகழ்வுகளும் தொடர்பற்றவை அல்ல.




நக்கீரன் கோபால் கைதிற்கு முன்பாகவே, ஜெயலலிதா அரசால் கடந்த இரண்டு ஆண்டுகளாக நக்கீரன் பத்திரிக்கைச் செய்தியாளர்கள் தமிழக - கர்நாடக அதிரடிப் படையினரால் பிடித்து வைக்கப்பட்டுச் சித்திரவதை துன்புறுத்தலுக்கும் பொய் வழக்குகளுக்கும் இலக்காகினர். நக்கீரன் மட்டுமல்ல, விழுப்புரம் அரசு உணவுக்கிடங்குக்கு முன்னாள் அமைச்சர் பொன்முடியுடன் சென்ற சன் தொலைக்காட்சி நிருபர் கைது, பொய் வழக்கு முதல் கருணாநிதி கைது, தி.மு.க. பேரணி என்று பலமுறை நிருபர்கள் போலீசுத் தாக்குதலுக்கு இலக்காகினர். பத்திரிக்கைச் செய்தி மற்றும் புகைப்படக்காரர்கள் தாக்கப்படும் பொழுதெல்லாம் அவர்கள் போராடுவதும் விசாரணைகள் நடப்பதும், தாக்கிய குற்றவாளிகள் மீது வழக்கோ, தண்டனையோ இல்லாமல் போவதும் வழக்கமாக நடக்கின்றன.

இருந்தாலும், பத்திரிக்கை நிர்வாகங்கள் இதையெல்லாம் ஒரு பொருட்டாகவே கருதி நடவடிக்கை எடுக்கவில்லை. விளம்பரம் என்கிற பெயரில் அரசு வீசியெறியும் காசுக்காக பத்திரிக்கை நிர்வாகங்கள் விலை போய் விட்டன அல்லது ஆட்சியாளர்களிடம் பயந்து சமரசம் செய்து கொண்டு சரணடைந்து விட்டார்கள் என்பது கூட முழுமையான பார்வை கிடையாது. உண்மை என்னவென்றால், பத்திரிக்கைகளின் செயல்பாடுகள் எவையும் அவற்றின் சுதந்திரம் பறிக்கப்படுவதைக் கோரவே இல்லை. அதாவது வேலிதாண்டிப் போக எத்தனிக்கும் ஆடுகளுக்குத்தான் தடிக்கம்பு அவசியமாகிறது. ஆட்சியாளர்களின் மனதறிந்து, விருப்பமறிந்து செயல்படும் பத்திரிக்கைகளுக்குக் கடிவாளம் தேவையில்லை.

பத்திரிக்கைகள் ஆட்சியாளர்களுக்கு வளைந்து கொடுத்துப் போவதால் அதிக ஆதாயம் அடையலாம். ஆனால், பத்திரிக்கைகள் தம் இயல்பிலேயே ஆளும் வர்க்கக் கண்ணோட்டம் கொண்டவைதாம். எனவே அவை குறிப்பிட்ட எல்லைக் குட்பட்டு இயங்குகின்றன.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாகிய அரசியல்வாதிகளாவது ஐந்தாண்டுக்கு ஒருமுறை மக்களிடம் ஓட்டுக் கேட்டு வரவேண்டியிருக்கிறது. மற்ற இரு தூண்களைப் போலவே பத்திரிக்கைகளும் எந்தவகையிலும் தமது செயல்பாடுகளுக்காக மக்களுக்குப் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டியதில்லை.

தினத்தந்தி ஆதித்தனார் குடும்பம், தினமணி கோயங்கா குடும்பம், இந்து நாளேடு குடும்பம், விகடன் குடும்பம், குமுதம் நகரத்தார் குடும்பம், கல்கி குடும்பம் - இப்படி தமிழகத்தின் பத்திரிக்கை நிர்வாகங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். சமுதாயத்தின் மனச்சாட்சிக் காவலர்கள் ஜனநாயகத்தின் தூண்கள் என்கிற முறையில் இந்த நிர்வாகங்கள் நிறையவே அரசுச் சலுகைகளைப் பெறுகின்றன. இந்தத் தகுதியை இவர்களுக்கு யார் எந்த அடிப்படையில் கொடுத்தார்கள்? அதற்காக மக்களின் ஒப்புதல்கள் எதையாவது பெற்றார்களா?

அறிவிக்கப்பட்ட காலக்கிரமப்படி பத்திரிக்கையை வெளியிட வேண்டும்; குறைந்தபட்சம் எண்ணிக்கையில் அச்சிட்டு விநியோகிக்கவேண்டும். இலாப நோக்கம் கருதித் தொழில் நடத்தும் எந்தவொரு முதலாளிக்கும் அந்தத் துறையில் நீடித்திருப்பதற்குரிய அவசியமான தகுதிகள் எவை இருக்க வேண்டுமோ அவையே பத்திரிக்கை முதலாளிக்கும் தேவை. ஒரு முதலாளி, தான் தொழிலில் நீடித்திருப்பதற்கு, கொள்ளை இலாபமடிப்பதற்கு தொழிலாளியை எப்படிச் சுரண்டுகிறான், சந்தையில் வாங்குவோரை எப்படி ஏய்க்கிறான் என்பதெல்லாம் எப்படி அரசின் அக்கறைக்குரியதல்லவோ அதைப்போலத்தான் பத்திரிக்கைகளுக்கும்.

மக்களுக்கு செய்தி - தகவல்களை அறியத் தருவது என்கிற சமூக, ஜனநாயகக் கடமையை முதன்மைப் பணியாகக் கொண்டு மேற்படிப் பத்திரிக்கைகள் செயல்படுவது கிடையாது. விற்பனை, விளம்பரம், அரசுச் சலுகைகள் மூலம் முடிந்தவரை அதிகபட்சம் இலாபமீட்டுவதுதான் பத்திரிக்கைகளின் முதன்மைப் பணியாக உள்ளது. அரசின் அடக்குமுறையை எதிர்கொள்ளும் நக்கீரன், தினகரன், மற்றும் சன் தொலைக்காட்சிச் செய்தியாளர்களும் கூட இதற்கு விதிவிலக்கில்லை. இவை எதிர்த்தரப்பு அரசியல் வாசகர்கள் - பார்வையாளர்களைக் கவர்ந்து விற்பனையைப் பெருக்கிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

செயல்படுகின்றன. இதன் காரணமாக ஆளுங்கட்சியின் (சுதந்திரம்) உரிமைப் பறிப்பு தாக்குதல்களுக்குப் பலியாகின்றன. மற்றபடி ஜனநாயகக் கடமையாற்றுவதால் அரசின் அடக்குமுறைக்குப் பலியாகவில்லை.

விற்பனையை - விநியோக எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வதற்காக மலிவான - தரக்கேடான செய்தி - தகவல்களையே இந்தப் பத்திரிக்கைகள் பரப்புகின்றன. இலாபத்தைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்வதற்காக யானை ''லத்தி'' போட்டதைப் போல விளம்பரக் குப்பைகளை விநியோகிக்கின்றன. சினிமா - ஆபாசப்படங்கள், கிரிமினல் குற்றச் செய்திகள், போலீசு அறிக்கைகள், ஆன்மீகம் - பாலியல் - ஃபாஷன் - பரிசுப் போட்டிகள் (தற்போது நீதிமன்றத் தடை இருப்பதால் நிறுத்தி வைத்துள்ளனர்), மலிவு இலக்கியங்கள் என்று சமூகக் கேடுகளைத் தான் பத்திரிக்கைகள் விற்கின்றன. இந்து போன்ற ''மதிப்புக்குரிய'' பத்திரிக்கைகளோ பன்னாட்டு நிறுவனங்களுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் இங்கே தரகு வேலை பார்க்கின்றன.

தனியார் முதலாளிகளுடைய இலாபத்துக்காக மட்டும் நடத்தப்படும் பத்திரிக்கைகளிடமிருந்து வேறென்ன எதிர்பார்க்க முடியும்? சமூக சேவையா? இந்த இலட்சணத்தில் நக்கீரன் கோபால் ''பொடா''வில் கைதானபோது அதைக் கண்டிக்க மறுப்பதற்காக ''நக்கீரன் பத்திரிக்கையின் தரக்கேடு, கோபால் பத்திரிக்கைக்காரனுக்குரிய வரம்பு மீறிச் செயல்பட்டது'' போன்றவற்றை நகரப்புற நடுத்தர வர்க்கங்களின் மதிப்புக்குரிய ஏடுகள் கூறுகின்றன.

ஜுனியர் விகடனும் நக்கீரனும் ஏறக்குறைய ஒரே உள்ளடக்கத்தை அந்தந்த வாசகர்களின் பின்னணிக்கேற்ப வெவ்வேறு பாணியில் வெளிக்கொண்டு வரும் கிசுகிசுப் பத்திரிக்கைகள். இவற்றின் ''வெற்றி''க்குப் பிறகு இதே வடிவில் பல பத்திரிக்கை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுத் தோற்றுப் போயின. இப்போது இரண்டு பெரிய பத்திரிக்கைக் குடும்பங்களின் பின்னணியோடு குமுதம் ரிப்போர்ட்டர் மற்றும் தமிழன் எக்ஸ்பிரஸ் ஆகிய பத்திரிக்கைகள் வெளிவருகின்றன. இவையெல்லாம் பார்ப்பன மற்றும் பிற மேல்சாதி நடுத்தர வாசகர்களுக்கேற்ப நடத்தப்படுவதால் மரியாதைக்குரியன வாகவும், நக்கீரன் ''சூத்திர'' சாதிகளின் நடுத்தர வாசகர்களுக்கேற்ப நடத்தப்படுவதால் தரக்குறைவானதாகவும் சித்தரிக்கப்படுகிறது.

அரசியல் கிசுகிசு என்கிற பெயரில் வதந்திகளை எழுதும் கேடுகெட்ட வேலையை நக்கீரன் மட்டுமா செய்கிறது? கழுகு, ஆந்தையார், வம்பானந்தா, டீக்கடை பெஞ்சு, லென்சு மாமா என்கிற பெயர்களில் கிசுகிசு எழுதாத பத்திரிக்கைகள் உண்டா? இந்தக் கிசுகிசு எழுதும் போக்கைத் தொடங்கி, பிரபலப்படுத்தி இன்னும் செய்து வருவது ''மதிப்புக்குரிய'' பார்ப்பன ''துக்ளக்'' தானே! அதற்கும் முன்னோடியாக இந்து, எக்ஸ்பிரஸ் நாளேடுகள் விளங்கவில்லையா? இப்பொழுது நம்பிக்கைக்குரிய வட்டாரங்கள், அதிகார பூர்வ வட்டாரங்கள், அதிகாரபூர்வமற்ற வட்டாரங்கள், நெருக்கமான உதவியாளர்கள், பெயர் சொல்ல விரும்பாதவர்கள் கூறியதாக எத்தனைக் கிசுகிசுக்கள் - வதந்திகள் வெளிவருகின்றன தெரியுமா?

சீவலப்பேரி பாண்டி, கோவில்பட்டி வீரலெட்சுமி, சரசுவாகிய நான் போன்ற உண்மைக்கதைகளை ஜுனியர் விகடன் எழுதலாம்; ஆட்டோ சங்கர், டாக்டர் பிரகாஷ் போன்ற கிரிமினல்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு அவர்களின் பேட்டிகளை ஜுனியர் விகடன் எழுதலாம்; சந்தனக் கடத்தல் வீரப்பனுடன் நக்கீரன் கோபால் தொடர்பு வைத்திருந்தால், பேட்டிகள் எழுதினால் கிரிமினல் குற்றமாகி விடும்! புலனாய்வு இதழியல், இதழியல் செயல்வீரம் என்று கூறிக் கொண்டு வடநாட்டு - ஆங்கிலப் பத்திரிக்கையாளர்கள் சம்பல் கொள்ளையர்கள் சரணடைவுக்கும், ''விபச்சாரிகள்'' மீட்புக்கும் செயல்படலாம்! நக்கீரன் கோபால் செயல்பட்டால் கிரிமினல் குற்றமாகிவிடும்! இதுதான் பார்ப்பன - மேல்சாதி, மேட்டுக்குடியின் தரப்பிரிப்பு அணுகுமுறை. இத்தகைய தரப்பிரிப்பின் அடிப்படையில்தான் பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது அல்லது பராமரிக்கப்படுகிறது.

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், ஜனநாயகக் கடமைகளை ஆற்றும் வகையிலும் பத்திரிக்கைகள் செயல்பட்டிருக்குமானால் இந்த அளவுக்கு சாதி - மதவெறிச் சக்திகள் வளர்ந்து படுகொலைகள் புரியவும், அவை தண்டிக்கப்படாமல் தப்பவும் முடியுமா?

இந்த அளவு மணற்கொள்ளை, காடுகள் கொள்ளை, கல்குவாரிகள் கொள்ளை, கள்ளச் சாராயப் பெருக்கு போன்ற சமூக விரோத நடவடிக்கைகள் வளர்ந்திருக்க முடியுமா?

சமூக விரோத கிரிமினல் - போலீசு கிரிமினல் - அரசியல் கிரிமினல் கூட்டணி வலுவாக உருவாகி, நிலை பெற்றிருக்க முடியுமா?

இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகள், உல்லாச - ஊதாரி வாழ்வில் மூழ்கித் திளைக்கும் ஜெயா - சசி கும்பல் போன்றவை மீண்டும் ஆட்சிக்கு வரமுடியுமா?

பத்திரிக்கைகள் தமது இந்தக் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றாமல் இருக்கும் வரை, சுய இலாபம் கருதித் தன் தொழிலையும் இலாபத்தையும் பெருக்கிக் கொள்வதில் முனைப்புக் காட்டும்வரை அவற்றின் சுதந்திரம் பாதுகாக்கப்படும். அதேபோலத்தான் பத்திரிக்கை நிருபர்களின் சுதந்திரமும்.

இவர்களின் அன்றாடப் பணிகள் என்ன? காலையில் போலீசு நிலையங்கள், அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்களுக்குப் போய் அறிக்கைகள் சேகரிப்பது, பிற்பகலிலும் இரவிலும் கூடி அரட்டை அடித்துக் கிசுகிசுக்களைப் பரிமாறிக் கொள்வது, மாலையில் அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், சினிமாக்காரர்களின் அழைப்பை ஏற்று அரைக்கிலோ இனிப்பும் ஒரு கிலோ காரமும், 500 அல்லது 1000 ரூபாய் ''கவரும்'' பெற்றுக் கொண்டு அவர்கள் வாந்தி எடுத்ததை வைத்துக் கொண்டு பொய் - புளுகுகளை எழுதி ஆசிரியர்களுக்கு அனுப்புவதுதான் பத்திரிக்கையாளர்களின் வழக்கமான வேலையாக உள்ளது. இந்த வழக்கத்திற்குள் நிற்கும் பத்திரிக்கையாளர்களின் சுதந்திரம் பறிக்கப்படுவதில்லை. இதை மீறி ''எதையாவது வித்தியாச''மாகச் சாதிக்க வேண்டும் என்று கிளம்பும் பத்திரிக்கையாளர்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது.

''வித்தியாசமாகச் சாதிப்பது'', அதன்மூலம் தொழிலில் முன்னேறுவது என்கிற சுயநல நோக்குதான் இவர்களிடமும் மேலோங்கி நிற்கிறது. ஜனநாயகம், மனித உரிமைகளுக்காகவும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பத்திரிக்கைப் பணியாற்றுவது என்பது கிடையாது. இந்த நோக்கில் செயல்பட்டுச் செய்திகளைத் திரட்டி, பத்திரிக்கை நிர்வாகத்தின் முன்பு போராடும் பத்திரிக்கையாளர்கள் எவரையாவது கண்டதுண்டா? வேலையைக் காப்பாற்றிக் கொள்வது என்கிற இலட்சியத்துக்கு மேல் இவர்களிடமும் எந்த நோக்கமும் கிடையாது.

❑ ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# நசீம் இக்மத்:

# துருக்கியிலிருந்து ஒரு மக்கள் கலைஞன்

— குப்பண்ணன்



இசையின் சர்வதேசப் பெயர் பால்ராப்சன் என்றால், கவிதைப் போரா ளியின் சர்வதேசப் பெயர் நசீம் என்று சொல்லலாம்.

ஓட்டோமான் பேரரசுச் சர்வாதிகா ரத்தின்கீழ் 1902-இல் துருக்கியில் பிறந் தவர் நசீம். தந்தை அரசு அதிகாரி; தாய் போலிஷ் இனத்தைச் சேர்ந்த ஓவியர். பிரெஞ்சுப் பள்ளியில் படிப்பு; கடற் படைப் பள்ளியில் மேற்படிப்பு; முதல் உலகப் போரின் கடைசிக் கட்டம் அரங் கேறிய போது நசிம் இஸ்தான்புல்லில் இருந்தார். நேசநாட்டுப் படைகள் ஓட்டோமான் பேரரசின் மீத மிச்சங் களைப் பங்குபோடத் தீவிரமாக இறங் கியிருந்தன. ஆக்கிரமிப்புப் படைகள் தலைநகரை நோக்கி நகர்ந்த சமயம் அங்காரா என்ற நகரில் துருக்கி தேசத்தின் மாற்று அரசை அறிவித்தார் ஓர் வீரர். அவர்தான் முஸ்தபா கெமால். மாபெரும் கலிபோலிச் சண்டையின் கதாநாயகன் என்றறியப்பட்ட கெமால் தேசியப் பாதுகாப்புப் படையை வேக மாகக் கட்டி எழுப்பினார். 'நாடு அழைத் தது நான் சென்றேன்' என்று நினைத்த வேகத்தில் தனது நண்பரோடு சேர்ந்து கொண்டு பாதுகாப்புப் படையில் சேர்ந்து விட முடிவெடுத்தார் நசீம்.

அந்த நாட்களில் கெமால் படையில் போய்ச் சேருவது எளிதான செயலு மல்ல. ரயில் பாதைகளை ஆக்கிர மிப்புப் படைகள் கைப்பற்றி விட்டதால், ஆறுகள் மூலமாகவும், கொடிய மலைக் கணவாய்கள் வழி யாகப் பல நாட்கள் கடுமையாக நடந்தும் அங்காரா போகவேணடும். வழியில் இவர்களைப் போலவே 'ஸ்பார்டகஸ்' பெயரைத் தங்களுக்குச் சூட்டிக் கொண்ட ஒரு குழுவைச் சந்தித் தார்கள். அவர்கள்தான் நசீமுக்கு மார்க்சையும், லெனினையும் அவர் களின் புரட்சிச் சித்தாந்தங்களையும் அறிமுகம் செய்தார்கள். பலநாள் சோறு இல்லாமல், நல்ல தண்ணீர் இல்லாமல் அலைந்து நடந்து போரினால் சிதைக் கப்பட்ட பல கிராமங்களின் வழியாக நசீம் பயணம் சென்றார். அந்த நிலை மையிலும் விவசாயிகள், ஏழை பாழைகள் லட்சியப் பயணிகளுக்குச் சோறு போட்டார்கள்; வழி சொல்லிக் கொடுத்தார்கள்.

அங்காராவில் இவர்கள் கெமாலைச் சந்தித்தார்கள். இவரும் நண்பரும் கவிஞர்கள் என்று கேள்விப் பட்டதும் 'லட்சியத்துக்கான கவிதை களை எழுதுங்கள்' என்று சொன்ன தோடு கெமால் அவர்களைக் கல்விப் பணிக்குச் செல்லும்படி கேட்டுக் கொண்டார். அந்த நாட்களில் கல்வித் துறை எதிரிகளைச் சந்திக்கும் மற்றொரு போர் முனையாக இருந்தது. இவர்க ளுக்கு போலு என்ற சிறு நகரத்தில் ஆசி ரியர் வேலை பணிக்கப்பட்டது. போர்முனைக்குச் செல்ல விரும்பிய நசீ முக்கும் நண்பர்களுக்கும் மிகவும் குறை வான கல்விப்பணியும், அதுவும் பய னற்றுப் போவதைப் பார்த்தும் மிக விரைவிலேயே சலிப்புற்றனர்; எல்லைக் கோட்டைக் கடந்து ரசியா வுக்குச் சென்றனர்.

சோவியத்தில் கீழை நாடுகளின் தொழிலாளர்களுக்கான கம்யூனிஸ்டுப் பல்கலைக் கழகத்தில் சிலகாலம் கல்வி கற்ற நசீமும் நண்பர்களும் மாய கோவ்ஸ்கி கவிதை வட்டத்திலும், மாஸ்கோ நாடக மன்றத்திலும் பணி செய்ய ஆரம்பித்தனர். ரசியத் தங்கல் நீண்டகாலம் நீடிக்கவில்லை. துருக் கியில், கெமால் விடுதலைப் போருக் குப்பின் குடியரசை வெற்றிகரமாக நிறு

**குதிரை வீரனின் பாடல்**

எங்கோ
ஆசியாவிலிருந்து துள்ளி ஓடிவந்து
மத்தியத் தரைக்கடலுக்குள்
எட்டிப் பார்க்கும்
பெண் குதிரைத் தலைபோல
இந்நாடு - எம்முடையது.
மணிக்கட்டில் ரத்தம் கொப்பளிக்க
இறுகிய தாடை, அழுந்திய பற்கள்
புழுதிபடிந்த வெறுங்கால்கள்
கீழே நிலம்
பட்டு விரிப்புப் போல
இந்த நரகம், இந்தச் சொர்க்கம் -
எம்முடையது.
அந்நிய நாடுகளைச்
சார்ந்திருக்கும்
வாயிற் கதவுகளை இழுத்து மூடு -
அவை
என்றும் திறவுபடக் கூடாது
ஒரு மனிதனுக்கு இன்னொருத்தன்
அடிமையில்லை, இல்லை,
ஓங்கி எழும் அழைப்பு -
எம்முடையது.

ஒற்றை மரமாய் விண்ணில் சிறகு விரி!
காட்டுமரங்களாய்
ஒற்றுமைத் திரட்சி கொள்!
ஏக்கம் - அந்த ஏக்கம் - எம்முடையது.

www.padippakam.com

**நசிமின் கவிதை இயங்கியல் இதுதான். சிறைக்குள் பனிரெண்டு ஆண்டுகள் கும்மிருட்டில் தனிச்சி றையில் தள்ளப்பட்டு உடல் வதைப்பட்டு இருந்தபோதிலும், அவரது உள்ளமோ, சீன மஞ்சள் நதி ஆறு கடந்து செம்படை செம்மாந்து நடப்பதைக் காட்சியாகச் சித்தரித்துக் கவிதை பல எழுதியது.**

வினார்; நசீமும் நாடு திரும்பினார்.

திரும்பியவர், கம்யூனிசப் பத்திரிக்கை ஒன்றை அமைத்து வளர்ப்பதில் தீவிரமாக வேலை செய்தார்; அதே காரணத்தாலேயே கைது செய்யப்பட்டுச் சிறைக்கும் சென்றார். ஒரு சந்தர்ப்பத்தில் சிறையை உடைத்து வெளியேறியவர்களோடு நசீம் மறுபடி ரசியா பயணமானார். எதிர்காலச் சமுதாயக் கனவு அவரை மறுபடி சோவியத் ரசியாவை நோக்கி இழுத்தது. மீண்டும் நாடகம், மீண்டும் கவிதை. 1928 துருக்கியில் பொதுமன்னிப்பு அறிவிப்பு வந்தவுடன் மீண்டும் துருக்கி வந்த நசீம் முற்போக்கு முகாமில் 10 ஆண்டுகள் சுறுசுறுப்பாக இயங்கினார்; பிழைதிருத்துபவராக, பத்திரிக்கையாளராக, வசன கர்த்தாவாக, மொழிபெயர்ப்பாளராகப் பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போதே ஐந்து கவிதை நூல்களை வெளியிட்டார்.

1938-இல் ஐரோப்பா முழுவதும் பாசிசப் பேய் உலுக்கியது; இராணுவத்திற்குள் கலகத்தைத் தூண்டினார் என்று சொல்லி 28 ஆண்டு தண்டனை விதித்து, நசீமைச் சிறையில் தள்ளியது அரசு. அவர் எழுதிய ''ஷேக் பெத்ருதீன்'' கவிதைக் காப்பியத்தை இராணுவச் சிப்பாய்கள் சேர்ந்து படிக்கத் தொடங்கி விட்டார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு.

ஷேக் பெத்ருதீன் 14-ஆம் நூற்றாண்டு விவசாயப் போராளி; ஓட்டோமான் பேரரசுக்கு எதிராக கிறித்தவர்கள், முசுலீம்கள், யூதர்கள் எல்லோரையும் ஒன்றாக இணைத்துப் படை திரட்டிப் போராடிய மாவீரன். அரசுக்கெதிரான போரைப் பற்றி எளிய நடையில் ஒரு நாடோடிக் கதைபோல அக்காப்பியம் எழுதப்பட்டிருந்ததால் சிப்பாய்களிடம் பிரபலமாகி விட்டது.

1950 வாக்கில் உலகெங்கும் நசீமை விடுவிக்கக் கோரும் பேரியக்கம் கிளம்பியது. அமெரிக்காவின் பால்ராப்சன், சிலியின் பாப்லோ நெருடா, சீனாவின் டிங்லிங், ஜெர்மனி ஓவியர் கதே கோல்விட்ஸ் இதில் முக்கியப் பங்காற்றினார்கள். 12 ஆண்டுகள் சிறைக்குள் வதைபட்ட நசீம் விடுவிக்கப்பட்டார்; ஆனால் அவர் சிறையை விட்டு வெளியே வந்த காலகட்டத்தில், துருக்கி, நேட்டோவில் புதிதாக இணைந்த நேரம், நேட்டோவுக்காக கொரியப் போரில் பங்கேற்றது. நசீமைப் பழி தீர்த்துக் கொள்ள நேரம் பார்த்த துருக்கி அரசு கொரியப் போருக்குப் போகச் சொல்லி நசீமை மிரட்டியது. மீண்டும் நசீம் உலகின் ஒரு புரட்சி மையமான சோவியத்துக்குத் தலைமறைவாகச் சென்றார், மனைவி மற்றும் அப்போதுதான் பிறந்திருந்த மகன் இருவரையும் துருக்கிலேயே விட்டுவிட்டு.

இப்போது மீண்டும் அரசியல் தலைமறைவு வாழ்க்கையைத் தொடங்கினார் நசீம். பால்ராப்சனின் குரலில் நசீமின் பாடல்கள் உலகெங்கும் போர் முழக்கம் செய்தன.

திரிபுவாதிகளின் கூடாரமாகக் குழம்பி நின்ற துருக்கி கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினராக இருந்தவர்தான் நசீம். ஆனால் அவரது கட்சியின் தவறான வழியை விமரிசிக்கத் தவறவில்லை. ரசியா சென்று தங்கிய பிறகு, அங்கிருந்த (ஸ்டாலினுக்குப் பிறகான காலகட்டம்) திரிபுவாதத்தை எள்ளி நகையாடி நாடகம் எழுதினார்; நாடகம் தடை செய்யப்பட்டது.

இனியும் ரசியாவில் இருக்க இயலாது என்ற நிலைமையில்தான் போலந்து நாட்டில் அரசியல் தஞ்சம் பெற முயற்சி செய்தார். அந்த நாட்களில் துருக்கித் தாய்நாடும் இல்லாமல், மனைவி - மக்களை விட்டுப் பிரிந்தும், சோவியத் பிரச்சனைகளால் மனம் துன்புற்றும், அல்லல்பட்ட நசீம் 1963-இல் மாரடைப்பால் சோவியத்தில் மரணமடைந்தார்.

நசீமுக்குச் சென்ற ஆண்டு நூற்றாண்டு; அவர் பிறந்து 100 ஆண்டுகளாகி விட்டன. இன்று அமெரிக்க உலக மேலாதிக்க வெறி - உலகெங்கும் ஆக்கிரமிப்புப் போர்வெறியோடு வேட்டை நாயாக அலைகின்றது; உலகெங்கும் அதற்கெதிரான சர்வதேச உணர்வு கொண்ட தொழிலாளர்கள், அரசியல் போராளிகள் போராடத் தொடங்கிவிட்டார்கள். ஈராக் ஆக்கிர

**இதய வேதனை**

*(சிறை மருத்துவரை நோக்கிப் பாடுவதுபோல இக்கவிதையை எழுதினார் நசீம்)*

அருமை நண்பரே,
என் இதயத்தின் ஒரு பாதி
இங்கேயிருக்கிறது;
மறுபாதி சீனாவில்
மஞ்சள் நதிநோக்கி
அலை அலையாய் நடக்கும்
செம்படையில் இருக்கிறது.

நண்பரே,
ஒவ்வொரு நாளும்
விடியலின் கருக்கில்
என் இதயம் கிரீஸில்
சர்வாதிகாரத் துப்பாக்கிப்
படையின்முன்
சுட்டு வீழ்த்தப்படுகிறது.
என் சக கைதிகள் உறங்கிக்
கிடக்கிறார்கள்;
மருத்துவமனை
வெறிச்சோடியிருக்கிறது;
என் இதயமோ-
ஒவ்வோர் இரவும்
சிதைந்து அழியும்
[1]சாம்லிஜாவில் தங்கியிருக்கிறது.

நண்பரே,
உள்ளதைச் சொல்கிறேனே-
கடந்த பத்து ஆண்டுகளாக
எனது ஏழை நாட்டுக்கு
என்னால் கொடுக்க முடிந்த
***காணிக்கை***
ஒரே ஒரு ஆப்பிள் மட்டுமே -
நண்பரே
சிவந்த ஆப்பிள்
அதை நான்
இதயம் என்றழைக்கிறேன்.

ரத்தக் குழாய்த் தடிப்பு அல்ல;
[2]நிகோடினும் காரணம் அல்ல;
சிறைத்தனிமையும் அல்ல;
***அது*** மட்டுமே - அது மட்டுமே
நண்பரே
என் இதய வேதனைக்குக் காரணம்.

சிறைக் கம்பிகளில்
முகம் பதித்து உடல் அழுந்த
இரவை ஊன்றிப் பார்ப்பேன்
நெஞ்செலும்பு - அதிக
அழுத்தம் தாங்கிய போதும்
என் இதயம் துடிதுடிக்கும்
நெடுந்தொலைவு
நட்சத்திரங்களைப் போலவே.

[1] துருக்கிக் கிராமம்
[2] புகை அதிகம் பிடிப்பதனால் உடலில் சேரக் கூடிய நிகோடின் விஷம்.

❑

www.padippakam.com

**''என்று கவிதை எழுதத் தொடங்கினேனோ அன்றிலிருந்தே - கலை, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும், அது நல்ல எதிர்காலம் படைக்க அவர்களை அறைகூவி அழைக்கவேண்டும் என்றே விரும்பினேன்; கலையை மக்களின் துன்பதுயரம், அவர்களின் கோபம், நம்பிக்கை, மகிழ்ச்சி, வேதனைகள் எல்லா வற்றையும் வெளிப்படுத்தும் - கருவியாக்கிவிடவேண்டும்''**

மிப்பு எதிர்ப்பு ஓர் எடுத்துக்காட்டு. இன்றைய கட்டம் சர்வதேசக் கம்யூனிச மையம், அரசுகள் இல்லாத நிலைமை; நசீமை நினைவுகூர்ந்து அந்த லட்சியங்கள் நோக்கிய நம் பணிகளை விரைந்து வேகப்படுத்த வேண்டிய கட்டம்; காட்வெல், பால்ராப்சன் போல நசீமின் சர்வதேசியம், கம்யூனிசச் சர்வதேசியம் மற்றும் அவரது நினைவுகள் இதைத் தூண்டிவிட வேண்டும்; தூண்டி விடும். கீழே அவரது சில கவிதைகளையும், கவிதைச் சிந்தனைகளையும் கொடுத்திருக்கிறோம்.

''என்னைப் பற்றிப் பேசும் கவிதைகளை எழுத விரும்புகிறேன்: எதிரே உள்ள ஒற்றை நபர் மற்றும் எதிரே உள்ள பல லட்சம் மக்களிடம் பேசுவது போன்ற கவிதைகளை எழுத விரும்புகிறேன்: ஓர் ஆப்பிளைப் பற்றி, உழுது புரட்டப்பட்ட மண்ணைப் பற்றி, இருட்டுச் சிறைக்குள் சித்திரவதைப் படுத்தப்பட்டுத் திரும்பிவரும் மனிதனின் மன இயல்பு பற்றி, நல்லதொரு வாழ்க்கைக்காக மக்கள் போராடுவது பற்றி, காதலின் துன்பங்கள் பற்றி - இவை எல்லாம் பற்றி கவிதை எழுத விரும்புகிறேன். சாவைப் பற்றிய பயம் பற்றியும், சாவைக் கண்டு அஞ்சாமல் நேருக்கு நேர் நிற்பது பற்றியும் கவிதை எழுத விரும்புகிறேன்'' என்று சொன்னார் நசீம்.

— நசீமின் கவிதை இயங்கியல் இதுதான். சிறைக்குள் பனிரெண்டு ஆண்டுகள் கும்மிருட்டில் தனிச்சிறையில் தள்ளப்பட்டு உடல் வதைப்பட்டு இருந்தபோதிலும், அவரது உள்ளமோ, சீன மஞ்சள் நதி ஆறு கடந்து செம்படை செம்மாந்து நடப்பதைக் காட்சியாகச் சித்தரித்துக் கவிதை பல எழுதியது. உலக இலக்கிய, நாடக, சினிமா அனுபவத்தில் ஊறி எழுந்ததால் அவரது காப்பியங்கள் புதிய வடிவத்தை எட்டின என்பார்கள். அதில் நாடோடிக் கதை சொல்லி உண்டு; நாவல் உண்டு; சினிமா போல் அசைவுகள் உண்டு - மற்றப்படி அச்சு வடிவம் மட்டும் கவிதை போல் இருக்கும்; கட்டமைப்போ மேலே சொன்ன எல்லா விதங்களையும் கலந்திருக்கும்.

அந்த வடிவத்தை நசீம் 'மக்களைப் பற்றிய கலைக் களஞ்சியம்' என்றழைத்தார். அவர்கள் - தளபதிகளல்ல - சுல்தான்கள் - விஞ்ஞானிகள் - கலைஞர்கள் அல்ல, அழகுப் பேரரசிகள் அல்ல; கொலைகாரர்களோ, கோடீசுவரர்களோ அல்ல; அவர்கள் - தொழிலாளிகள், விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள்; இடம் பெற்ற விசயங்களோ - பட்டறைகள், கிராமங்கள், அண்டை - அசல் ஊர்கள். அந்தப் புது வடிவத்தை 'மனித நிலங்கள்' (Human Landscapes) என்று அழைத்தார்; தானும் தன் கலை போலவே கவிஞனல்லாத வேறு ஒரு ஜீவியாக உருமாறி விட்டதை வேடிக்கையாகச் சொல்வாராம்.

அந்த நாட்களில் அவர் செய்த மற்றொரு பணி: ''போரும் - அமைதியும்'' டால்ஸ்டாய் நாவலை துருக்கி மொழியில் மொழி பெயர்த்ததே.

அவரது பிரபலமான சொற்கள் இதோ: ''என்று கவிதை எழுதத் தொடங்கினேனோ அன்றிலிருந்தே - கலை, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும், அது நல்ல எதிர்காலம் படைக்க அவர்களை அறைகூவி அழைக்கவேண்டும் என்றே விரும்பினேன்; கலையை மக்களின் துன்பதுயரம், அவர்களின் கோபம், நம்பிக்கை, மகிழ்ச்சி, வேதனைகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தும் - கருவியாக்கிவிடவேண்டும். கலை பற்றி நான் அறிந்ததில் ***என்றும் மாறாத கொள்கை*** இது ஒன்றுதான். கலைபற்றிய பிற அம்சங்கள் (செய்முறைகள்) மாறிவிட்டன; மாறிக் கொண்டேயிருக்கின்றன; தொடர்ந்து மாறும். மாறாத ஒரே ***கொள்கையை*** அதன் அற்புத உணர்ச்சிப் பெருக்கோடு, திறமையான, பயனுள்ள, அழகு ஒளிரும் அச்சு அசலான வடிவத்தில் வெளிப்படுத்தவே நான் விரும்புகிறேன்.''

''மறுபடியும் சந்திப்போம் தோழர்களே
மறுமுறை நிச்சயம் சந்திப்போம்
ஒன்றாகச் சூரியனைப் பார்த்துப்
புன்னகைப்போம்
ஒன்றாகப் போர் புரிவோம்''

***- நசீம்***

## அந்தச் சுவர்

அந்தச்
சுவரோடு நிறுத்தி
அவர்கள்
நம் மக்களைச் சுட்டுக் கொன்றார்கள்
அந்தச் சுவர் நெடுகில்
ஒவ்வொரு அடிக்கல்லும்
காவியம் பல சொல்லும்

அந்தச் சுவர்
சுவரருகே கொல்லப்பட்டவரின்
ஆண் குறியை அறுத்துக்
குருதி நிணநீர் பிரித்து
மேகநோய் படர்ந்த
பண முதலைகளின்
வற்றிய எலும்புக் கூட்டுக்குக்
கொடுத்தார்கள்
- அவர்கள்
இளமை தொலையாதிருக்க.

விபச்சாரிகளின் சதைகளில்
புரண்டு கிடந்த
பண முதலைகளுக்கோ
கொலைச் செய்திகள்
இசை மழை போல இருந்தன

உலகெங்கும் அவர்கள் திரட்டிய
***போர்த்தளவாடங்கள்***
பலதரம் பலவிதம் பலரகம்
1914 ஐ விட 1939-ல்....
அதைவிடப் பின்னாளில்...
அதிநவீனம் அதிபயங்கரம்.
அவர்களின் ஆறாம் கடற்படை;
அணுக்கதிர் ஆயுதங்கள்
ஏகாதிபத்தியத் தளபதிகள்;
சி.ஐ.ஏ. உளவுப்படை;
இரண்டாம் அகிலம்;
வெடிமருந்தின் வாசம் தங்கிய
வெள்ளைக் கையுறைகளுடன்
அரசுத் தூதர்கள்;
'மதத்தின்'
ஆழ்மண் உழுது தோண்டி
உரமிட்டு - அதன்
நச்சு மலர் பறித்து
வங்கியின் பணக்கற்றைகளில்
படைப்பை எழுதும்
தத்துவ ஞானிகள்;

ஆய்வுகளில் மூழ்கி மீண்டு
சாக்கதிரின் கண் திறக்கும்
அறிவியல் வித்தகர்கள்
இவர்கள் அத்தனைப் பேரும்தான்
அவர்கள் உலகெங்கும் குவித்த
***போர்த்தளவாடங்கள்.***

அந்தச் சுவரே
பதாகையாய் -
நெடிய
நீண்ட
அந்தச் சுவர்

***ஏகாதிபத்தியச் சுவர்!***

www.padippakam.com

# குஜராத்: இந்துத்துவத்தின் சோதனைச் சாலை

6

○ மருதையன்

1986 பிப்ரவரி முதல் தேதியன்று பாபர் மசூதியை இந்துக்களின் வழிபாட்டுக்குத் திறந்துவிட்டதன் வாயிலாக, அடிக்கொள்ளியாக இருந்து அயோத்திப் பிரச்சினையை காங்கிரசு பற்ற வைத்தது என்று இத்தொடரினை ஏற்கெனவே முடித்திருந்தோம். இந்து ஓட்டுக்களைக் குறிவைத்துத்தான் அயோத்தி எனும் இந்தத் துருப்புச் சீட்டை இறக்கியதாக அன்றைய காங்கிரசு அமைச்சரும் ராஜீவின் உறவினருமான அருண்நேரு வெளிப்படையாகவே பின்னாளில் கூறியதையும் மேற்கோள் காட்டியிருந்தோம்.

அவசர நிலைப் பாசிசத்தின் மூலம் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு ஜனநாயக ஒளிவட்டத்தையும், நாடு தழுவிய அரசியல் அங்கீகாரத்தையும் உருவாக்கித் தந்தார் 'அன்னை' இந்திரா. மகனோ, அயோத்திப் பிரச்சினைக்கு அடியெடுத்துக் கொடுத்ததன் மூலம் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு ஒரு வலிமையான பாசிச அரசியல் ஆயுதத்தை வழங்கினார்.

1984 தேர்தலில் மதச்சார்பின்மை பேசிய பாரதீய ஜனதாக் கட்சி, அயோத்திப் பிரச்சினையைக் கையில் கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு உடனே களத்தில் குதித்துவிடவில்லை. அயோத்தி விவகாரத்தை மையமாக வைத்து ஓர் அரசியல் இயக்கத்தை உருவாக்குவதற்கான ஆரம்பக் கட்ட பணிகளை விசுவ இந்து பரிசத்திடம் ஒப்படைத்திருந்தது ஆர்.எஸ்.எஸ்.

1989 பிப்ரவரியில் நடைபெற்ற விசுவ இந்து பரிசத்தின் கூட்டத்தில்தான் (காஞ்சி ஜெயேந்திரரும் கலந்து கொண்ட கூட்டம்) செங்கல் ஊர்வலத்துக்கான திட்டம் அறிவிக்கப்பட்டது. ஒரு செங்கல் 1.25 காசுகள் என்ற விலையில் லட்சக்கணக்கான 'இந்துக்களிடம்' நிதி வசூல் செய்யப்பட்டது. மசூதி இடிப்பு என்பதை முன்னிறுத்தாமல் ஏதோ கோயில் கட்டும் திருப்பணிக்கு வசூல் செய்வதைப் போன்ற வடிவத்தில் இந்தச் சதித்திட்டம் அரங்கேறியது.

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஊர்ப் பெரிய மனிதர், போலீசு அல்லது கிராம நிர்வாக அலுவலரை அழைத்து அவர்கள் கையால் செங்கற்களுக்குப் பொட்டு வைத்துப் பூசை போடச் செய்து தங்களது கொலைகாரத் திட்டத்துக்கு கட்சி, சாதி எல்லை கடந்த சமூக அங்கீகாரத்தை ஆர்.எஸ்.எஸ். தந்திரமாக அறுவடை செய்தது. அரசியல் ரீதியில் பின்தங்கிய மக்கட் பிரிவினர், பெண்கள், இசுலாமிய மக்களுடன் இயல்பான சமூக உறவுகளைப் பேணி வந்த ஒடுக்கப்பட்ட சாதியினர் ஆகியோரைத் தன்வயப்படுத்த ராமனைக் குழந்தை ராமனாகச் சித்தரிக்கும் படங்கள் மட்டுமே செங்கல் ஊர்வலத்தின்போது பயன்படுத்தப்பட்டன. ''ஆத்திரம் கொண்ட, புஜபல பராக்கிரமனான வில்லேந்திய 'ராம்'போ'' ராமனின் படிமத்தை ஆரம்பகட்ட பிரச்சாரத்தில் ஆர்.எஸ்.எஸ். பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


'இந்து ஒற்றுமை' என்ற அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே உருவாக்கப்பட்ட செங்கல் பூசை என்ற இந்த 'மதச்சடங்கு', முசுலீம்களுக்கெதிரான மதக்கலவரம் என்ற அரசியல் சடங்குடன் நிறைவு செய்யப்பட்டது. முசுலீம் மக்களைக் கொச்சைப்படுத்தி, இழிவுபடுத்தி ஆத்திரம் கொள்ளச் செய்வதற்காகவே தயாரிக்கப்பட்ட கோஷங்கள் இந்த அரசியல் சடங்கின் மந்திரங்களாயின. செங்கல் பூசைக் கலவரங்களில் குஜராத் முக்கிய இடம் வகித்தது என்பதைக் கூறத் தேவையில்லை.

இந்தச் செங்கல் ஊர்வலக் கலவரங்கள் வட இந்தியாவெங்கும் காட்டுத் தீயாய்ப் பரவிக் கொண்டிருந்த சூழலில்தான் 1989 பொதுத் தேர்தல் வந்தது. அப்போது வெளியிடப்பட்ட பாரதீய ஜனதாவின் தேர்தல் அறிக்கையில் அயோத்திப் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தைக் கூடக் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் 'இந்து' துருப்புச் சீட்டைப் பயன்படுத்திய ராஜீவ் காந்தியோ தன் தேர்தல் பிரச்சாரத்தை அயோத்தியிலிருந்து துவங்கினார். ராமன் பிறந்த புனித மண்ணிலிருந்து தன்னுடைய பிரச்சாரத்தைத் துவக்குவதாக அறிவிக்கவும் செய்தார். செங்கல் ஊர்வலத்தில் கொண்டு வரப்பட்ட கற்களைக் கொண்டு பாபர் மசூதி வளாகத்தில் அடிக்கல் நாட்டும் பூசையை நடத்துவதற்கும் விசுவ இந்து பரிசத்தை உ.பி. காங்கிரசு அரசு அனுமதித்தது.

ராஜீவுக்கு எதிராக போபர்ஸ் ஊழலை முன்வைத்து பாரதீய ஜனதா மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளுடன் தேர்தல் கூட்டணி அமைத்திருந்த வி.பி. சிங்கோ அயோத்தி பிரச்சினை குறித்து ஒரு வாக்குறுதி தருமாறு பாரதீய ஜனதாவிடம் மன்றாடினார். ''எந்த விதமான வாக்குறுதியும் தர முடியாது'' என்று

300 இடங்களில் முசுலீம்களுக்கெதிராக கலவரத்தை நடத்திய அத்வானியின் ரதயாத்திரை.



www.padippakam.com

பா.ஜ.க. மறுத்தது. எனவே ''பாரதீய ஜனதாவுடன் ஒரே மேடையில் தோன்றி பிரச்சாரம் செய்வதில்லை'' என்று முடிவு செய்தார் வி.பி.சிங். ஊழலுக்கெதிராக இந்து மதவெறியுடன் கூட்டணி அமைத்த வி.பி.சிங்கும் போலிக் கம்யூனிஸ்டுகளும் பாரதீய ஜனதாவுடன் ஒரே மேடையில் தோன்றுவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு எடுத்த இந்தக் 'கொள்கைபூர்வமான' முடிவு ஓட்டுக் கட்சி அரசியலில் ஒரு கேலிக்குரிய முன்மாதிரி. சென்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் இந்துமதவெறிக்கு எதிராக ஊழல் நாயகியுடன் கூட்டணி அமைத்த மார்க்சிஸ்டுகளும் ''ஒரே மேடையில் தோன்றுவதில்லை'' என்ற தந்திரத்தின் மூலம்தான் தங்கள் முகத்தை மறைத்துக் கொண்டனர்.

ஊழல் எதிர்ப்பு 'இந்து வாக்குகளை' அள்ளுவதற்காக பாரதீய ஜனதாவுடன் சேர்ந்தார் வி.பி.சிங்.; முசுலீம் எதிர்ப்பு 'இந்து வாக்குகளை'க் கொள்ளையடித்து விடலாம் என்ற திட்டத்தில் விசுவ இந்து பரிசத்தை தாஜா செய்தார் ராஜீவ். ''இந்து மதவெறி எதிர்ப்பு - மதச்சார்பின்மை'' என்ற அரசியல் மக்கள் மத்தியில் இவ்வாறு கொச்சைப்படுத்தப்பட்டது. வலதுசாரிகள், இடதுசாரிகள் ஆகிய இரு தரப்பினரின் ஆதரவையும் ஒருங்கே பெற்ற 'நல்லொழுக்க சீலர்' வி.பி.சிங் ஆட்சிக்கு வந்தார்.

இதே காலகட்டத்தில் 1990-இல் நடந்த குஜராத் சட்டமன்றத் தேர்தலிலும் காங்கிரசுக்கெதிராக ஜனதாதளம் - பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்றது. 1974 நவநிர்மாண இயக்கத்தின் தாக்குதல் இலக்காக இருந்த அன்றைய காங்கிரசு முதல்வர் சிமன்பாய் படேல், ஜனதா தளம் - பா.ஜ.க. கூட்டணியின் சார்பில் முதல்வரானார்.

1985-இல் இட ஒதுக்கீட்டுக்கு எதிரான பார்ப்பன, பனியா, படேல் சாதியினரின் கலகத்தை முசுலீம் எதிர்ப்பு மதக் கலவரமாக மாற்றிய பாரதீய ஜனதா, அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் பல்வேறு மக்கள் பிரச்சினைகளுக்கும் போராடும் கட்சியாகத் தன்னைச் சித்தரித்துக் கொண்டது. தலித் மக்கள் மீதான ஒடுக்குமுறையைக் கண்டித்து நீதி யாத்திரை, நர்மதை அணை ஆதரவுப் போராட்டம், விவசாயிகள் பிரச்சினைகளுக்கான போராட்டங்கள், ஆலைகளில் பாரதீய மஸ்தூர் சங்கத்தை நிறுவுவது - போன்ற நடவடிக்கைகளுடன் அயோத்தி கோயிலுக்கான கோரிக்கையையும் சேர்த்துக் கொண்டது. குஜராத் மாநிலத் தேர்தலிலும் 'ஊழல் காங்கிரசை ஒழிப்பது' என்பதுதான் பா.ஜ.க.வின் முதன்மை முழக்கமாக இருந்தது; அயோத்தியல்ல.

**ரதயாத்திரையைத் தொடர்ந்து தன் ஆட்சியைப் பறி கொடுத்த சமூக நீதிக் காவலர், ஆர்.எஸ்.எஸ்.க்கும் பார்ப்பனச் சாதிவெறிக்கும் எதிராக மக்களைத் திரட்டும் யாத்திரையைத் தொடங்காததேன் என்ற கேள்விக்குத்தான் நமக்கு விடை வேண்டும்.**

***

அயோத்திப் பிரச்சினையை அதன் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லக் காத்திருந்தது பாரதீய ஜனதா. மண்டல் குழுப் பரிந்துரையை அமல்படுத்தும் வி.பி.சிங்கின் அறிவிப்பு 1990, ஆகஸ்டு 7-ம் தேதி வெளியிடப்பட்டது. ஜனதா தளத்தின் தலைமையைக் கைப்பற்றும் நோக்கத்தில் ஜாட் சாதி விவசாயிகளையும், பிற பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த விவசாயிகளையும் தன் பின்னே திரட்ட முயன்ற தேவிலாலின் நடவடிக்கை, ஆயிரக்கணக்கான சாமியார்கள் அடுத்த மாதம் முதல் அயோத்தியை நோக்கிச் செல்லவிருக்கிறார்கள் என்று ஆகஸ்டு 2-ம் தேதி விசுவ இந்து பரிசத் வெளியிட்ட அறிவிப்பு ஆகியவை வி.பி.சிங்கின் இந்தத் திடீர் அறிவிப்புக்கு வழிகோலின.

1980 மற்றும் 1985-இல் இடஒதுக்கீட்டுக்கு எதிராக எத்தகைய கலவரங்களை குஜராத் சந்தித்ததோ அதே தன்மையிலான எதிர்ப்பை மண்டல் எதிர்ப்பு - ஆதிக்க சாதி வெறியர்கள் நாடு முழுவதும் வெளிப்படுத்தினர். ''சக்கிலியனுக்கு டாக்டர் படிப்பெதற்கு?'' என்று பார்ப்பன, பனியா, படேல் சாதி வெறியர்கள் 1980-இல் குஜராத்தில் கேட்ட கேள்வியையே, ''செருப்பு துடைக்கும் போராட்டம், தெருக்கூட்டும் போராட்டம்'' ஆகியவற்றின் மூலம் அடக்க முடியாத வெறியுடன் மீண்டும் எழுப்பினர்.

''சமூக அமைப்பின் மீது இந்த இட ஒதுக்கீட்டு அரசியல் நிகழ்த்தும் பேரழிவு கற்பனைக்கெட்டாதது. இது திறமையின்மைக்கு வெகுமதி அளிக்கிறது; அறிவாளிகளை நாட்டை விட்டுத் துரத்துகிறது; சாதிப் பகைமையைக் கூர்மையாக்குகிறது'' என்று தனது பார்ப்பனச் சாதிவெறியை வெளிப்படையாக அறிவித்தது ஆர்.எஸ்.எஸ்.-இன் அதிகாரபூர்வ பத்திரிக்கையான ஆர்கனைசர் (26.8.90).

''ஏன் இந்த அரசாங்கத்தை ஆதரிக்கிறீர்கள். ஆதரவை வாபஸ் வாங்குங்கள் என்று பெற்றோர்கள் பலர் அன்றாடம் என்னைக் கேட்கிறார்கள். ஆனால் மண்டல் பிரச்சினையையொட்டி ஆதரவை வாபஸ் வாங்கினால் அதைக் காட்டியே இந்த அரசு பெரிய அளவு ஆதாயமடைந்து விடும். பொருத்தமான நேரத்தில் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்'' என்றார் அத்வானி (இந்துஸ்தான் டைம்ஸ், 21.9.90).

ஆனால் சால்ஜாப்புகளையோ தாமதத்தையோ சகித்துக் கொள்ள 'மேல்சாதி' வெறியர்கள் தயாராக இல்லை. டெல்லியில் நடந்த மண்டல் எதிர்ப்புத் தீக்குளிப்பு நாடகத்தில் காயமடைந்த ராஜீவ் கோஸ்வாமியைப் பார்க்க மருத்துவமனைக்குச் சென்ற அத்வானியும் மதன்லால் குரானாவும் அங்கேயே தாக்கப்பட்டனர்.

1985-இல் இட ஒதுக்கீட்டுக்கெதிரான பார்ப்பனச் சாதிவெறியை, குஜராத் முசுலீம்களுக்கெதிரான இந்து மதவெறியாக மாற்றிக் காட்டிய மோடியின் ரசவாத வித்தை ரதயாத்திரை எனும் பெயரில் அங்கிருந்தே தொடங்கியது. அரசாங்கப் புள்ளி விவரங்களின்படியே ரத யாத்திரையின் பாதையில் 300 இடங்களில் முசுலீம்களுக்கெதிரான கலவரம் அரங்கேறியது. குஜராத்தில் மட்டும் 26 இடங்களில் கலவரம் நடத்தப்பட்டது. 100 பேர் கொல்லப்பட்டனர். முசுலீம்களின் ரத்தத்தில், குஜராத்தை அமிழ்த்திய இந்துவெறியர்கள், தங்கள் ரத்தத்தை ஜாடிகளில் நிரப்பி அத்வானிக்குப் பரிசளித்தனர்.

''ரத யாத்திரையும் அயோத்திப் பிரச்சினையும் நாடு தழுவிய அளவில் மிகக்குறுகிய காலத்தில் செல்வாக்குப் பெற்றதெப்படி?'' என்ற கேள்விக்கு விடைதேட முயலும் ஆய்வாளர்கள் அனைவருமே 1987, 88-ஆம் ஆண்டுகளில் ஒளிபரப்பப்பட்ட இராமாயண, மகாபாரதத் தொலைக்காட்சித் தொடர்களின் பங்கை வலியுறுத்துகின்றனர்.

பல்வேறு கடவுளர்கள், வழிபாட்டு முறைகள், சடங்குகள் என்று சாதி ரீதியாகவும், உட்சாதி ரீதியாகவும், வட்டார வழியிலும் பிரிந்திருந்த மக்களின் இறைஉணர்வை, பார்ப்பன மதம் சார்ந்த ஒருபடித்தான இந்து உணர்வாக



படிப்பகம்

www.padippakam.com

மாற்றுவதில் இத்தொடர்கள் வெற்றிய டைந்திருக்கின்றன. வாரந்தோறும் இராமன் எழுந்தருளும் கருவறையாகத் தொலைக்காட்சிப் பெட்டி மாறியிருந் தது. சாதி ஆதிக்கத்தை மறைத்தும், வேறுபாடுகளை மழுப்பியும் ஆர்.எஸ்.எஸ். உருவாக்க விரும்பிய இந்து ஒற்றுமைக்கான அடித்தளத்தை ராஜீவ் ஆட்சி வழங்கிய இராமாயணத் தொலைக்காட்சித் தொடர் ஏற்கெனவே உருவாக்கியிருந்தது.

''ஆர்.எஸ்.எஸ்.-இன் உண்மை யான புத்திசாலித்தனம் எதுவென்றால், துவக்க காலம் முதலே தொடர்ச்சியாக அது ராமன் என்ற பிம்பத்தை முன்நிறுத்தி, எல்லாவிதமான புராணப் புனைகதைகளும் ராமன் என்ற பிம்பத் திலே வந்து சங்கமிப்பதாகச் சித்தரித் ததுதான். எனவே ராமாயணமும் மகா பாரதமும் தொலைக்காட்சித் தொடர்க ளாக அடுத்தடுத்து வெளிவந்தவுடனே அவை ஒன்றையொன்று தொடரும் கதைகள் போன்றதொரு தோற்றத்தை உருவாக்கின. இந்தப் 'புனித' தேசத்தின் வீரம் செறிந்த கதைகள் அனைத்தின் மீதும் இராமன் என்ற பாத்திரம் படிந்தி ருந்தது. அத்வானியின் ரதயாத்திரை என்பது இந்தப் புராணங்களின் தொடர்ச்சி (மண்ணில் இறங்கியதைப்) போன்ற தோற்றத்தை உருவாக்கியது.''

''போரிடும் மன்னனாக ராமனின் பாத்திரத்தையும், சிவனின் திரிசூலத் தையும், தேரோட்டும் கிருஷ்ணனின் படிமத்தையும், மொத்தத்தில் இரண்டு காப்பியங்களின் குறியீடுகளையும் திரு டவும் திருத்தியமைத்துக் கொள்ளவும் அத்வானி சிறிதும் கூச்சப்படவில்லை.''

எது உண்மை - எது பொய் என்று பிரித்தறிய முடியாத வண்ணம் பாசிஸ் டுகள் நடத்திக் காட்டிய இந்தக் கண்கட்டு வித்தையின் சூட்சுமத்தை மேற்கண்டவாறு அம்பலப்படுத்து கிறார் பேராசிரியர் அஜாஸ் அகமது.

அத்வானியின் டொயோட்டோ ரதம் ரத்தச் சுவடுகளைத் தோற்றுவித்த படியே உருண்டு சென்றது. மகாராட்டி ரத்திலும் கர்நாடகத்திலும் இருந்த காங்கிரசு அரசுகள் ரதயாத்திரையைத் தடுக்கவில்லை. தான் உருவாக்க விரும் பிய இந்து அலையின்மீது அத்வானி சவாரி செய்து கொண்டிருப்பதைக் கண்டு வயிறெரிந்தாலும், அதை எதிர்த்து நீந்தும் 'முட்டாள்தனத்தை'ச் செய்ய ராஜீவ் தயாராக இல்லை.

'சமூக நீதிக் காவலர்', பதவியைக் காப்பாற்றிக் கொள்ள காஞ்சி சங்கராச் சாரியை அழைத்துச் சமரசம் பேசினார்.

**ஒவ்வொரு சமூகக் குழுவின் - அதாவது சாதி, இனம், வர்க்கங்களின் - முன்னணிப் பிரிவினர் எந்த அரசியல் திசைவழியைத் தெரிவு செய்கிறார்களோ அந்த வழியில்தான் சமூகம் கொண்டு செல்லப்படுகிறது.**

அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். பாரதீய ஜனதா அதைப் புறக்கணித்தது. ''கோயில் கட்டத் தடை விதித்தால் ஆட்சியைக் கவிழ்ப்போம்'' என்று பகிரங்கமாக மிரட்டினார் அத்வானி. மரணம் உறுதி செய்யப் பட்ட நிலையில் மதச்சார்பின்மையைக் கடைப்பிடிப்பதே விவேகம் என்று ணர்ந்த வி.பி.சிங் அத்வானியைக் கைது செய்ய உத்தரவிட்டார். அக்டோபர் 24-ம் தேதி பீகாரில் அத்வானி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தது பாரதீய ஜனதா.

***

''மண்டலை முறியடிக்க நாங்கள் கமண்டலத்தை ஏந்தினோம்'' என்று தங்களது செயல் தந்திரம் பற்றிப் பெரு மையாகக் குறிப்பிட்டார் வாஜ்பாயி. மண்டல் குழுப் பரிந்துரைகள் என்பவை இந்திய அரசியல் வரலாற் றையே புரட்டிப் போடும் ஆற்றல் கொண்ட ஆயுதங்கள் என்றும், பார்ப்ப னர்கள் மற்றும் ஆதிக்கச் சாதியினரின் சமூக, அரசியல் ஆதிக்கத்தை வேரோடு பிடுங்கும் வல்லமை பெற்றவை

**''மேல் சாதியினர்'' டெல்லியில் நடத்திய மண்டல் எதிர்ப்பு தீக்குளிப்பு நாடகம்.**



என்றும், நாட்டின் பெரும்பான்மை மக்களான பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப் பட்ட மக்களின் ஒற்றுமையைக் கட்ட வல்ல சூத்திரமென்றும், போகாத ஊருக்கு வழிதேடும் புரட்சியைக் காட்டிலும் 'இதோ இப்போதே கண்முன்னே' அரசியலதிகாரத்தைக் கனிந்து கையில் விழச் செய்யும் மந்திர மென்றும் வாதாடியவர்கள் வாஜ்பாயின் ஏளனம் தொனிக்கும் கூற்றுக்குப் பதிலளிக்க வேண்டும்.

''மண்டல் குழுப் பரிந்துரையை அமல்படுத்துவதாக அறிவித்தவுட னேயே வி.பி.சிங்கின் ஆட்சியை பார தீய ஜனதா கவிழ்த்துவிட்டது. 'மண்டல் குழுப் பரிந்துரையென்பது பார்ப்பன ஆதிக்கத்தின் உயிர்நாடியையே தாக்கும் வர்ம அடி' என்ற உண்மை இதி லிருந்தே புரியவில்லையா?'' என்று மடக்கி மண்டல் குழுவின் மகிமையைப் புரிய வைக்க முயன்றவர்கள் உண்டு.

ஆனால் நமக்குப் புரிய வேண்டிய உண்மை வேறு. ரதயாத்திரையைத் தொடர்ந்து தன் ஆட்சியைப் பறிகொ டுத்த சமூக நீதிக் காவலர், ஆர்.எஸ்.எஸ்.க்கும் பார்ப்பனச் சாதி வெறிக்கும் எதிராக மக்களைத் திரட்டும் யாத்திரையைத் தொடங்காததேன் என்ற கேள்விக்குத்தான் நமக்கு விடை வேண்டும்.

வி.பி.சிங் என்றவொரு அரசியல் கட்சித் தலைவரின் நேர்மை, துணிவு, அரசியல் சமயோசிதம் ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்வதல்ல இந்தக் கேள்வியின் நோக்கம். மண்டல் பரிந்துரையால் பயன்பெறக் கூடிய பெருந்திரளான மக்கட்பிரிவினர், கேவலம் ஒரு தொலைக்காட்சித் தொடர், சில சாமியார்கள் மற்றும் ஒரு அரசியல் சாகசக்காரனால் ஏமாற்றப் பட்டு விட்டார்களா என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கி றது.

''90களில் நடந்து முடிந்த பழங் கதை'' என்று இதைப் புறந்தள்ள முடி யாது. 70-களிலும் 80-களிலும் பார்ப்பன, பனியா, படேல் சாதி ஆதிக்க வாதிகளால் தோற்கடிக்கப்பட்ட ஒடுக் கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த குஜராத் மக்கள் சமீபத்தில் இனப்படுகொலை யின்போது ஆர்.எஸ்.எஸ்.ஸின் அடி யாட்படையாகப் பயன்பட்டிருக்கி றார்கள். ஏமாளிகள் கொலையாளிக ளாக மாற்றப்பட்டதெப்படி என்ப தற்கும் நமக்கு விடை வேண்டும்.

''இந்தியாவில் தேர்தல் மற்றும் பாராளுமன்ற ஜனநாயக முறை நிலவும்



படிப்பகம்

www.padippakam.com

இந்தச் சூழலில், தீவிர வலதுசாரிகளின் திட்டமும் தயாரிப்பும் நேருக்கு நேர் மோதி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற முறையில் இல்லை. கட்டுப்பாடு மிக்க ஒரு எதிர்ப்புரட்சிக் கும்பலின் தலைமையில், அடிமைத் தனமாகப் பின்தொடரும் அடிப்படை உழைக்கும் வர்க்கத்தைப் பரந்த அளவில் திரட்டி, கீழிருந்து ஒரு சூறாவளியைக் கிளப்பி அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் அவர்கள் திட்டமாக இருக்கிறது'' (அஜாஸ் அகமது)

இட ஒதுக்கீடாக இருக்கட்டும், பொதுத்துறையைத் தனியார்மயமாக்குவதாக இருக்கட்டும் இவையெதையும் ஆர்.எஸ்.எஸ். நேருக்கு நேர் எதிர் கொள்வதில்லை. பக்கவாட்டில் வந்து விலாப்புறத்தில் தாக்கித்தான் வீழ்த்தியிருக்கிறது; அல்லது, இத்தகைய அரசியல் சக்திகளை தனக்குள் நிறுவனமயமாக்கிச் சீரணித்திருக்கிறது.

பாரதீய ஜனதாவின் வெற்றிக்குக் காரணம் அதன் சொந்த வலிமை என்பதைக் காட்டிலும், அதனுடைய அரசியல் எதிரிகளின் (அதாவது சமரச சக்திகளின்) பலவீனம் என்பதையே கடந்த சில பத்தாண்டுகளின் வரலாறு காட்டுகிறது.

தேர்தல் அரசியலின் தவிர்க்கவியலாத நிர்ப்பந்தம் காரணமாக ஆகப் பெரும்பான்மை மக்களான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினர் மற்றும் அடிப்படை உழைக்கும் வர்க்கத்தினரைக் கவரக்கூடிய பேச்சுக்களும், வாக்குறுதிகளும், அவை தோற்றுவிக்கும் அரூபமான அரசியல் அபிப்பிராயங்களும் சமூகம் முழுவதன் மீதும் கவிந்திருப்பது போலவும், அந்தக் கருத்துக்கள் ஒரு பௌதீக சக்தியாக நிலவுவது போலவும் ஒரு மாயத் தோற்றம் ஏற்படலாம்.

ஆனால் இனம் புரியாத இந்தப் பொதுக்கருத்தின் திசையில் சமூகம் செல்வதில்லை. ஒவ்வொரு சமூகக் குழுவின் - அதாவது சாதி, இனம், வர்க்கங்களின் - முன்னணிப் பிரிவினர் எந்த அரசியல் திசைவழியைத் தெரிவு செய்கிறார்களோ அந்த வழியில்தான் சமூகம் கொண்டு செல்லப்படுகிறது.

மண்டல் பரிந்துரையோ அல்லது அதைக் காட்டிலும் புரட்சிகரமான வேறொரு திட்டமோ மேலிருந்து அறிவிக்கப்பட்டவுடன் தனக்குரிய ஆதரவாளர்களை அது தானே திரட்டிக் கொள்வதில்லை. ஏற்கெனவே சமூகத்தில் நின்று இயங்கிக் கொண்டிருக்கும் சமூக, அரசியல் பண்பாட்டு நிறுவனங்கள்தான் முன்னணிப் பிரிவினரைச் செதுக்கித் தயார் செய்கின்றன. அத்தகைய நேரடியான மற்றும் மறைமுகமான நிறுவனங்கள் பலவற்றை ஆர்.எஸ்.எஸ். குஜராத்தில் கட்டியமைத்திருந்தது. அத்தகைய நிறுவனங்கள்தான் தலித்துகள், பழங்குடிகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதியினரை இனப்படுகொலையில் பங்கேற்க வைத்தன. ❑


**பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு - 2003**

**ஒலிப்பேழைகள்**

1. **தமிழகத்தை இந்துத்துவத்தின் கல்லறையாக்குவோம்!**
   *தோழர் **மருதையன்**,* ம.க.இ.க.
   (2 பாகம் - இரு பேழைகள்) ரூ. 60
2. **இந்தியத் தத்துவ மரபு, இந்துத் தத்துவ மரபில்லை, இல்லை, இல்லவே இல்லை!**
   *பேரா. **பெரியார்தாசன்***
   (2 பாகம் - இரு பேழைகள்) ரூ. 60
3. **நாட்டார் தெய்வ வழிபாட்டின் பார்ப்பனமயமாக்கம்**
   *திரு. **சிவக்குமாரன்*** மற்றும்
   **குமரி மாவட்டத்தின் பார்ப்பனியக் கொடுங்கோன்மை**
   *வழக்குரைஞர் **லஜபதிராய்***
   ஒரே ஒலிப்பேழையில் ரூ. 30

**ஒளிக்குறுந்தகடுகள்**

மாநாட்டில் நடந்த கலைநிகழ்ச்சிகள் 4 ஒளிக்குறுந்தகடுகளாக வெளிவந்து விட்டன.

1. **குறவன் குறத்தி ஆட்டம்**
   **சங்கராச்சாரி ஓட்டம்**
   ***மையக்கலைக்குழு,*** ம.க.இ.க
   **லுங்கி** - நாடகம்
   ***நாடகக் குழு, வி.வி.மு.,*** கம்பம்
   மற்றும் **புரட்சிகரக் கலைநிகழ்ச்சி** - மையக்கலைக்குழு, ம.க.இ.க, மாநாட்டின் இரண்டாம் நாளில் நடத்தியப் பாடல்கள் தெரிவுசெய்யப்பட்ட தொகுப்பு விலை ரூ. 100.00
2. **புரட்சிகரக் கலைநிகழ்ச்சி**
   ***மையக்கலைக்குழு, ம.க.இ.க***
   மாநாட்டின் முதல் நாளில் நடத்திய பாடல்களின் முழுமையான தொகுப்பு விலை ரூ.100
3. **சாம்பான்** - நாடகம்
   ***ஒத்திகை நாடகக் குழு,*** தஞ்சை
   **அடிமாடு** - நாடகம்
   ***நாடகக் குழு, வி.வி.மு.,*** கம்பம்
   **தப்பாட்டம்**
   ***வீரசோழத் தப்பாட்டக் குழு,*** தஞ்சை
   **மகுடாட்டம்**
   ***முத்துராமலிங்கம், ஆத்திமுத்து*** குழுவினர், சிறீவைகுண்டம் விலை ரூ.100
4. **போகாதே நந்தா போகாதே** - நாடகம்
   ***ஒத்திகை நாடகக் குழு,*** தஞ்சை
   **தமிழ்த்தீட்டு** - வில்லிசைப்பாடல்
   ***ஆத்தூர் கோமதி குழு***வினர் மற்றும்
   **சிறுவர்கள் இசை நிகழ்ச்சி**
   ம.க.இ.க விலை ரூ.100
5. **இசைச் சித்திரம் - ம.க.இ.க.**
   **திண்ணியம், பள்ளப்பட்டி**
   நேருரைகள் விலை ரூ.100




அனைத்திற்கும் இரா.சீனிவாசன் பெயருக்கு DD அல்லது MO எடுத்து அனுப்புக. தபால் செலவு ரூ.

புதிய கலாச்சாரம், 18, முல்லைநகர் வணிகவளாகம், 2-வது நிழற்சாலை, 15-வது தெரு, அசோக் நகர், சென்னை-83. ☎: 2371 87 06







படிப்பகம்

www.padippakam.com



# பாலியல் வன்முறை:
# அந்தரங்கத்தின் அவலம்!

மனிதர்கள் சீக்கிரமே தூங்கிவிடும் குளிர் கால இரவுகளில் தெரு நாய்களுக்கு மட்டும் உறக்கம் வராது. எலும்பும் தோலுமாய்ப் பரிதாப மாயிருக்கும் ஒரு பெண் நாயைச் சுற்றி அதே அளவு பரிதாபத்துடனும், ஏக்கத்துடனும் ஆண் நாய்கள் துரத்தி ஓடும். நள்ளிரவின் இடுக்குகளிலிருந்து எழும் ஊளையும், கத்தலும், சண்டையும், காயமுமாய் அந்த இரவு வழக்கமாய் முடியும்.

அந்தக் காட்சியை எரிச்சலும் வேடிக்கையுமாய்ப் பார்க்கும் மனிதர்களும் முன்னொரு காலத்தில் அப்படித்தான் இருந்தார்கள். குரங்கிலிருந்து ஆதிகால மனிதன் உருவெடுக்கும்போது பாலுறவுக்காகச் சண்டையிடும் வன்முறை அவனது உயிரியல் தேவையாக இருந்தது.

தான் வாழ தன் சமூகமும், கூட்டு உழைப்பும் அவசியம் என்பதை மனிதன் மெல்ல மெல்ல உணர்ந்தபோதுதான் இந்த வகையிலான வன்முறை மங்கத் துவங்கியது. ஆனால் மங்கிய அந்த வன்முறை வேகமாக வளருவதைக் கீழ்க்கண்ட சம்பவங்கள் தெரிவிக்கின்றன.



**திருட விரும்பாதவன், கொள்ளை அடிக்கத் துணிவற்றவன். லாட்டரிச் சீட்டு வாங்குவது போல, கற்பழித்துப் போலிசிடம் மாட்டாமல் ஏறத்தாழ அதையே சட்டபூர்வமாகச் செய்வது எப்படி என்று சிந்திக்க ஆரம்பிக்கின்றனர்.**

**இப்படித்தான் பாலியல் உணர்வுக்கும், வக்கிரத்துக்கும் உள்ள எல்லைக் கோடு பிரித்தறிய முடியாதபடி மங்கி வருகிறது.**

மயிலாடுதுறையின் மாணவி தேவி சக மாணவன் அருண்குமாரால் கொல்லப்பட்டாள்; இலங்கையிலிருந்து மதுரையில் படித்து வந்த மாணவி மயூரணி, பால பிரசன்னா என்ற மாணவனால் கொல்லப்பட்டாள்; குமரி மாவட்டம் தக்கலையைச் சேர்ந்த ஜீனிகுமாரி, ஜோன்ஸ் எனும் இளைஞன் வீசிய அமில வீச்சால் முகம் சிதைந்து மருத்துவமனையில் படுக்கையிலிருக்கிறாள்; அருப்புக்கோட்டையைச் சேர்ந்த 9-ஆம் வகுப்பு மாணவி சித்ரா தன் வயதினை ஒத்த இரு மாணவர்களால் உயிரைத் துறந்திருக்கிறாள்; உ.பி. மாநிலம் லக்னோவைச் சேர்ந்த 25 வயது மதுமிதா, மந்திரி திரிபாதியின் கூலிப்படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டாள்.

இந்தப் பெண்கள் காதலுக்காக, காதலிக்க மறுத்ததற்காக, காமத்திற்காக, காமவெறியர்களுக்காகச் சிதைக்கப்பட்டிருக்கிறார்கள். மனிதனின் மென்மையான உணர்வு என்று கூறப்படும் பாலுணர்வின் பெயரால்தான் இந்தப் பலிகள் தொடருகின்றன. எனில், மனிதன் மீண்டும் விலங்கு நிலைக்குத் திரும்புகிறானா?

இல்லை, வரலாறு ஒருபோதும் மீண்டும் திரும்ப முடியாது. விலங்கு நிலைக்குத் திரும்ப முடியாத மனிதன் முன்னேறும் தன் மனித நிலை குறித்துத் தெரியாமலும் திகைக்கிறான். அன்று இயற்கையின் பேரழிவுகளைக் கண்டு கலங்கிய மனித இனம் இன்று இயற்கையைப் புரிந்து கொண்டு கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றுவிட்டதால் அத்தகைய அச்சம் இல்லை. ஆனால் மனிதர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வான உறவுகளை உருவாக்கியிருக்கும் சமூகம் எனும் செயற்கை, வாழ்க்கை குறித்த பேரதிர்ச்சியைத் திறந்து விட்டிருக்கிறது.

இயற்கையை விட இந்தச் செயற்கையான சமூகமும் அதன் 'சந்தை விதிகளும்' தோற்றுவித்திருக்கும் அச்சமும், பீதியும், குழப்பமும், விரக்தியும் மிக அதிகம். ஆதலால் அறிவியலின் இன்றைய கண்டுபிடிப்புகளில் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியிருக்கும் மனிதன் தனது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்காக, இன்னமும் தனது ஆரம்பகால 'கண்டுபிடிப்புகளான' மதம், கடவுள், வாஸ்து, இராசிபலன் இன்னபிற மாயைகளில் சரணடைகிறான். இந்த மாயைகளில் பாலுணர்வு குறித்த புதிரும் - கவர்ச்சியும் கனவும் நனவும் நிறைந்த குழப்பமும் உண்டு. மேலும் ஒரு இயற்கையான உயிரினத் தூண்டுதலாக இருப்பதால் அது ஒரு யதார்த்தமான பிரச்சினையாகவும் இருக்கிறது.

ஆக, சமூக உறவுகளில் தனிமைப்பட்டு வரும் விளைவாக, மனிதன் தனது பாலுணர்விலும் அன்னியமாகி வருகிறான். இன்றைய ஆணுக்கும், பெண்ணுக்கும் பாலுணர்வு என்பது அவ்வப்போது மகிழ்ச்சியைத் தந்தாலும் எப்போதும் தொந்தரவாகவும், புதிராகவும், விடை கிடைக்காத இரகசியமாகவும் இருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினை வர்க்கங்களால் பிளவுண்டிருக்கும் சமூகப் பிரச்சினை போல இன்னமும் தீர்க்கப்படவில்லை. அதுவரை மனித சமூகம் தன்னில் சிலரை, முக்கியமாக பெண்களைத் தீர்த்துக் கட்டி வருகிறது.

இந்தக் கொலைகளை வன்முறை குறித்த ஏனைய செய்திகளில் பத்தோடு பதினொன்றாய் நீங்கள் கருதலாம். நாள்தோறும் பாலியல் வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் இவை சாதாரணமாகவும் தோன்றலாம். இக்கொலைகளில் சில மனச்சிதைவு காரணமாய் நடந்தாலும், பல இயல்பாகத் திட்டமிட்டு, எந்தப் பதட்டமுமின்றியே நடக்கின்றன. மேலும் இத்தகைய மனப்போக்கு வன்முறையாளர்களின் நடவடிக்கையாக மட்டு



படிப்பகம்

www.padippakam.com

மல்ல, அவற்றின் பார்வையாளர்களாகிய நம்மிடமும் எழத் தொடங்கியிருக்கிறது. சாதி மதக் கலவரங்களில் ஒரு சில கும்பல்கள்தான் ஈடுபடுகின்றன என்றாலும் அந்த ஈடுபாட்டுக்கு கலவரக்காரர்களின் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பான்மை மக்களின் அமைதியான அங்கீகாரம் உதவுவது போல, அதிகரித்து வரும் பாலியல் வன்முறைகள் ஆண்களிடம் பெரிய அளவு அதிர்ச்சியை ஏற்படுத்துவதில்லை.

அருண்குமார் சொன்னது போல மற்ற ஆண்களிடம் பேசுவதை மாணவி தேவி தவிர்த்திருக்கலாமே என்பதும், மாணவி மயூரணி குளித்து உடைமாற்றுவதைப் பார்த்த சோலைமலைத் தேவராக மாறி, வாசகன் ஒரு கணம் கற்பனை செய்வதும், லக்னோவின் உயர்குடியினரிடம் பழகி முன்னேற நினைத்த மதுமிதாவைப் போல நமக்கும் ஒருத்தி கிடைக்கமாட்டாளா என்று ஏங்குவதும் என ஆண்களின் எதிர்வினை பலரகமாக உள்ளது.

திருட விரும்பாதவன், கொள்ளையடிக்கத் துணிவற்றவன். லாட்டரிச் சீட்டு வாங்குவது போல, கற்பழித்துப் போலீசிடம் மாட்டாமல் ஏறத்தாழ அதையே சட்டபூர்வமாகச் செய்வது எப்படி என்று சிந்திக்க ஆரம்பிக்கின்றனர். அதிலும் பல வீனமும், தடுமாற்றமும் உள்ள நபர்கள் பாலியல் வன்முறைக்கு விரைவிலேயே தயாராகி விடுகிறார்கள்.

இப்படித்தான் பாலியல் உணர்வுக்கும், வக்கிரத்துக்கும் உள்ள எல்லைக்கோடு பிரித்தறிய முடியாதபடி மங்கி வருகிறது. ஆணின் இச்சையைத் தீர்ப்பதும், அதற்கெனத் தன்னை அழகுபடுத்துவதன் மூலமே வாழ முடியும் என்றாகிப் போன பெண்கள்தான் இச்சமூகத் துயரத்தின் பலிகடாக்கள். பெண்டாளுவதே தம் தகுதியாகக் கருதிக் கொள்ளும் ஆண்கள் இந்த அவலத்தின் அம்புகளாகவும் போனார்கள். இன்றைய சமூக அமைப்பைக் கட்டிக் காத்து வரும் ஆளும் வர்க்கம் நம்மை விரும்பியபடி பயன்படுகிற பல வீனமான அம்புகளாக நாம் ஏன் மாறினோம் என்பதை இங்கே சுருக்கமாகப் பார்க்கலாம்.

**பாலியல் காமாலை:**
**பத்திரிகைகள் பரப்பும் நோய்**

உலகில் வேறெங்குமில்லாதபடி மதம், சாதியின் பெயரால் மக்களை தனித்தனித் தீவுகளாக்கிய பார்ப்பனியம் கூடவே ஆண்களையும் - பெண்களையும் இருவேறு இனங்களைப் போலப் பிரித்தே வைத்திருக்கிறது. இரு நூறாண்டுகளாய் இத்தகைய கேவலமான பாரம்பரியத்தைக் கொண்டு வாழும் நாம் பாலுணர்வு குறித்த குழப்பமும், திகிலும் எழுவதற்கு மிகவும் தோதாக இருக்கிறோம். கூடவே இன்றைக்கு நமது சிந்தனையை வளர்க்கும் அனைத்துத் தகவல் ஊடகங்களும் பாலுணர்வுப் புகை போட்டு நம்மைச் சாமியாட வைக்கின்றன.

பன்னாட்டுச் செய்தி நிறுவனங்களும், அவற்றின் உள்ளூர் ஏஜெண்டுகளும் வெளியிடும் தகவல்களில் பாலுணர்வு ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. குறிப்பாக எல்லாவகைச் செய்திகளும், தகவல்களும் ஏதோ ஒரு வகையில் பாலுணர்வு ரசனையைக் கொண்டு சுவையூட்டப் படுகின்றன. உதாரணமாக, இராக் மீதான அமெரிக்கப் போரில் சதாம் மகன் உதயைப் பற்றிய செய்திகளில் அவரது ஆடம்பர மாளிகை, நீச்சல் குளம், நீலப்படங்கள், காதலிகளின் கதை ஆகியவை தவறாமல் பத்திரிகைகளில் இடம் பெற்றன. புதிய பரபரப்புக்கள் ஏதும் சிக்காத நேரங்களில் பத்திரிகைகளின் பரபரப்புத் தேவையைத் தணித்து வற்றாத பண வருவாயைத் தருவதாகப் பாலுணர்வுச் செய்திகள் இருக்கின்றன.

கேவலத்திற்குப் பெயர்பெற்ற இங்கிலாந்தின் 'சன்' பத்திரிகையின் தரமும் வடிவமைப்பும் கொண்ட 'தினமலர்' தமிழ் நாளிதழ்களின் விபச்சாரத் தரகு வேலைகளுக்கு ஒரு முன்னோடியாகும். சரிகா ஷாவின் கொலை குறித்த கவலை தோய்ந்த பத்திகளுக்கருகே, இணைய தளத்தில் ஒரு ஜோடியின் முதலிரவை நேரடியாகப் பார்க்கலாம் என்ற செய்தியையும், முகவரியையும், தேதியையும் தினமலர் குறிப்பிட்டிருந்தது.

'மக்கள் நாளிதழான' தினத்தந்தியின் 2,3-ஆம் பக்கத்தில் கள்ளக்காதல் என்ற தலைப்பு நிரந்தரமாய் இடம்பெறும். முதலில், படிக்கப் படும் இச்செய்தி மக்களின் வாசிப்பு முறையையே மாற்றிவிட்டது. தேவி, ராணி போன்ற 'குடும்ப வாரந்திர'ப் பத்திரிக்கைகளில் பரிசு பெறும் குடும்பக் கதைகளின் கடிதங்கள் தவறாமல் இடம்பெறும். கள்ள உறவினால் சீரழிந்து போன குடும்பப் பெண்களின் விதவிதமான கதைகள், இவ்விதழ்களைப் படிக்கும் கீழ்த்தட்டு நடுத்தரப் பெண்களுக்கு மனப்பாடமாயிருக்கிறது. இதையே பாலியல் கல்வி என்ற பெயரில் அவள் விகடனும், குமுதம் சிநேதியும் சற்றுப் படித்த பெண்களிடம் கொண்டு செல்கின்றன.

வக்கிரங்களையே புதிய கோணங்களில் சொல்வதிலும், வடிவமைப்பதிலும் கைதேர்ந்த மதனின் பாணியில் உருவான ஜூனியர் விகடன், வார இதழ்களின் காமசூத்திரமாகும். 'சரசுவாகிய நான்' எனும் ஒரு தொடர் அதற்கு இலக்கணம். கள்ளச் சாராயம் விற்று இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி., எம்.எல்.ஏ. மந்திரியுடன் படுத்து, சாராயம் காய்ச்சி, எரிசாராயம் கடத்தி, போட்டியாளர்களைக் கொன்று பரிணாம வளர்ச்சியில் சாதனை படைத்த சரசுவின் கதை முடிந்தவுடன் 'சரசக்கா எங்கே' என்று வாசகர்கள் தவித்த தவிப்பை வாசகர் கடிதங்கள் காட்டுகின்றன.

ஜூ.வி.யின் பலான பளபளப்புக்கிணையாகப் போட்டியிட இயலாத நக்கீரன் கண்டுபிடித்த ஒரு வழி 'நடிகையின் கதைகள்'. எல்லா நடிகைகளின் கதையும் ஒரே மாதிரியாக இருந்தாலும்



**சாதி, மதம், இனம், மொழி, வர்க்க வேறுபாடு குறித்த செய்திகளின் நியாயத்தை அந்தந்தப் பிரிவு மக்களின் நலனிலிருந்து சரி – தவறு என்று பிரித்துப் பார்க்க முடியும். ஆனால் எல்லாப் பிரிவு மக்களையும் கடந்து நிலவும் ஆணாதிக்கம் காரணமாக பாலுணர்ச்சிச் செய்திகள் மட்டும் சமூக அக்கறையின்றி உணர்ச்சி வசப்படுத்துகின்றன.**



படிப்பகம்

www.padippakam.com

வாசகருக்குச் சலிப்பதில்லை. எந்தெந்த இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் எந்த நடிகையைப் பயன்படுத்திக் கொண்டார்கள், அவர்களுடைய ரசனை எல்லாம் வாசகருக்கு மனப்பாடம்!

சுஜாதாவின் 'ஏன், எதற்கு, எப்படி'யில் 'பலான செய்திகளும்', படங்களும் யாரும் எதிர்பாராத கேள்விகளுக்கு விடையாய் வரும். பெண்களின் பின்புறம் பெரிதாக இருப்பது குறித்த கேள்வி ஒன்றுக்கு அதை விளக்கும் வண்ணம் முக்கால் பக்கத்தில் நீச்சல் உடை பெண்ணின் பின்புறம் அடைத்திருக்கிறது. பிரமிடு பற்றிய கேள்விக்கு பிரா அணிந்த பெண்ணை படுக்க வைத்திருக்கிறார்கள். பெண்ணுடம்பு குறித்த வக்கிரமான பிம்பங்கள் அறிவியலின் பெயரால் நம்மிடம் செருகப்படுகின்றன.

இந்தியா டுடேயின் 'கனவுலகத் தேவதை ஐஸ்வர்யா ராய்' கட்டுரைக்கு கடிதம் எழுதிய ஒரு வாசகர், ''ஐஸ் ஒருவேளை ஜேம்ஸ்பாண்ட் படத்தில் நடித்தால் பாண்ட் ஐஸின் உதடுகளைக் கவ்விவிழுப்பார், பாலிவுட்டில் இமேஜ் சரிந்து போகுமே'' என்று கவலைப்படுகிறார். மாறிவரும் செக்ஸ் உணர்வுகள், குடும்பப் பெண்களின் பாலியல் புரட்சி முதலான தலைப்புக்களில் இந்தியா டுடே, அவுட்லுக் இதழ்களில் மூன்று மாதத்துக்கு ஒருமுறை 'ஆய்வுக் கட்டுரை' வரும். மேட்டுக்குடி மற்றும் மாதச் சம்பளப் பிரிவினரிடையே இயல்பான கள்ள உறவைக் கட்டியமைப்பது எப்படி எனும் நடைமுறைப் பாடங்கள் இவற்றில் கற்றுத் தரப்படுகின்றன.

குமுதம் அட்டை 'டு' அட்டை காமக்கலையில் ஒரு அமுதசுரபி. சமீபத்திய இதழொன்றில் இணையத்தில் வக்கிரங்களை அரங்கேற்றிய டாக்டர் பிரகாஷ் வழக்கில் சாட்சியாக இருக்கும் சித்ராவின் பேட்டி ஒன்றைப் போட்டிருந்தார்கள். செய்திகளின் பரப்பளவை விட சித்ராவின் படம் பெரிது. யார் இந்த சித்ரா என்பதை நினைவுபடுத்த ஒரு ஃபிளாஷ்பேக் - அதில், சித்ரா டாக்டருடன் அறிமுகமாகி, பிக்னிக் சென்று, படுக்கையில் துணியில்லாமல் படமெடுக்கப்பட்டது எல்லாம் விலாவரியாக வருகிறது. தன்னை போலீசு துன்புறுத்துவதைத் தெரிவிக்க வந்த சித்ரா குமுதம் மீண்டும் ஒருமுறை தன்னைத் துகிலுரியும் என அறிந்திருந்தால் பேசவே மறுத்திருப்பார். வாசகர்களுக்கு சித்ராவின் கதை என்ற பெயரில் டாக்டரின் கதை கிளுகிளுப்புடன் நினைவுபடுத்தப்பட்டு விட்டது.

எந்த ஒரு பிரச்சினையின் தீவிரத்தையும் நகைச்சுவையின் பெயரால் சகஜமாக்குவது ஆனந்த விகடன் பாணி. பழுதடைந்த காரின் கீழே ஒரு பெண் படுத்திருக்கிறாள். அவள் மார்பு காரைத் தூக்கி நிறுத்தும் ஜாக்கி போல உணர்த்தப்படுகிறது. வசனம், ''அடுத்த முறை காருக்கு ஜாக்கி கொண்டு வரலேன்னா, உங்களை என்ன செய்யிறேன் பாருங்க!'' ஒரு இதழில் ஷகிலாவின் படம் பார்க்கும் அனுபவத்தை நடிகர் கலாபவன் மணியின் மூலம் அபிநயங்களாக, அட்டைப்படக் கட்டுரையாக வெளியிட்டிருந்தார்கள். ஷகிலா படங்களைப் பார்ப்பது இனிமேலும் ஒரு கூச்சப்படவேண்டிய விசயமல்ல என்பதாக வாசகர்கள் உணருகிறார்கள்.

அதே உணர்வை அரி - கிரி அசெம்ளியின் ஷகிலா பேட்டியும் தருகிறது. ஷகிலா படத்தை ஒதுக்குப்புறமாக இருக்கும் திரையரங்குகளில் பயந்து பதுங்கிப் பார்க்கும் அவலத்தை மாற்றி சன் டி.வி.யின் மலையாளச் சானல் வாரம்தோறும் திரையிடுகிறது. ஷகிலாவைக் கேள்விப்பட்டிராதவர்கள் கூட ரசிகர்களாகி அந்த ஒருநாள் நள்ளிரவுத் தருணங்களுக்காக வாரம் முழுவதும் காத்திருக்கிறார்கள்.

இதுபோக, இணையத்தளம், செல்போனின் எஸ்.எம்.எஸ். போன்ற அறிவியல் தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளும் பாலுணர்வின் மையங்களாகி விட்டன. இணையத்தில் எந்தத் தலைப்பு அதிகம் பார்க்கப்படுகிறது என்பதன் அளவுகோல் செக்ஸ். போருக்கு எதிரான உலக மக்களின் கருத்தை சர்வே செய்துவிட்டு 'செக்ஸ்'க்கு அடுத்தபடியாக இராக் போர் பற்றிய செய்திகள் அதிகம் பார்க்கப்பட்டன என்று மதிப்பிடுகிறார்கள்.

எஸ்.எம்.எஸ்.இன் 90 சதவீதப் பயன்பாடு காதல், காமம், கள்ள உறவுக்கே பயன்படுகிறது. இலக்கிய ரசிகர்களுக்கு விரக தாபத்தை காவிய உணர்ச்சியாழ்ச் சித்தரிக்கும் சாண்டில்யன், ஜானகிராமன், பாலகுமாரன், சாரு நிவேதிதா போன்ற ஜாம்பவான்கள் இருக்கிறார்கள். ஷகிலாவைப் பார்த்து சட்டென்று உணர்வு கொள்ளும் பாமரர்களைப் போலன்றி சற்று தாமதமாக, கலைநயத்துடன் கிளர்ச்சியடைவது இந்த ரசிகர்களின் கலைத்தரம்!

இப்படி நம்மைச் சுற்றியிருக்கும் தகவல் உலகிலிருந்து செக்ஸ் குறித்த செய்திகள், அந்தரங்கங்கள், கனவுகள், ஆசைகள், ஏக்கங்கள் நமது புலன்களினூடாக ஆயிரமாயிரம் வழிகளில் இறங்குகின்றது. இதற்கு நாம் ஆட்படுவதும், அடிபணிவதும் எவ்வாறு என்பதை உணர்த்தவே மேற்கண்ட உதாரணங்களைப் பார்த்தோம். இந்தச் சரணடைவுக்கான அடிப்படை பொதுவில் ஒரு தனி மனிதனின் பாலியல் உணர்வுக்கும் அதைக் கட்டுப்படுத்தும் சமூக நியதிகளுக்குமுள்ள முரண்பாட்டில் இருக்கிறது. இதைக் கேடாகப் பயன்படுத்தி ஊதிப் பெருக்குகின்றன பத்திரிகைகள்.

50 ஆண்டுகளுக்கு முன்பு ஆனந்த விகடன் அட்டையில் ''என் டீச்சர்தான்.. எனக்கு மட்டும்தான் - மாணவர்களின் காதல் சடுகுடு'' என்று எதிர்பார்க்க முடியாத தலைப்பும், படமும் இன்று ஜூனியர் விகடனில் வருகிறது. பத்திரிக்கைகளின் மக்கள் மீதான பொறுப்புணர்வு, எவ்வளவுக்கு இலாபகரமாக இயங்க முடியும் என்பதிலிருந்தே தீர்மானிக்கப்படுகிறது. மக்களை உணர்ச்சியுடன் ஒன்ற வைப்பதில்தான் அந்த



**படித்துப் பதவியிலிருக்கும் பணக்கார வர்க்கம் தனது பாலுறவு இன்பத்தைச் சில நிமிடங்கள் நீட்டிப்பதற்கு சில லட்சங்கள் செலவழிப்பதும், தனது கருப்புப் பண வருவாயை நீட்டிக்க திருப்பதி உண்டியலுக்குக் கணக்கு பார்க்காமல் கட்டுக் கட்டாய்ப் போடுவதும் வேறு வேறல்ல.**



படிப்பகம்

www.padippakam.com

இலாபம் பிறக்க முடியும் என்பதால், வேறு எந்தச் செய்திகளையும் விட பாலுணர்வுச் செய்திகள் பத்திரிக்கைகளுக்குக் கை கொடுக்கின்றன.

சாதி, மதம், இனம், மொழி, வர்க்க வேறுபாடு குறித்த செய்திகளின் நியாயத்தை அந்தந்தப் பிரிவு மக்களின் நலனிலிருந்து சரி - தவறு என்று பிரித்துப் பார்க்க முடியும். ஆனால் எல்லாப் பிரிவு மக்களையும் கடந்து நிலவும் ஆணாதிக்கம் காரணமாக பாலுணர்ச்சிச் செய்திகள் மட்டும் சமூக அக்கறையின்றி உணர்ச்சி வசப்படுத்துகின்றன. பாலுணர்வு குறித்த வரலாற்று ரீதியான குழப்பமும், நுகர்வுக் கலாச்சாரத்தின் முதன்மை அங்கமாக செக்ஸை ஆக்கியிருக்கும் உலகமயமாக்கமும், ஏற்கெனவே கோணலாயிருக்கும் நமது பாலுணர்வு குறித்த அரைகுறை அறிவை மேலும் பலவீனமாக்கியிருக்கின்றன.

**பாலுணர்வுத் தொழில் -**
**ஒரு வருவாய்ச் சுரங்கம்**

பாலுணர்வுச் செய்திகளை மக்களிடம் சுடச் சுடக் கொண்டு போய்க் காசாக்கும் பத்திரிக்கைகளின் மற்றுமொரு வருவாய் பாலுணர்வுப் பொருட்களின் விளம்பரங்கள். பாலுணர்வு முதலாளிகளும், பத்திரிக்கை முதலாளிகளும் ஒருவரையொருவர் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுகிறார்கள். ஜூனியர் விகடனின் ஒவ்வொரு இதழிலும் நாட்டுப்புற செக்ஸ் வைத்தியர்களான சேலம் சிவராஜ் மற்றும் ஈரோடு குருராஜ் சித்த வைத்தியசாலைகளின் விளம்பரங்களும், நவீன ஆணுறையான கோஹினூரின் 'மோகத்தீ பரவட்டும்!' என்ற விளம்பரமும் தவறாமல் இடம் பெறும். அதற்கு நன்றிக் கடனாய் ஜூ.வி.யும் தீயைப் பரப்பி வருகிறது. பாலுணர்வு குறித்த நேரடியான விளம்பரங்கள் மட்டுமல்ல, அதன் மறைமுக அம்சங்களை நடை, உடை, பாவனை, அழகு, அழகிப்போட்டி என்பவை நவநாகரீகம் என்ற பெயரில் உலகம் முழுவதும் உள்ள செய்தி நிறுவனங்களில் விளம்பரங்களாய் வருகின்றன.

இத்தகைய தொழில்களை நடத்தும் முதலாளிகளுடன், சுற்றுலா, பாலுறவுச் சுற்றுலா, கேளிக்கைத் தலங்கள் முதலான தொழில்களும் அளப்பரிய வருவாயை அள்ளித் தருகின்றன. வேறு எந்தப் பொருளையும் - சேவையையும் விட இவை அதிகச் சிரமமின்றி விலை போகின்றன. எதிர்பாலினரைக் கவர்ந்தேயாக வேண்டும், அப்படிக் கவருவதற்கு இவையெல்லாம் தேவை என்பது இளைய சமுதாயத்தின் ஆளுமைப்பண்பாகவே மாறிவிட்டது.

கை நிறையச் சம்பளம் வாங்கும் இளைஞர்கள், திருமணப் பேச்செடுக்கும் பெற்றோரிடம் வலியுறுத்தும் முதன்மை விசயம் பெண் சிவப்பாக - அழகாக இருக்க வேண்டும்! தமிழனின் சராசரி நிறம் கருப்பு - மாநிறம் என்பது பல சுற்றுக்கள் முடிந்த பிறகே வேறு வழியின்றிப் புரிய வரும். கருப்பைச் சிவப்பாக்குவதாக ஒரு பொய்யைச் சொல்லியே ஃபேர் அண்ட் லவ்லி களிம்பு மட்டும் வருடத்திற்குப் பல கோடி ரூபாய்க்கு விற்கிறது. இப்படி இல்லாத ஒரு அழகை ஆணும் பெண்ணும் கற்பனை செய்து ஏமாறுவது முதலாளிகளின் பலம்.

பாலுறவு குறித்த அறியாமையையும், யதார்த்தமான பிரச்சினைகளையும் மர்மம் நிறைந்த சங்கதிகளாக்கி குழப்பத்தையும், அச்சத்தையும் உருவாக்கி, பாலுறவுப் பொருட்களைத் தள்ளுகிறார்கள். பாமரர்களுக்குச் சிட்டுக்குருவி லேகியமும், தங்க பஸ்பமும், பணக்காரர்களுக்கு வயாக்ராவும் இப்படித்தான் சுலபமாக விலை போகின்றன. காந்தப் படுக்கையில் நீண்ட நேரம் உறவு கொள்ளலாம் என்று ஒரு பச்சைப் பொய்யைச் சொல்லி 2000 ரூபாய் மெத்தையை லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்த 'ஜப்பான் காந்தப் படுக்கை' மோசடியில் சிக்கிய இந்தியர்களின் பணம் 330 கோடி ரூபாய் என்றால் எதைச் சொல்லி அழ?

படித்துப் பதவியிலிருக்கும் பணக்கார வர்க்கம் தனது பாலுறவு இன்பத்தைச் சில நிமிடங்கள் நீட்டிப்பதற்கு சில லட்சங்கள் செலவழிப்பதும், தனது கருப்புப் பண வருவாயை நீட்டிக்க திருப்பதி உண்டியலுக்குக் கணக்கு பார்க்காமல் கட்டுக் கட்டாய்ப் போடுவதும் வேறு வேறல்ல. லஞ்சம், மோசடி, சூது, தரகு என எப்படியும் பணம் சம்பாதிக்கலாம் என்று சிந்திக்கும் மனிதர்களின் அறிவுதான் விதவிதமான பாலியல் வக்கிரங்களை அனுபவிக்க உயிரியல் விரோதமாகச் சிந்திப்பதற்கும் பயன்படுகிறது. இத்தகைய மனிதர்களே நீதிபதிகளாக, போலீசு அதிகாரிகளாக, மந்திரிகளாக, நடிகர்களாக, பத்திரிக்கை முதலாளிகளாக இருக்கும் போது அந்தச் சமூகத்தின் இயக்கம் எவ்வளவு வக்கிரமாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சமூகப் பிரச்சினைகளின் அழுத்தத்திலிருந்து விடுவிக்கும் போலி நிவாரணியாக முன் வைக்கப்படும் பாலுறவின் கற்பனைகள் கண்ணோட்டத்திலிருந்தே அவலங்கள் பிறக்கின்றன. பத்திரிக்கைகளின் பாலுணர்வுக் கதைகளை இதயத்தில் வைத்து வதங்குபவர்களை, பாலுறவுப் பொருட்கள் - சேவைகளின் விளம்பரங்கள் மேலும் வதைக்கின்றன. தங்களது வருமானத்தின் ஒரு பகுதியை இதற்கென ஒதுக்கியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்கனவே ரணமாயிருக்கும் மனத்தை மேலும் சிதைக்கிறது. பாலுறவுக்கென வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதை விட, பாலுறவுக்கென உலகம் கருதும் தகுதிகள் தனக்குக் கிடைக்காமலேயே போய்விடுமோ என்ற அச்சம் பெரிதும் பிடித்தாட்டுகிறது. வாழ்க்கையில் எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் போக்கு இத்தாழ்வு மனப்பான்மையில் கருவுற்று வன்முறை எண்ணத்தைச் சுலபமாகப் பிரசவிக்கிறது.

உடலையும், மனதையும் எல்லையற்ற நுகர்வியப் பண்பாட்டில் இழுத்துச் செல்லும் உலகமயமாக்கம், நமது ஆளுமையைத் தீர்மானிப்பதிலும்



**உடலையும், மனதையும் எல்லையற்ற நுகர்வியப் பண்பாட்டில் இழுத்துச் செல்லும் உலகமயமாக்கம், நமது ஆளுமையைத் தீர்மானிப்பதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. அந்த ஆளுமை ''நாம்'' எனும் சமூகத்தின் பலத்தில் வாழும் மனிதனை, ''நான்'' எனும் தனிமனிதவாதத்தில் வாழும் பலவீனமான மனிதனாக மாற்றுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

முக்கியப் பங்காற்றுகிறது. அந்த ஆளுமை ''நாம்'' எனும் சமூகத்தின் பலத்தில் வாழும் மனிதனை, ''நான்'' எனும் தனிமனிதவாதத்தில் வாழும் பல வீனமான மனிதனாக மாற்றுகிறது. புதிர் நிறைந்த தாக மாற்றப்பட்டிருக்கும் இன்றைய நவீன பாலு ணர்வுக் கண்ணோட்டம் ஒரு மனிதனை எப்படிச் சிதைக்கிறது என்பதை இங்கே சுருக்கமாகப் பரிசீ லிப்போம்.

**அந்தரங்கம் இரசனையாக்கப்பட்ட ஒரு அவலம்**

''கம்யூனிஸ்டுகள் பிரச்சினைகளை மேசையின் மேல் வைக்கவேண்டும்'' என்பார் மாவோ. தோழர்கள் தங்கள் சுயபரிசீலனையின் போது வெளிப்படையாகப் பேசவேண்டும், அப்படிப்பேசாத வரை அந்தப் பிரச்சினையும் தீராது என்பதை விளக்கும் மாவோவின் கூற்று பலருக்கும் ஒரு சாதாரணமான விசயமாகத் தோன்றலாம். ஆனால் இன்றைய சமூக அமைப்பின் இயக்கம் காதும் காதும் வைத்தாற் போல இரகசியமாகவே செல்கிறது என்பதிலி ருந்து வெளிப்படையாகப் பேசுவது சுலபமல்ல என்பது பலருக்குத் தெரிவதில்லை.

தனது போட்டி நிறுவனங்களை முடக்குவ தற்கு பில்கேட்ஸ் செய்த வியாபாரச் சதிகள், இராக்கைத் தாக்குவதற்கு முன்பாக ஐ.நா.வை வைத்து அமெரிக்கா நடத்திய அரசியல் சதிகள், பி.எஸ்.என்.எல்.ஐ ஒழித்துத் தனியாரை வளர்ப்ப தற்கு அருண்ஷோரி செய்த தரகுச் சதிகள், திவா லாவதற்கு முன்பாக என்ரான் நிறுவனம் காட்டிய கணக்குச் சதிகள், தேர்தல் சீட்டுக்களுக்காக கொள்கையின் பெயரில் பேரம் பேசும் ஓட்டுக் கட்சிச் சதிகள், கிரிக்கெட்டின் பரபரப்பை அறு வடை செய்ய வீரர்களை விலைபேசும் சூதாட்டச் சதிகள்.... இப்படித்தான் முழு உலகையும் சதி, வஞ்சகம், மோசடி, பொய், துரோகம் முதலான இர கசிய நடவடிக்கைகளை வைத்து முதலாளித்துவச் சமூகம் இயங்குகிறது. இதில் தேர்ச்சியடைபவர்க ளையே தொழில் மன்னன், அரசியல் இராஜதந் திரி, நிர்வாகப் புலி என்று அழைக்கிறார்கள். சமூ கத்தின் சிறந்த 'ரோல் மாடல்களாக'ப் பத்திரிக்கை களும் முன்னிறுத்துகின்றன.

இவர்களைப் பற்றிய செய்திகளும் மக்களுக் கான நோக்கிலிருந்து மதிப்பிடப்படாமல், இரக சியக் கலைகளில் வல்லவர் யார் என்ற கருத்தே உருவாக்கப்படுகிறது. அதனால்தான் சந்திரசேகர், அமர்சிங், சோ, ஆர். வெங்கட்ராமன், அம்பானி, சங்கராச்சாரி போன்ற அப்பட்டமான அரசியல் - தொழில் - ஆன்மீகத் தரகர்களெல்லாம் மரியா தைக்குரிய பெரிய மனிதர்களாக உலவ முடிகிறது. இதற்குப் பொருத்தமாக பத்திரிகைகளும் அர சியல் செய்திகளை கொள்கை, கோட்பாடு, மக்கள் நிலையிலிருந்து எழுதாமல் கிசுகிசு பாணியில் புனைகிறார்கள். இன்றைக்கு அரசியல் செய்தி களை அறிவதற்கு கழுகு, சங்கர்லால், வம்பா னந்தா போன்ற 'ஆய்வாளர்களின்' ஆய்வுக ளைத்தான் மக்கள் படிக்கின்றனர்.

இப்படி, சமூக இயக்கத்தில் சமூக விரோதமாக இருக்கும் இரகசியச் செயல்களிலிருந்தே அந்த ரங்க விசயங்களை ரசனையுடன் நாடுவது ஒரு பண்பாகத் தோன்றுகிறது. இத்துடன் பாலு ணர்வின் புதிர் சேரும்போது அதன் கவர்ச்சி இன்னும் பல மடங்கு பெருகுகிறது. அத னால்தான் முதலாளித்துவ அரசியல் உலகில் தமது எதிர்த்தரப்பினரை நிலைகுலைய வைக்க பாலுறவு இரகசியங்களை ஏவிவிடுவது ஒரு தந்தி ரமாக இருக்கிறது. கிளிண்டன் - மோனிகா லிவின்ஸ்கி விவகாரத்தின் போது எதிர்க்கட்சி யாக இருந்த குடியரசுக் கட்சியினர் அமெரிக்க சமூ கத்தில் மிகச் சாதாரணமாக இருக்கும் இந்தக் கள்ள உறவுப் பிரச்சினையை ஒரு மாபெரும் ஒழுக்கப் பிரச்சினை போல மாற்ற முயன்றனர். முதலில் சற்றுத் தடுமாறிய கிளிண்டனோ ஈராக் மீதான தாக்குதலைப் பயன்படுத்தி மோனிகா விவகா ரத்தை மூடுவதற்கு முயன்றார். உலகமும் இராக்கை மறந்துவிட்டு வெள்ளை மாளிகையின் அந்தப்புர லீலைகளை இரசித்தது.

கிளிண்டன் ஒரு அமெரிக்க அதிபர் என்ற முறையில் உலக மக்களுக்கு எதிராகச் செய்த அத்துமீறல்களைப் பற்றிப் பேசாத தமிழ்ப் பத்தி ரிக்கைகளெல்லாம் அவர் மோனிகாவிற்குச் செய்த அத்துமீறல்களைப் பற்றி அட்டைப்படக் கட்டுரையில் இரசித்து எழுதின. மேலும் பிரபல மானவர்களின் பாலுறவுக் கதைகளுக்கு உலகு தழுவிய சந்தையிருப்பதால் டயானா, மைக்கேல் ஜாக்சன் போன்ற நட்சத்திரங்களின் தருணங்க ளுக்குப் பத்திரிக்கைகள் காத்திருக்கின்றன. இங்கேயும் இவை ஒரு மனிதனின் பாலுறவு ஒழுக்கம் குறித்துக் கூட விவாதிப்பதில்லை. டயா னாவுடன் இன்பம் துய்த்த அந்த அதிர்ஷ்டசா லிகள் யார் என்ற ஆவலையே அதிகரிக்கின்றன. இப்படி அண்டை வீட்டின் அந்தரங்கத்திலிருந்து அரண்மனையின் அந்தப்புரம் வரை பாலுறவின் கதைகள், ஈடுபாட்டுடன் வாசிக்கப்படும் ரச னையில் முதல் இடத்தைப் பெறுகின்றன.

ஓட்டுக் கட்சிகளின் அரசியல் ஒழுக்கத் தையும், தலைவர்களின் பாலுறவு ஒழுக்கத் தையும் சம விகிதத்தில் கலந்து 'கவர்ச்சியான ஆபாசத்தில்' அடுக்கு மொழியில் முழங்கும் தீப்பொறி ஆறுமுகம் (தற்போது அ.தி.மு.க.), வெற்றி கொண்டான், நன்னிலம் நடராசன் போன்ற பிரச்சார பீரங்கிகளே தி.மு.க.வின் பிரச் சார பலம். எல்லாக் கட்சியினரும் அணிதிரண்டு வரும் இப்பேச்சாளர்களின் தரத்திற்கும், பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துக் கொண்ட தி.மு.க.வின் அரசியல் தரத்திற்கும் பெரிய வேறு பாடு இல்லை. பெண்ணினமே கூனிக் குறுகும் வண்ணம் புரட்சித் தலைவியை வார்த்தைகளால் வருணித்த தீப்பொறியை அதே தலைவி அ.தி.மு.க.வில் அரவணைத்துக் கொண்டதும் இப்படித்தான். அரசியல் வேறுபாடு கடந்து இந்த ஆபாசப் பேச்சுக்களை மக்கள் ரசிப்பது தமிழக



**சமூகத்தோடும், அரசியலோடும் எழும் பிரச்சினையை ஜனநாயகப் பூர்வமாகச் சந்திக்காமல் அற்ப விசயங்களை அந்தரங்கமாகப் பேசிக் களிக்கும் பண்பு இரத்தத்தோடு கலந்து விடுகிறது. இதுவே ஒரு தனிநபர் சக மனிதர்களை கிசுகிசுக்களால் அலட்சியம் செய்துவிட்டு சமூக உறவையும் வைத்துக் கொள்ளும் ஒரு அருவருப்பான பண்பை புழக்கத்திற்கு விடுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் - ஒழுக்கத்தின் தரமாக இருக்கிறது.

அரசியலற்ற, சமூக நோக்கமற்ற கண்ணோட்டத்தை உருவாக்குவதில் பாலுறவுக் கண்ணோட்டம் பாரிய பங்கை ஆற்றுகிறது. இது பொது வாழ்க்கை குறித்த ஒரு தனிநபரின் கண்ணோட்டம் மட்டுமல்ல. குடும்பம், உறவினர், அண்டை அயலார், நண்பர்கள் ஆகியோருடன் உறவு கொள்ளும் ஒரு சொந்த வாழ்க்கைக் கண்ணோட்டமாகவும் வினையாற்றுகிறது. சக மனிதர்களுடன் எழும் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பாலியல் பிரச்சினைகளாகத் திரிப்பதற்கு இன்றைய சமூக அமைப்பு மட்டுமல்ல, வரலாற்று ரீதியாகவும் ஒரு காரணம் இருக்கிறது.

வரலாற்றின் ஆரம்பத்தில் குழந்தைகளைப் பெற்றுத் தரும் பெண் மனிதர்களை உற்பத்தி செய்யும் ஒரு சொத்தாகக் கருதப்பட்டாள். இந்தச் சொத்தை அழித்தால் ஒரு குலம் அழியும், கைப்பற்றும் குலம் வளரும் என்று தொடங்கியது வரலாறு. பின்னர் நிலவுடைமைக் காலத்தில் குறிப்பிட்ட ஆணின் சொத்தை அவனது ஆண் வாரிசுகளுக்கு மட்டும் மாற்றித்தரும் 'கற்புள்ள' சொத்தாக பெண் மாற்றப்பட்டாள்.

அப்புறம், ஒரு ஆணின், குடும்பத்தின், சாதியின், மதத்தின் கௌரவமாக, இனத்தூய்மையாக, கலப்பற்ற இரத்தமாக, பெண் மாறினாள். ஒரு பெண் கற்பழிக்கப்படும் போது இந்த இனத் தூய்மை அழிகிறது; தனது சாதி இரத்தத்தை எதிர்ச் சாதியில் நுழைக்க முடிகிறது; முடிவில், எதிர்ப்பிரிவு ஆண்களை நிலைகுலைய வைக்கவும் செய்கிறது.

அன்று தோற்றுப்போன இராஜபுத்திரர்களின் இனத் தூய்மையைக் காப்பாற்றவே அக்குலப் பெண்கள் கும்பலாகக் கொளுத்தப்பட்டார்கள். அதற்கும் முன்பு, ஒரு சலவைத் தொழிலாளி சீதையின் கற்பைக் கேள்விக்குள்ளாக்கினான் என்பதற்கு சீதையை உயிரோடு கொளுத்தினான் இராமன். மேல் சாதிப் பெண்களுக்கும் கீழ்ச்சாதி ஆண்களுக்கும் கள்ள உறவில் பிறந்தவர்களை சூத்திரர்கள் என்று பார்ப்பனியம் ஒதுக்கியது. சில முசுலீம் இளைஞர்கள் 'இந்து'ப் பெண்களைக் காதலித்து மணம் செய்ததற்காகப் பல கலவரங்களை இந்துமதவெறியர்கள் நடத்தியிருக்கிறார்கள்.

இன்றும் 'கள்ளக் காதல்' விவகாரங்களில் சமூகம் கேலி செய்யுமோ என்ற அச்சமும், அவமான உணர்வும்தான் ஒரு ஆணை கொலை செய்ய வைக்கிறது. பெண்ணை மையமாக வைத்து உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் பாலுணர்வு ஒழுக்கம் குறித்த அச்சம் ஒரு ஆணுக்கு கௌரவக் குறைவாகவும், பெண்ணுக்கு வாழ்க்கைப் பிரச்சினையாகவும் ஆகி விடுகிறது. ஒரு பிரச்சினையை சமூகக் தளத்தில் வைத்து யதார்த்தமாகச் சந்திக்கத் துணிவின்றி, தப்பித்துக் கொள்வதற்கு ஒரு சுலபமான ஆயுதமாகவும் இது இருக்கிறது. இதையே கண், காது, மூக்கு வைத்து பேசும்போது ஒரு சுவாரசியமான பொழுதுபோக்காகவும் மாறி விடுகிறது. இதனால் இறுக்கமான சாதியச் சமூகமாக வாழும் நம் மக்களிடையே பாலுறவு குறித்த கிசுகிசுக்கள் - அவதூறுகளின் பாதிப்பு அதிகம் என்பது கூடுதலான சோகம்.

முக்கியமாக, பேசப்படும் ஒவ்வொரு அந்தரங்க விசயங்களிலும் ஒரு பெண்ணே அதிகமும் பாதிக்கப்படுவதால் பல பாலியல் வன்முறைகள் குற்றங்களாகப் பதிவு செய்யப்படுவதில்லை. உயர் பதவிகளில் திறமையினாலும், நேர்மையினாலும் பெயரெடுக்கும் பெண்களை ஒழுக்கமற்றவள் என்ற ஒரு சொல் முடக்கி விடுகிறது. மனைவி நடத்தை கெட்டவள் என்று வரும் மொட்டைக் கடுதாசி கூட ஒரு கணவனை நடைப்பிணமாக்கி விடுகிறது; மனைவிக்கோ வாழ்க்கையே முடிந்தது போல் ஆகிறது. பாலியல் பிரச்சினைகள், வன்முறைச் செய்திகளை வெளியிடவும், வெளியிடாமல் இருப்பதற்கும் போலீசுக்கும் - பத்திரிக்கை நிருபர்களுக்கும் பணம் தரப்படுகிறது.

மொத்தத்தில் பாலியல் செய்திகள், கதைகள், வன்முறைகள், கிசுகிசுக்கள், வதந்திகள் ஒரு மாபெரும் பொழுதுபோக்கு இரசனையை மக்களிடம் உருவாக்கியிருக்கின்றன. இந்த அபாயகரமான இரசனை இத்துடன் மட்டும் முடிவதில்லை. பல துறைகளையும் வேறு வேறு அளவுகளில் பிடித்தாட்டத்தான் செய்கிறது.

எல்லாத் துறைகளையும் இந்தக் கிசுகிசு ரசனை கவ்வியிருப்பதன் காரணம் நமது சமூகத்திலிருக்கும் ஜனநாயகமற்ற உறவுகள்தான். கணவனுக்கு மனைவி அடிமை, பெற்றோருக்குப் பிள்ளைகள் அடிமை, ஆலமரத்தடிப் பஞ்சாயத்திற்குக் கிராமம் அடிமை, சாதிச் சங்கத்திற்குச் சாதிகள் அடிமை என்று ஒவ்வொரு துறையிலும் இந்த அடிமைத்தனம் பிரிக்க முடியாதபடி கலந்திருக்கிறது.

அடிமைகள் தரப்பில் மோதிப் பார்க்கத் துணிந்தவர்கள் ஜனநாயகத்திற்காக வெளிப்படையாகப் போராடுகிறார்கள். துணியாதவர்கள் ஆண்டைகளைப் பற்றிக் கிசுகிசுத்து மகிழ்கிறார்கள். ஆண்டைகளும் தங்கள் அதிகாரத்தைக் கேள்வி கேட்காத இந்தக் கிசுகிசுக்களை அனுமதிக்கிறார்கள். அதையே ஜனநாயகமென்று காட்டிக் கொண்டு உண்மையான ஜனநாயகத்தைத் தடை செய்கிறார்கள். இறுதியில் சக மனிதனோடும், சமூகத்தோடும், அரசியலோடும் எழும் பிரச்சினையை ஜனநாயகப்பூர்வமாகச் சந்திக்காமல் அற்ப விசயங்களை அந்தரங்கமாகப் பேசிக் களிக்கும் பண்பு இரத்தத்தோடு கலந்து விடுகிறது. இதுவே ஒரு தனிநபர் சக மனிதர்களை கிசுகிசுக்களால் அலட்சியம் செய்துவிட்டு சமுக உறவையும் வைத்துக் கொள்ளும் ஒரு அருவருப்பான பண்பை புழக்கத்திற்கு விடுகிறது.

கவிஞர் மனுஷ்ய புத்திரன், ''சமீபத்திய இலக்கிய கிசுகிசுக்கள் ஏதும் உண்டா, அப்படி இருந்தால் தெரிவிக்கவும், ரகசியம் காக்கப்



**உண்மையில் வெண்திரை உருவாக்கி இருக்கும் பாலுறவுக் கற்பனை சக மனிதனை உயிரும் உணர்வும் உள்ள தன் உயிரின நீட்சியாக நேசிப்பதில்லை. ஒரு பண்டமாகத் தான் பார்க்கிறது; ஆவேசமான வடிகாலாகப் பயன்படுத்துகிறது; அலட்சியம் செய்கிறது. ஆதலால் இங்கே மகிழ்ச்சியில்லை.**

www.padippakam.com

படும்,'' என்று ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தை குமுதம் பத்திரிகை முன்பு வெளியிட்டிருந்தது. 'இதயத்தின் அடி ஆழத்திலிருந்து வாழ்க்கையின் போதாமை குறித்து கவலைப்படும் ஒரு கவிமனத்தின் நாட்டமும், இரசனையும்' எப்படி இருக்கிறது. பாருங்கள்!

இப்படித்தான் தமிழ்நாட்டின் இலக்கியச் சிறு பத்திரிக்கைகள் அனைத்தும் எழுத்தாளர்களின் அரட்டை, வம்பு, குடி, அடி தடி, வண்டவாளங்கள், சேட்டைகள் போன்றவற்றை வைத்தே இயங்குகின்றன. சிறுபத்திரிகை வாசகர் விரும்பியும் - எதிர்பார்த்தும் படிப்பது இந்தக் கிசுகிசுக் களைத்தான்.

ம.க.இ.க. முதலான புரட்சிகர அமைப்புக்களை விமர்சனம் செய்யும் பொழுதுபோக்கு வெட்டி அரசியல் குழுக்களும் இந்தப் பாணியில்தான் கிசுகிசுக்கின்றன. ''அந்தத் தோழர்மீது நடவடிக்கை எடுத்து விட்டார்களாமே, இந்தத் தோழர் இப்போது அமைப்பில் இல்லையாமே, அந்தத் தோழர் இன்ன சாதியாமே'' என்று காதருகே உரைக்கும் இந்த வெட்டிக் குழுக்கள் புரட்சிகர அரசியலையும் - நடைமுறையையும் நேரடியாக எதிர்கொள்ளத் துணிவின்றி இந்த வழிமுறைகளைக் கையாளுகின்றன. இக்குழுக்களின் சோம்பிக் கிடக்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய அணிகளின் வேலைத்திட்டமே இந்தக் கிசுகிசு அரசியல்தான்!

எனவே அந்தரங்கச் செயல்களை ரசனையுடன் பேசும் இப்பண்பு சமூகத்தின் சகல அரங்குகளையும் ஆட்சி செலுத்துவதன் விளைவாக மனிதர்களுக்கிடையே உண்மையான உறவுகள் நசித்துப் போயுள்ளது. குறிப்பாக, நகரத்து மனிதர்கள் செயற்கையாகப் பழகுவதும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதும், பிரச்சினைகள் வரும்போது உள்ளுக்குள்ளேயே புழுங்குவதும், திடீரென வன்முறையாளனாக மாறுவதும், முடிவில் வாழ்க்கையை தற்கொலை மூலம் முடிப்பது அல்லது நடைப்பிணமாக வாழ்வது என்றும் முடிவுக்கு வருகிறது.

**கனவுலகப் பாலுணர்வின் பிரச்சினைகள்**

ஏற்கெனவே பார்த்தது போல சுற்றியிருக்கும் உலகிலிருந்து பாலுறவுத் தகவல்கள் பல நூறு வழிகளில் ஒரு மனிதனின் சிந்தனையில் இறங்குகிறது. இறக்குமதியானவை வினையாற்றாமல் சும்மா இருப்பதில்லை. இவை இளைஞர்களின் விடலைப் பருவத்திலிருந்தே பாலுணர்வு குறித்த கற்பனைகளை மெல்ல மெல்லக் கிளப்பி விடுகின்றன. இளைய பிரிவினரின் கணிசமான நேரத்தை ஆக்கிரமித்திருக்கும் இக்கற்பனைகள் பாலுறவின் யதார்த்தமான சித்திரத்தை அழித்துவிட்டு அதீதப் புனைவுடன் மிகையான குழப்பமான சித்திரத்தை உருவாக்குகின்றன. இது அதிகரிப்பதற்கேற்ப அவர்கள் அந்நியப்படுவதும் ஆளுமை பலவீனமாவதும் நடந்தேறுகிறது.

எந்தச் சமூகத்தில் ஆணும் பெண்ணும் கறாராகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்களோ, பேசவும் - பழகவுமான வாய்ப்புக்கள் தடை செய்யப்பட்டிருக்கிறதோ அங்கே எதிர்பாலினைக் குறித்த கவர்ச்சியும், கற்பனையும் அதிகமிருக்கும். ஆனாலும் வீட்டிலிருந்தாலும், வேலைக்குச் சென்றாலும் 'இல்லறமே நல்லறமென'ப் போதிக்கப்பட்டிருக்கும் பெண்கள் ஆண்களின் உடம்பு குறித்து அதிகம் அலட்டுவதில்லை. மாறாக, வாழ்க்கையின் இன்ப - துன்பம், வசதி - வாய்ப்பு குறித்து 'கருணை' காட்டும் ஆண்கள் மீதுதான் சற்று உணர்ச்சிவசப்படுகிறார்கள். ஆணுக்கோ பெண்ணுடம்பு குறித்து மோகம் கொள்வதே முதன்மையாக இருக்கிறது.

ஆணுலகு கற்பனை செய்யும் பெண்ணுடம்பின் பகுதிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை சினிமா உருவாக்குகிறது. பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் அதை ஒளிவட்டம் போட்டுக் கவனப்படுத்துகிறது. தொடைக்கு ரம்பா, இடுப்புக்கு சிம்ரன் - ஐஸ்வர்யா ராய், மார்பகத்துக்கு மந்த்ரா, கண்களுக்கு பானுப்பிரியா - சிலுக்கு, அப்புறம் மூக்கு, உதடு, கை - கால்கள் என்று ஒன்றுகூடப் பாக்கியில்லாமல் அத்தனை உறுப்புக்களும் மிகையான கற்பனையால் கிளர்ச்சியூட்டும் விதத்தில் பதிந்து போகின்றன. பொது இடங்களில் சந்திக்கும் போதெல்லாம் ஆண்கள் வெறித்துப் பார்ப்பதும், அல்லது நாகரிகமான முறையில் பட்டும் படாமலும் பார்ப்பதும், பெண்கள் ஜாக்கெட்டை இழுத்து விடுவதும், மாராப்பைச் சரி செய்வதும் இயல்பான சமூக நடைமுறைகளாகி விட்டன. ஆண்களுக்காக அடுப்புக் கரண்டியைப் பிடிப்பதில் அதிக நேரம் செலவழிக்கும் பெண்களின் கைகள், அதற்கடுத்து உடைகளைச் சரிசெய்வதிலேயே ஓய்ந்து போகின்றன.

ஆணைப் போலவே சிறுநீர், மலம், வியர்வை, ரத்தம், சளி அடங்கிய இயல்பான பெண்ணுடம்பு குளிர்பதனப் பெட்டியில் வாடாமல் வைக்கப்பட்டிருக்கும் 'ரோஜாவை'ப் போல மனதில் பதியன் செய்யப்படுகிறது. அடுத்து இந்த 'ரோஜாவை' நுகருவதற்கு, உண்மையில் கசக்குவதற்கு மிகை யதார்த்தக் காட்சிகள் இளையோரின் அகஉலகில் கட்டப்படுகின்றன. முத்தமும், உடலுறவும் வெண்திரையின் நிழலில் ஆவேசத்துடன் நிஜம் போல ஆடுகின்றன. பலியாடுகளைப் போல உறவு கொள்ளும் மலையாள 'ஏ' படங்களை விட படுநேர்த்தியாகக் கிளர்ச்சியூட்டும் ஹாலிவுட் படங்கள் நனவுலகிற்குப் புறம்பான கற்பனையைத் தூண்டி விடுகின்றன.

நாம் உணருவது போல அந்தப் படங்களில் இருவர் 'உண்மையில்' உறவு கொள்வதில்லை; நடிக்கவே செய்கிறார்கள். அதன் பின்னே பலரது சோடனைத் திறமையும், தொழில்நுட்பமும் சேர்ந்திருக்கிறது. ரம்மியமான ஒளி, மென்மையை நுட்பமாக உணர்த்தும் ஒலி, நேர்த்தியான படத்தொகுப்பு, மறக்க முடியாத 'மூடுகள்', விரகதாபத்தை மிகையாக வெளிப்ப



**முழு உலகமும் - அந்தப் பெண்களும் சகஜமாய் இருக்கும்போது, தான் மட்டும் காமத்திற்கு ஆட்படுவது குறித்து குற்ற உணர்வு ஏற்படுகிறது. இந்த முரண்பாட்டில் இருந்து வெளிவருவதற்கு ஏற்ற சமூக நடவடிக்கைகள் இல்லாதபோது இளைஞர்கள் தனிமைப்படுவதில் போய் முடிகிறது.**

www.padippakam.com

டுத்தும் அபிநயங்கள் எல்லாம் சேர்ந்து பாலுறவின் உணர்ச்சியை யதார்த்தத்திலிருந்து பல அடி உயரத்திற்கு ஆவேசமான அலையாக எழுப்புகின்றன.

ஆனால் யதார்த்தமான ஒரு பாலுறவில் இவையெல்லாம் சாத்தியமேயில்லை! டபிள்யூ. டபிள்யூ. எஃப் (WWF) மாமிச மலைகளின் மல்யுத்தக் காட்சிகள் தொடங்குமுன், ''இது எங்கள் தொழிற்முறை வீரர்களின் அதி உயர் பயிற்சியினால் நடத்தப்படும் சண்டைக் காட்சிகள். இதைப் பார்த்துச் சண்டை போடுவது உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும்'' என்று எச்சரிக்கை வெளியிடுகிறார்கள்; படுக்கைக் காட்சிகளுக்கு அப்படிப் போடுவதில்லை - அவ்வளவுதான்.

உண்மையில் வெண்திரை உருவாக்கியிருக்கும் பாலுறவுக் கற்பனை சக மனிதனை உயிரும் உணர்வும் உள்ள தன் உயிரின நீட்சியாக நேசிப்பதில்லை. ஒரு பண்டமாகத்தான் பார்க்கிறது; ஆவேசமான வடிகாலாகப் பயன்படுத்துகிறது; அலட்சியம் செய்கிறது. ஆதலால் இங்கே மகிழ்ச்சியில்லை. வெறியைத் தணிப்பது மட்டும்தான் நடக்கிறது.

இருப்பினும் பெண்ணுடம்பு, உறவு பற்றி இளைஞர்களின் கற்பனையில் ஊண்மையைப் போல உருவாகும் இக்கண்ணோட்டம் இத்துடன் நிற்பதில்லை. மேலும் பயணம் செய்கிறது. அந்தக் கற்பனையில் உருவான பிம்பங்களையும், காட்சிகளையும் சமூக யதார்த்தத்தில் உரசிப் பார்க்கும் களனையும், பாத்திரங்களையும் 'செய்திகள்' என்ற பெயரில் பத்திரிக்கைகள் தருகின்றன.

வயதான கணவனிடம் வாடிப்போன மனைவி, ஆண்மையற்ற கணவனிடம் பெருமூச்சு விடும் மனைவி, வெளிநாட்டில் கணவன் - வாய்ப்பில்லாத மனைவி, கேபிள் டி.வி., விற்பனைப் பிரதிநிதிகள் மயக்கும் குடும்பப் பெண்கள், உடம்புச் சுகத்துக்கு ஏங்கும் மலையாளப் பெண்கள் - கிறித்தவக் கன்னியாஸ்திரீகள், உறவுக்கு ஒத்துழைக்கும் வேலைக்காரப் பெண்கள், மாணவனைக் காதலிக்கும் டீச்சர்கள், உறவை மறக்க முடியாமல் தவிக்கும் விதவைகள், வெளியூரில் தங்கி லீலை செய்யும் பெணகள், சாமியார்களின் நிர்வாண பூசைக்குச் சமர்ப்பணமாகும் வீட்டுப் பெண்கள், மெரினா, முக்கொம்பு, மருதமலையில் அவசரமாகத் தழுவும் காதலர்கள்.... என பார்வையில் பழக்கத்தில் தென்படும் அத்தனைப் பெண்களும் பத்திரிக்கைச் செய்திகளின் உதவியால் இளைஞர்களின் அகஉலகுக்குள் சென்று ஆசை காட்டுகிறார்கள்.

பருவமடைந்த பின் இயற்கையான உயிரினத் தூண்டலினால் அனைவரிடமும் ஏற்படும் பழக்கமான சுயஇன்பம் இத்தகைய காட்சி, கதைகளுடன் சேர்ந்து கொண்டு புதிய பரிணாமம் அடைகிறது. காணும் பெண்களையெல்லாம் இரகசியமாக மோகிப்பது ஒரு முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது. முழு உலகமும் - அந்தப் பெண்களும் சகஜமாய் இருக்கும்போது, தான் மட்டும் காமத்திற்கு ஆட்படுவது குறித்து குற்ற உணர்வு ஏற்படுகிறது. இந்த முரண்பாட்டிலிருந்து வெளிவருவதற்கேற்ற சமூக நடவடிக்கைகள் இல்லாதபோது இளைஞர்கள் தனிமைப்படுவதில் போய் முடிகிறது. இதில் ஒரு பிரிவு இளைஞர்கள் இவையெல்லாம் சகஜம்தானே என்று சமரசம் செய்து கொண்டு தேர்ந்த காரியவாதியாக மாறுகிறார்கள். அப்படி மாற முடியாமல் மனதுக்குள்ளேயே புழுங்கும் பெரும்பான்மை இளைஞர்கள், தாம் தவறு செய்கிறோமே என்ற அச்சத்துடனும், வாய்ப்பு கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்துடனும் வாழ்க்கையை மகிழ்ச்சியற்று நடத்துகின்றார்கள். கற்றும், உழைத்தும் தேர்ச்சியடைய வேண்டிய இளைஞர்களுடைய ஆளுமை வாடி வதங்குகிறது.

பாலுணர்வு குறித்த இந்தக் கற்பனைக் கண்ணோட்டம் ஆணுக்கும், பெண்ணுக்கும் எதிர் பாலினரைக் கவருவதையே முக்கியமான வாழ்க்கை வேலையாக மாற்றிவிட்டது. உடல், இடுப்பு, நகம், மார்பு, முகப்பரு, மஞ்சள் பல், வாய்நாற்றம், படியாத தலை, சுருளாத முடி, தேவையற்ற ரோமங்கள் என முடிவேயில்லாத உடல் பிரச்சினைகள். கூடவே உடை, அலங்காரம், செருப்பு, வாழ்க்கை முக்கியமான அங்கங்களாகி விடுகிறது. சமூகக் களத்தில் உருவாக வேண்டிய அழகு, நிலைக்கண்ணாடி முன் நெடு நேரம் நின்று ரசிக்கும் அவலமாகி விடுகிறது.

முடிவில் பாலுறவு குறித்த சமூக யதார்த்தத்திற்கும், அகநிலையில் உருவாகும் கற்பனைச் சித்திரத்திற்குமுள்ள முரண்பாடு காதல், திருமணம், தாம்பத்திய வாழ்க்கையைக் கடுமையாகப் பாதிக்கிறது. அதிலிருந்து இதுதானா, இவ்வளவுதானா என்று அதிர்ச்சியுறும் அறிவு எது உண்மை, எது பொய் என்பதைப் புரிந்து கொள்வதற்குள் வாழ்க்கை எங்கோ போய்விடுகிறது; சில நேரங்களில் முடிந்தும் போகிறது.



**பாலுணர்வு குறித்த இந்தக் கற்பனைக் கண்ணோட்டம் ஆணுக்கும், பெண்ணுக்கும் எதிர்பாலினரைக் கவருவதையே முக்கியமான வாழ்க்கை வேலையாக மாற்றிவிட்டது. சமூகக் களத்தில் உருவாக வேண்டிய அழகு, நிலைக்கண்ணாடி முன் நெடுநேரம் நின்று ரசிக்கும் அவலமாகி விடுகிறது.**

**வி**ழுப்புரமருகே லாரி ஓட்டுநராக இருக்கும் ஒரு இளைஞன் ஆந்திராவின் விபச்சாரி ஒருத்தியிடம் ஒரு புதிய அனுபவம் அடைகிறான். அவள் தான் கற்பழிக்கப்படுவது போலத் தயாரிக்கப்பட்ட ஒரு நீலப்படத்தைக் காண்பித்து மகிழ்ச்சியளிக்கிறாள். ஊர் திரும்பிய அவன் பின்னர் தன் உறவுப் பெண்ணொருத்தியைக் காதலித்து மணக்கிறான். முதலிரவில், அந்த ஆந்திர அனுபவத்தை அரங்கேற்ற முயல்கிறான். அவள் மீது பாய்ந்து உடைகளைக் கிழிக்கிறான். மணமகள் வீறிட்டலறுகிறாள். அவமானத்தில் கூனிக் குறுகியவன் மண்ணெண்ணெயைத் தன் மேல் ஊற்றிக் கொண்டு, 'கற்பழிப்புக்கு' உடன்படாவிட்டால் தீக்குளிக்கப் போவதாக அவளை மிரட்டுகிறான். தவறுதலாகத் தீப்பிடித்து எரிகிறான். மருத்துவமனை வாக்குமூலத்தில், ''என் மனைவி நல்லவள், நான்தான் விளையாட்டாய் இப்படிச் செய்து விட்டேன்'' என்று பேசிவிட்டு ஒரிரு நாட்கள் கழித்து செத்தும் போனான்.

❑ வேல்ராசன்

www.padippakam.com

# பாலியல் வன்முறை:

## மனநல மருத்துவர் ருத்ரனிடம் சில கேள்விகள்

● *சமீபகாலமாகப் பத்திரிக்கைகளில் பாலுணர்வு வன்முறை பற்றிய செய்திகள் அதிகம் வருகின்றன. எனவே இளைய சமுதாயத்தில் பாலியல் வெறி உருவாக்கப்பட்டு அதிகரித்து வருகிறது என்பது உண்மையா?*

○ சமீப காலமாகப் பத்திரிகைகளில் பாலுணர்வு வன்முறை பற்றிய செய்திகள் அதிகம் பிரசுரிக்கப்படுவதற்கு அவர்களது வியாபார நோக்கமே காரணம். அடிக்கடி இப்படிச் செய்திகள் வருவதால் வாழ்க்கையில் இது ரொம்பச் சாதாரணம் என்ற எண்ணம் உருவாக வாய்ப்புள்ளது. ஆரம்பத்தில் இவ்வகைச் செய்திகள் அதிர்ச்சி தரலாம்; தொடர்ந்து அவை வெளியாகும் போது அதிர்ச்சியோ கோபமோ வராமல் வெறும் செய்தி வாசிப்பாக இவை மாறிவிடும். உள்ளுக்குள் பாலுணர்வுக் குழப்பங்கள் ஏற்படும் விடலைப் பருவத்தில் இவ்வகைச் செய்திகள் விபரீதங்களின் மேல் ஓர் ஆர்வம் ஏற்படவும் காரணமாகி விடும். மொத்த இளைய சமுதாயமும் இதனால் வெறி ஊட்டப்பட்டு விடாது. தடுமாற்றமான மனநிலை உள்ள இளைஞர்கள் இதனால் திசை திருப்பப்படலாம்.

● *வயது வந்தபின் திருமணம், குடும்பம் போன்ற சமூகக் கட்டுப்பாடுகளுக்கும், இன்றைய இளைஞர்களின் அக உலகிற்கும் உள்ள முரண்பாடு தற்போது எப்படி - என்னவாக இருக்கிறது? ஏன்?*

○ இன்றைய இளைஞர்களுக்குச் சமுதாயக் கட்டுப்பாடுகளை விட சமுதாய அங்கீகாரம் தான் முக்கியமாகி விட்டது. அந்த அங்கீகாரம் பணத்தினால் மட்டுமே அளவிடப்படுகிறது. பணத்தின் பின் அலையும் மனப் போக்கில் சமூகக் கட்டுப்பாடுகளை மீறுவதில் குற்ற உணர்வு ஏற்படாது.

● *ஆணும் பெண்ணும் உடலுறவுக்காக மட்டும் தொடர்பு வைப்பது எனும் போக்கு அதிகரித்துள்ளதா? ஏன்? எந்தப் பிரிவினரிடத்தில். (மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கம், பணக்காரர்கள்)*

○ விவசாயிகளும் பணக்காரர்களும் என்னிடம் அதிகம் வருவதில்லை. என் பார்வையில் இந்தப் போக்கு நடுத்தர வர்க்கத்து இளைஞர்களிடமும் மாணவர்களிடமும் அதிகரித்துள்ளதாகப்படுகிறது.



நடுத்தர வர்க்கம் மேல்வர்க்கத்தை நோக்கியே வாழ்வை இயக்குகிறது. மேல்தட்டோ மேல்நாட்டையே வாழ்க்கையின் தர நிர்ணயமாகக் கருதுகிறது. இதனால் உடலுறவுக்காக மட்டும் தொடர்பு என்பது தவறல்ல என்னும் (தவறான) கருத்து பரவியிருக்கிறது. மேலும் கூட்டுக் குடும்ப அமைப்பு இல்லாததால் வீட்டில் தனிமையில் இத்தகைய உறவுகளுக்கும் வாய்ப்புகள் சற்றே சௌகரியமாகி விட்டன.

● *திருமணமான தம்பதியினரிடத்தில், மண வாழ்க்கைக்கு வெளியே உறவு வைத்துக் கொள்ளும் போக்கு அதிகரித்திருப்பதாக இந்தியா டுடே, அவுட் லுக் போன்ற பத்திரிகைகள் 4 மாதத்திற்கு ஒரு கட்டுரை வெளியிடுகின்றன.*

*இது உண்மையா? ஏன்? உங்கள் மருத்துவ அனுபவத்திலிருந்து பதில் தருக.*

○ இன்றைய சமுதாயத்தில் ஆண் - பெண் இருவரும் வேலை செய்யும் சூழலில் அவர்களிடையே பழகும் நேரமும் பழக்கமும் அதிகம். இதனாலேயே மணவாழ்க்கைக்கு வெளியே உறவு அமைவதும் சாத்தியமாகிறது. நான்கு மாதத்திற்கு ஒருமுறை பத்திரிக்கைகள் செய்தியாக்குவதற்கு அவர்களுடைய வியாபார மனப்பான்மையும் விற்பனை நிர்ப்பந்தமும் தான் காரணம். இத்தகைய செய்திகள் வெளியாகும் பத்திரிக்கைகள் விற்பனையும் சற்றே அதிகரிப்பதற்கு மக்களிடம் உள்ள மட்டமான ஆர்வம்தான் காரணம். இத்தகு செயல்களில் ஈடுபட்டால் என்ன, யார் ஈடுபடுகிறார்கள்..., ஒரு வேளை நாம் ஏதாவது சந்தர்ப்பத்தை விட்டு விடுகிறோமா என்ற கேள்விகளே இந்த ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

● *ஆண்களுக்கு ஷகிலா, பெண்களுக்கு அழுகை வானொலித் தொடர் என்ற முரண்பாடு ஏன்?*

○ ஆண்களுக்கு ஷகிலா மோசமான வடிகால். ஆனால் பெண்களுக்கு இம்மாதிரி சுலபமான ஆண் பிம்பங்கள் அமைவதில்லை. பெண்ணின் உடல் கண்டு ஆண் உணர்ச்சி வசப்படுதல் போல அவ்வளவு எளிதாகப் பெண்களுக்கு ஆணின் உடல் மீது மோகம் வருவதில்லை.

பெண்களுக்கு அழுகை சீரியல் வேறு விஷயம். முன்போல அக்கம் பக்கம் சொந்தம் - பந்தம் என்று பேசிக் கொண்டிருக்கும் சாத்தியங்கள் இப்போது குறைவு. தான் பேசாவிட்டாலும் தன்னுடன் பேச, கதை சொல்ல டி.வி. தான் துணையாகிறது. அழுகை மனத்துள்ள அழுத்தத்தைக் குறைக்கும். தன்னைப் பற்றி அழுவதைவிட டி.வி. கதாபாத்திரத்திற்காக அழுவது தனக்கே நாகரிகமாகத் தெரியும். இது எப்போதாவது நிகழ்ந்தால் ஆரோக்கியமாகக் கூட இருக்கலாம். இப்போது போல் தினமும் தொடர்ந்து மணிக்கணக்காக அழ நேர்ந்தால் அது மனதைப் பாதிக்கும். டி.வி.யின் நிழல் உறவுகளில் நெருக்கம் அதிகரித்தால் வாழ்க்கையின் நிஜ உறவுகளில் ஒரு நெருடல் ஏற்படும்.

● *பாலியல் பிரச்சினைகள் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தினை எப்படி - எந்த வகையில் பாதிக்கிறது?*

○ பாலினப் பிரச்சினைகள் ஒரு மனிதனின் இளமை முதல் நடுவயது வரை மனத்தளவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. இளமையில் கல்வியும் வாலிபத்தின் அடுத்த கட்டத்தில் உழைப்பும் பிறகு சமூகப் பொறுப்புமே மானுட வளர்ச்சிக்குக் காரணமாகுபவை. மனத்தளவில் எந்த ஒரு பிரச்சினை இருந்தாலும் அது செயலளவில் பாதிப்பு ஏற்படுத்தும்.

கல்வியோ வேலையோ - கவனக் குறைவு இருந்தால் சரியாக அமையாது.

பாலியல் பிரச்சனைகள் மனிதனுள் வெட்கம், குற்றஉணர்வு, அச்சம், வருத்தம் ஆகியவற்றைத் தூண்டும். இதனால் கவனக் குறைவும் மன அழுத்தமும் ஏற்படும்.

தனிமனிதர்களின் பாதிப்பு ஒரு தலைமுறையையே பாதிக்கும். உண்மையாகவே பிரச்சினைகள் இருந்தால் அதை முறையாகத் தீர்க்க முயல வேண்டும். இன்று பாலியல் வியாபாரமாகச் செய்திகள் அரைகுறையாக வெளிவருவதால் அது சீர்தூக்கிப் பார்க்கத் தெரியாத மனத்துள் சிக்கல்களை உருவாக்கும். இந்தச் சிக்கல்


padippakam

www.padippakam.com

## 21-ஆம் ஆண்டில்... புதிய கலாச்சாரம்

இந்த இருபது ஆண்டுகளில் காலத்துடன் அரசியலும், பண்பாடும் நிறையவே மாறியிருக்கிறது. அந்த மாற்றத்தை மக்கள் நோக்கிலிருந்தும், மார்க்சிய - லெனினிய அடிப்படையிலிருந்தும் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டமாக - ஒரு கூரிய விமர்சனக் கண்ணோட்டமாக இயன்ற அளவில் புதிய கலாச்சாரம் உருவாக்கியிருக்கிறது. நாம் உருவாக்க விரும்பும் புதிய ஜனநாயக சமூகத்தின் பண்பாடு எப்படி இருக்க வேண்டும் என்ற ஒரு சமூக படைப்பாக்கத்தின் கூறுகளும் அந்தக் கண்ணோட்டத்தில் அடங்கியிருக்கிறது. சாதி, மதம், திரைப்படம், தொலைக்காட்சி, இசை, காதல், குடும்பம், அமெரிக்க மோகம் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதிலும், மாற்றுக்களைத் தேடுவதிலும் முன் வைக்கப்படும் பலவீனமான, வறட்டுவாதப் பார்வைகளிலிருந்து பு.க. வேறுபடுகிறது. அந்தப் பார்வையும் பண்பாடும் வாசகர்களின் சொந்த உணர்வில் உருவாகி அவர்களே மகிழ்ச்சியுடன், துணிவுடன் போராடுவதில் இருக்கிறது. அந்தப் போராட்டத்துக்குகந்த ஆயத்தை இந்த இருபது ஆண்டுகளில் மென்மேலும் பு.க. கூர்மைப்படுத்தி வருகிறது. அவ்வகையில் எமது இதழ் - பத்திரிக்கை என்ற கருத்து நிலையிலிருந்து ஒரு அடைப்பாளனாக சிறு அளவிலான பௌதீக சக்தியாக உருவெடுத்திருக்கிறது. வாசகர்களும் வாசக நிலையிலிருந்து செயல்பாட்டு நிலைக்கு கணிசமாக உயர்ந்திருக்கிறார்கள்.

இந்தப் பயணத்தைச் சாத்தியப்படுத்திய வாசகர்களுக்கும், தோழர்களுக்கும் எமது நன்றியையும், புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். இதழ் விநியோகத்தை மேலும் விரிவாக்குவதற்கும், உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும் வாசகர்கள் தீவிரமாகப் பங்களிக்குமாறு உரிமையுடன் கோருகிறோம்.

பு.க.வின் இருபது ஆண்டுப் பயணத்தில் உற்சாகத்துடன் பங்கெடுத்திருக்கும் வாசகர்கள் மற்றும் தோழர்கள் தங்களது மாற்றத்தை குறிப்பான பொருளில் விரிவாக எழுதி அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறோம். தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் வரும் இதழ்களில் இடம்பெறும்.

தோழமையுடன், ஆ.குழு

---

குடும்பத்துள் பிரச்சனைகளை உருவாக்கும் - செயல்திறனையும் பாதிக்கும்.

● *டாக்டர் நாராயண ரெட்டி, டாக்டர் மாத்ருபூதம் போன்ற பாலுணர்வியல் மருத்துவர்கள், பாலுணர்வுப் பிரச்சினைகளை அதிகமும் உடலுறவு டெக்னிகல் பிரச்சினைகளாக மட்டும் பார்க்கிறார்கள். இது தங்களுக்கு உடன்பாடானதா? ஏன்?*

○ பாலுணர்வு வெறும் உடல் சார்ந்த விஷயமல்ல. மனத்தின் பல்வேறு உணர்ச்சி நிலைகளின் ஒரு வெளிப்பாடே பாலுணர்வு. இதை டெக்னிகல் உறுப்புகளில் குறை - சரிசெய்வது என்று பார்ப்பது முழுமையான பார்வை ஆகாது. ஒருவேளை அப்படிப் பார்த்தால் அந்த விவரிப்பு மனவியல் அலசலை விடவும் கிளர்ச்சியூட்டக் கூடியதாக இருக்கலாம். ஆனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அது உதவாது.

● *பாலியல் பிரச்சினைகளில் பிரதான பங்கு வகிப்பது செக்ஸ் எனப்படும் உயிரியல் காரணமா அல்லது சமூகம் எனப்படும் சமூகவியல் காரணமா? பாலியல் பிரச்சினைகளிலிருந்து இளைஞர்களை மீட்பதற்குத் தாங்கள் கூறும் தீர்வு - வழிமுறைகள் என்ன?*

○ சமூகம் உருவான காலத்திலிருந்தே செக்ஸ் என்பதும் இருந்து வந்திருக்கிறது. காலமாற்றங்களால் சமூக அமைப்பும் செயல்பாடும் மாறினாலும் செக்ஸ் என்பதன் தன்மையில், முறையில் மாறுதல்கள் கிடையாது.

சமூக மாற்றங்களாக - நாகரிக அடையாளங்களாக வெறும் உடையளவில் வந்துள்ள அனுமதியினால் செக்ஸ் உணர்வுகள் எளிதில் தூண்டப்படுகின்றன. தூண்டப்பட்டால் அதற்கு முறையான வடிகால் அவசியம். முறையான வழிமுறை இல்லாதபோது மனம் குறுக்கு வழிகளை நாடும். வாய்ப்பு கிடைத்தால் பயன்படுத்தும். இதைத் தடுக்க மனத்தைப் பக்குவப்படுத்த வேண்டும்.

அழகிப் போட்டி என்ற பெயரில் ஆபாசங்களை அனுமதிப்பது இப்போது அதிகரிக்கிறது. நாகரிக வேகத்துக்கு நடைபோட 'ஆசாரங்கள்' கூட தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகின்றன. அந்தரங்கங்கள் பகிரங்கமாவதும் அதை டி.வி. பத்திரிக்கை மூலம் அனைவரும் ரசிப்பதும் ஒரு கேவலமான சமூக நிலைமையையே காட்டுகிறது. பணம் இருந்தால் எதுவும் செய்யலாம் என்ற திமிர், பணத்துக்காக எதையும் செய்யலாம் என்ற கேவலத்தையே தூண்டும். சற்று சிந்தித்தால் இந்நிலை மாறும். ஆனால் மக்களுக்கு இப்போது சிந்திக்க அவகாசம் மறுக்கப்படுகிறது. டி.வி. ஆக்கிரமிக்காத நேரத்தை ஆசைகளுக்காக அலைய வேண்டிய போலி நிர்ப்பந்தங்கள் ஆக்கிரமிக்கின்றன.

சிந்திப்பதைவிட அதுபோன்ற மாயையை உருவாக்க டி.வி.யும் பத்திரிக்கைகளும் முனைகின்றன. கதையல்ல நிஜம் போன்ற ஒரு நிகழ்ச்சி வெற்றி பெறவும் இதுதான் காரணம். பக்கத்து வீட்டுப் பிரச்சினையை எட்டிப் பார்த்து ரசிக்கும் கேவலம் தான் இதன் அடிப்படை. வாழ்க்கைக்கு வழிகாட்டுதல் போல ஒரு போலி ஆலோசனை நிகழ்ச்சிக்கு மக்கள் ரசனையைக் காட்டுவது அடிப்படையில் ஆபத்தானது. இந்நிகழ்ச்சியிலும் பாலுணர்வுப் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன. அதைக் குடும்பம் முழுதும் உட்கார்ந்து பார்க்கிறது, அதைப் பற்றிப் பேசுகிறது. பேசுவதற்கும் சிந்திப்பதற்கும் ஆரோக்கியமான அவசியமான விஷயங்கள் இருந்தும் இவர்கள் அவற்றை ஒத்தி வைக்கிறார்கள்.

இலக்கியம் என்ற புனைபெயரிலும் வக்கிரங்கள் விற்கப்படுகின்றன. இதிலும் இளைஞர்கள் மாட்டிக் கொள்கின்றனர். செய்தி என்ற பெயரில் செக்ஸ் வியாபாரம் நடைபெறுகிறது. இவை பற்றியெல்லாம் தெளிவிருந்தாலே பாதி பிரச்சினைகள் வராது.

அப்படியே பிரச்சினை ஏற்பட்டாலும் அதைத் தீர்க்க, உதவ தேர்ந்த நிபுணர்கள் இருக்கிறார்கள். சுவர் விளம்பரங்களும் போலி மருத்துவமும் பல இளைஞர்களைக் குழப்புகிறது.

இது போலவே போலி ஆன்மீகம் இப்போது பரவிவரும் பிரச்சினை. மனித இயல்புகளில் ஏற்படும் பாலுணர்வுகளை ஒரு பக்கம் ''தப்பு... சாமி கண்ணை குத்தும்'' போன்ற பிரச்சாரங்களும், மறுபக்கம் எல்லையில்லா நிர்வாணம் நோக்கிச் சமூக நியதிகளை மீறலாம் என்னும் பிரச்சாரமும் இளைஞர்களைக் குழப்புகிறது.

விழிப்புணர்வு வேண்டும், வளர்க்கப்பட வேண்டும். ❑


படிப்பகம்

www.padippakam.com

# குழந்தைக்கு பதில் சொல்ல முடியவில்லை!

"என்ன வள்ளி வாச பக்கமே காணோம், தாளிக்குற வாசன மட்டும் ரோட்டுக்கு வந்து கூப்புடுது." பக்கத்துவீட்டு மாரியம்மா பேசிக் கொண்டே கொல்லைப் பக்கம் வந்தாள்.

"எங்க வீட்டுக்காரங்க தங்கச்சி இல்ல, சாந்தி. அதுவும் புது மாப்பிள்ளையும் வந்துருக்காங்க. இந்தப் பயல பள்ளிக்கூடத் துல வுட்டுட்டு வந்து சமைக்கிறதுக் குள்ளே லேட்டாயிடுச்சு."

"ஏன்? சாந்தி இருக்குல்ல, கூட மாட ஒத்தாசப் பண்ணாதா?"

"உஸ், மெதுவா" என்று ஜாடை காண்பித்த வள்ளி, "அது தலவலிக்குதுன்னு படுத்துடுச்சி" என்று மாரியம்மாளிடம் நெருங்கி வந்து பேசினாள்.

"உக்கும், வந்த எடத்துல படுத்துக்கறதுக்கு இவளுகளுக்கு இது ஒரு சாக்கு. இருந்தாலும் உன் வீட்டுக்காரரு தங்கச்சிய தங்கதட்டுல வச்சிதான் தாங்குறாரு. பள்ளிக்கூடத்துக்குப் போற புள்ளைய வச்சிகிட்டு நீயே அங்கயும் இங்கயும் லோல்படுற. கொஞ்சம் பாத்திரத்தக் கூடவா வெளக்கிப் போடக் கூடாது. போ கெடக்கு." தானாகவே பாத்திரங்களைப் பொறுக்கிப் போட்டுத் துலக்க ஆரம்பித்தாள் மாரியம்மாள்.

"தே மாரியம்மா, நீ வேற, காதுல விழுந்திடப் போவுது" என்று மீண்டும் எச்சரித்த வள்ளி அடி பம்பில் தண்ணியை அடித்து மாரியம்மாளுக்கு ஊத்தினாள். "நல்லவேள மாரியம்மா கும்பகோணம் கோவிலுக்கெல்லாம் வேற போகணும்னு சொல்லிட்டு இருக்காங்க. எல்லா வேலையும் எப்படித்தான் முடிக்கப் போறேன்னு தவிச்சிகிட்டு இருந்தேன், சரியான நேரத்துல வந்த."

"சரி வாசப்பக்கம் தச்சு வேல நடக்குதே என்னாது?" பேசிக் கொண்டே கொல்லைக் கடைசிக்கு வள்ளியை இழுத்துக் கொண்டு போனாள் மாரியம்மா.

"கல்யாணத்தப்ப ஒத்துக்கிட்ட சாமான்ல கட்டிலு மட்டும் ஒரு மாசத்





படிப்பகம்

www.padippakam.com

துல ஆசாரிய வச்சி செஞ்சு தர்றோம்னு பேசியிருந்தோம். அதான் தேக்கு வாங்கி வேல நடக்குது.''

''ஏன் வள்ளி அவுரு என்ன கவுருமெண்ட் வேலையா?''

''நீ வேறக்கா. பட்டாமணியார் குடும்பம்னு பழைய பெருமை, இவுரு வேலைக்குப் போறதில்லையாம். ஏதோ ஒரு பத்தாயிரத்த பைனான்ஸ் வுட்டுகிட்டு, கிராமத்துல சொந்த வூடுயிருக்கிறதால ஓட்டிகிட்டு இருக்காங்க. இன்னமதான் வேலைக்கு ஏதாவது போவச் சொல்லணும்னு சாந்தி சொல்லிக்கிட்டு இருக்கா.''

''அப்படிப்போடு. அடியேன்னு கூப்பிட ஆம்படையான் இல்லையாம், புள்ள பேரு கோபால கிருஷ்ணனாம்! அது மாதிரி கதையாயில்ல இருக்கு. இருக்க எடமில்லன்னாலும் இப்ப எல்லாரும் கட்டுலு, மெத்த, பீரோன்னுல்ல கேக்கறாங்க. மாப்பிள்ளைன்னு சொல்லி கிள்ளி போட்டா புல்லுகூட துள்ளிகிட்டு நிக்குமாம்.'' கன்னத்துல கோணலாக கை வைத்த மாதிரி மாரியம்மா அசந்து போய் நின்றாள்.

''தே, நீ வேற, சிரிக்க முடியல'' என்று குலுங்கிக் குலுங்கி நட்பாக மாரியம்மாவைத் தோளில் தட்டினாள் வள்ளி.

''என்னமோ போ உன் வீட்டுக்காரருக்கு இதெல்லாம் வீண் வேலை. பேசாம இரும்புல விக்கிறத ஒன்னு வாங்கித் தந்தா ஆவாது? இப்பத்தான் ஆசாரிய வச்சு எழைக்குறாரு! ஊக்கும்.''

''அதவுடு! நாம சொன்னா ஏற்காது அவுங்களுக்கு! கோயிலுக்கு நீயும் வர்றியா?''

''ஏ சாமி! ரேசன் கடைக்குப் போகணும். மூணு நாளா அவன் வேற சீக்கிரமே சாத்திட்டுப் போறான்''.

''ஏன் இன்னுமா வாங்கல?''

''அட நீ வேற. அட்டைல பேரு இருக்குறவன் வரணும்னு இவுனுங்க வேற. ரெண்டு நாளா நான் பெரியாஸ் பத்திரிக்கு அலையறேன். எங்க ரேசன் கடைக்குப் போறது? அரிசியில ஆள் மாறாட்டம் பண்றான், அத வுட்டுட்டாங்க. ஆள்தான் கரைக்டா வரணுமாம்.''

''யம்மா, அப்பா சீக்கிரம் கிளம்ப சொல்றாங்க ஆட்டோ வரப்போகுதாம்.'' புர், புர் துள்ளியபடி பஸ் ஓட்டிக் கொண்டு வீட்டுக்குள் ஓடினான்

**''அப்படிப்போடு. அடியேன்னு கூப்பிட ஆம்படையான் இல்லையாம், புள்ள பேரு கோபால கிருஷ்ணனாம்! அது மாதிரி கதையாயில்ல இருக்கு. இருக்க எடமில்லன்னாலும் இப்ப எல்லாரும் கட்டுலு, மெத்த, பீரோன்னுல்ல கேக்கறாங்க. மாப்பிள்ளைன்னு சொல்லி கிள்ளி போட்டா புல்லுகூட துள்ளிகிட்டு நிக்குமாம்.'' கன்னத்துல கோணலாக கை வைத்த மாதிரி மாரியம்மா அசந்து போய் நின்றாள்.**

வள்ளியின் மகன்.

''குமாரும் பள்ளிக்கூடம் வுட்டு வந்துட்டான். நான் கௌம்பறேன் மாரியம்மா.'' வள்ளி வேகவேகமாக முகத்தைக் கழுவ ஆரம்பித்தாள்.

***

''ஆட்டோக்குள்ள ஒக்காந்தே, பேச முடியல வண்டி சத்தம் அதிகமா இருக்கு மாத்தக் கூடாதா?''

''என்ன சார், நீங்க கும்புட்டு வந்தீங்கள்ல கும்பேசுவரர் அவுரே நூறு வருசங்குறாங்க, ஒரே வாகனத்துல போறாரு. நான் வண்டி வாங்கி அஞ்சு வருசந்தான் ஆகுது!'' ஆட்டோக்காரரின் குறும்பு கோபத்தை ஏற்படுத்த முனகிக் கொண்டே இறங்கினான் புது மாப்பிள்ளை.

''இந்தா'' ஐம்பது ரூபாயை எடுத்து ராஜேந்திரன் கொடுக்க, ''என்ன சார் இன்னும் பத்து சேர்த்துக் கொடுங்க'' என்று வாங்க மறுத்து இறைஞ்சினார் ஆட்டோக்காரர். இடையே குமார் பாம் என்று ஆரனை அமுத்த 'ச்சே போ' என்று ராஜேந்திரன் பையனை விரட்ட, ''ஏய் வந்துரு அப்பா கோபமா இருக்காங்க'' என்று வள்ளி மகனை இழுத்துக் கொண்டு போனாள்.

''என்னப்பா அம்பது ரூவாத்தானே சொன்னே! இப்ப கூட கேக்குறியே.''

''சார்! சுத்துன எடம் அதிகம்! நீங்க கூடத்தான் மொதல்ல கும்பேசுவரர் கோயில் வரைக்குன்னிங்க. அப்புறம் சாரங்கபாணி, இராமசாமி கோயில்னு ஒரு சுத்து சுத்தீல்ல வந்திருக்கோம்... நான் அநியாயமா கேக்க மாட்டேங்க.''

''ஆமாம், ஆமாம் எல்லாம் அப்படித்தான் சொல்றீங்க செய்யறது மட்டும் மோசமா இருக்கு!'' ராஜேந்திரன் சுருக்கென்று கேட்க ஆட்டோக்காரருக்கும் சூடேறியது.

''கோயிலு கொளம்னு போனா, அங்க தட்டுக்கு மேல அஞ்சு, பத்துன்னு போடுறீங்க. இங்க நியாயமா நாங்க கேட்டா மட்டும் ஏற இறங்க பாக்குறீங்க. மனசாட்சியோட பேசுங்க சார்! அஞ்சுபேர் ஏறிகிட்டு மூணுமணிநேரம் சுத்திருக்கீங்க, அறுபது ரூபா தரக்கூடாதா?''

''அதிகப்படியா பேசுற வேலை வச்சுக்காதே''. ராஜேந்திரன் கையை நீட்டி நீட்டிப் பேச புது மாப்பிள்ளையும் வீட்டுக்குள்ளிருந்து வர கடுப்போடு பணத்தை எறிந்துவிட்டு முனகிக் கொண்டே வந்தான் ராஜேந்திரன்.

''ச்சே இது வேற குறுக்க, குறுக்க'' ஆர்வத்துடன் ஓடிவந்த பையன் மேல் எரிந்து விழுந்தான், ராஜேந்திரன்.

''எவ்வளவுதான் தாங்க. இவனுங்களுக்கு ஆச அடங்காது, பிராடு பசங்க. அடுத்தவன் காச நோகாம திங்கணும் அதுக்காக என்ன வேணாலும் பேசுவானுங்க பிராடு பிராடு'' எரிச்சலை வெளிப்படுத்திய வண்ணம் வீட்டுக்குள் வந்தவன், வாசலில் ஆசாரியைப் பார்த்து, ''ஏங்க காலைல மொழுகு வாங்கணும்னு வூட்ல காசு கேட்டீங்களாமே. நான் என்ன இண்டும் இடுக்குமாவா மரம் வாங்கித் தந்துருக்கேன், எல்லாம் தேக்கங் கட்டையப்பா.''

பேச்சுக்கு இடையே பக்கத்துல வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் பையன் குமார். ஆசுவாசமாக புது மாப்பிள்ளையும் கை, கால் கழுவிக் கொண்டு வந்தான்.

''அப்பா, அப்பா...'' குமார் பின்னாலேயே சுற்றி வர, ''என்னடா இவன் வேற வந்ததுலேந்து கால சுத்துறான்''

''ஏம்பா ஆட்டோகாரர பிராடுன்னில்ல! அப்படின்னா என்னா?''

''இதான் இப்ப முக்கியமா? மொதல்ல வா சாப்பிடுவோம். போய் மாமாவையும் கூப்பிட்டுட்டு வா.''

அனைவரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

***

''குமார் மாமாவுக்கு புது கட்டுலு செஞ்சிருக்கோமே எப்படி இருக்கு?''

''சூப்பரா இருக்கு. சினிமாவுல

www.padippakam.com

காட்றாங்கல்ல அது மாதிரி இருக்கு!'

''அட நீ எந்தச் சினிமாவுல பாத்த?'' வியப்புடன் கேட்டான் புதுமாப் பிள்ளை.

''அண்ணாமலை படத்துல ரஜினி கிடுகிடுன்னு பணக்காரனாயி இப்ப டித்தான் பெரிய கட்டில்ல போயி ஸ்டைலா விழுவான்.''

''யேய் உன் புள்ளைய பாத்தியா, என்னமா பேசறான்.''

''எல்லாம் டிவி பார்க்றான்ல'' - மகனின் பேச்சில் பூரித்தான் ராஜேந் திரன்.

''ஏம்பா பிராடுன்னியே அப்ப டின்னா என்ன?''

''ஆரம்பிச்சுட்டான்டி வள்ளி உம்புள்ள. வந்ததுலேந்து இத புடிச்சிக் கிட்டான்டி.''

''சின்ன புள்ளங்கன்னா அப்ப டித்தான். சந்தேகத்துக்குப் பதில் கெடக் கறவரைக்கும் வுடமாட்டாங்க.'' புது மாப்பிள்ளையும் சிரித்துக் கொண்டான்.

''அதாவது பிராடுன்னா திருட்டுப் பய, அயோக்கியன்னு அர்த்தம் புரி யுதா?'' ராஜேந்திரன் விளக்க, திருப்தி அடையாத குமார், ''அப்படின்னா ஆட்டோக்காரர் எதையாவது திருடிட் டாராப்பா?'' என்று மீண்டும் நச்ச ரித்தான்.

''பாத்தீங்களா? குழந்தைங்க ளுக்குப் பதில் சொல்லி மாளாது. ஊம், இவனுக்கு எப்படிப் புரிய வைக்கிறது? அதாவது குமாரு! தனக்கு நஷ்டம் இல்லாம, தான் காச எடுக்காம அடுத்த வங்க காசுல குறியா இருந்து ஓசியில வாங்கிக்கிறான் பாரு அவனுக்குத்தான் பிராடுன்னு பேரு. புரியுதா? ஆளவுடு மொதல்ல! சாப்புடு''. மகனுக்குப் பிர ணவ மந்திரத்தை விளக்கியது போலப் பெருமூச்சு விட்டான் ராஜேந்திரன்.

ஒரு வாய்ச் சோற்றை அள்ளி வைக்கப் போன குமார், சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, அவசரமாக, ''அப்ப டின்னா மோதிரம், செயினு, இந்த கட்டிலு எல்லாத்தையும் காசு கொடுக்காம நம்மகிட்டேந்து மாமா கல்யாணத்துக்கு வாங்கிச்சில்ல மாமாவும் பிராடா? ஏம்ப்பா மாமாவும் பிராடா?'' குமார் வெகண்டையாகக் கேட்டுவிட, திடீரென விசுவரூபம் எடுத் தவன் போல ராஜேந்திரன் சோற்றுக் கையுடன் பாய்ந்து பளாரென்று அறைந்து பையனை எட்டி உதைத்தான். புது மாப்பிள்ளை தலையைக் குனிந்த வண்ணம் சோற்றை திரும்பத் திரும்பப் பிசைந்து கொண்டிருந்தான்.

சுருண்டு விழுந்த மகனை வாரிக் கொண்டு வள்ளி கொல்லைப் பக்கம் ஓடினாள். ஆசாரி குறுக்கே வந்து ராஜேந்திரனைத் தடுத்து இழுத்தார்.

''புள்ளையா இது எமன், இதெல்லாம் இருந்தா என்ன, செத்தா என்ன? என் கையாலேயே அடிச்சுக் கொன்னுடலாம் போல இருக்கு.'' ராஜேந்திரன் ஆத்திரம் அடங்காமல் திட்டிக் கொண்டேயிருந்தான்.

''நீங்க தப்பா எடுத்துக்காதீங்க, இப்பவுள்ள புள்ளைங்களே இப்ப டித்தான் துடுக்கா இருக்குதுங்க. எது தப்பு சரின்னு சின்னப் புள்ளைங்க ளுக்குத் தெரியறதில்ல'' ஆசாரி புது மாப்பிள்ளையை சாந்தப்படுத்தினார்.

''பெரியவங்கன்னா பின்னால போய்ப் பேசுவாங்க. சின்னப் புள்ளைங்களுக்கு என்ன தெரியும்? ஏதோ தெரியாம பேசியிருக்கான். இல்லேன்னா நேர்ல கேட்பானா? அது பச்ச புள்ள, அதுக்கு இப்படியா புள்ளைய போட்டு சாகற மாதிரி அடிக் கிறது?'' ஓடி வந்த மாரியம்மாளிடம் மகனின் வீங்கிய முகத்தைக் காட்டி தானும் அழ ஆரம்பித்தாள் வள்ளி.

வாய் திறக்க முடியாமல் வாசல் பக்கம் வந்த புது மாப்பிள்ளை புதுக் கட்டிலைப் பார்க்க, ஆசாரி இழைத்த ஒவ்வொரு இழைப்பிற்கும் அது மரத்துப் போகாமல் 'சர்சர்'ரென்று பதில் சொல்லிக் கொண்டிருந்தது.

– துரை. சண்முகம் □


## டாக்டர். பாபாசாகேப் அம்பேத்கர் - கணினிக் குறுந்தகடு -

- அம்பேத்கரின் முக்கியமான வாழ்க்கை நிகழ்ச்சிகள்
- ஆங்கிலத்தில் அம்பேத்கர் எழுதிய அனைத்தையும் உள்ளிட்டு - அவரது படைப்புக்கள்
- அம்பேத்கரின் நேர்காணல்கள்மற்றும் விவாதங்கள் இதில் சட்டசபை, பாராளுமன்றம், அரசியல் நிர்ணய சபை ஆகியவற்றில் அவர் நடத்திய அனைத்து விவாதங்களும் இடம் பெற்றிருக்கிறது.
- அம்பேத்கரின் கையெழுத்துப் பிரதிகள்.
- பல்வேறு சமயங்களில் எடுக்கப்பட்ட அம்பேத்கரின் புகைப்படங்கள், குடும்பத்தினருடன் அவர் இருக்கும் புகைப்படங்கள் மற்றும் அவர் நடத்திய போராட்டக் களங்கள், இயக்கத் தோழர்கள், தொண்டர்கள், மற்ற மக்களுடன் அம்பேத்கர் இருக்கும் 400 அரிய புகைப்படங்கள்.
- அரசியல் நிர்ணய சபையில் அவர் ஆற்றிய உரை - ஒலி வடிவத்தில்...
- வீடியோவில் அவரது முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் சுருக்கமாக...
- அம்பேத்கர் எழுதிய படைப்புக்களை கண்டுபிடிக்கும் வகையில் பொதுவான குறிப்பான தலைப்புக்களை வைத்து உருவாக்கப்பட்டிருக்கும் பொருளடக்கம்...

- இக்குறுந்தகட்டை கணினியில்தான் பயன்படுத்த முடியும் என்றாலும், கணினி இல்லாதவர்கள், இணையத்தள மையங்கள் சென்று பயன்படுத்தலாம். மேலும் அம்பேத்கரின் படைப்புக்களில் இருந்து தேவைப்படும் தலைப்பு, விவரங்களை நிமிடத்தில் தேடி எடுக்கலாம். 600-க்கும் மேற்பட்ட புகைப்படங்களிலிருந்து தேவையானதை எடுத்துப் பயன்படுத்தலாம்.

ஆய்வாளர்கள், அறிஞர்கள், நூலகங்கள், முற்போக்கு அடைப்புக்கள் - அவற்றின் முன்னணியாளர்கள் அனைவரும் வைத்திருக்க வேண்டிய இந்தக் குறுந்தகடு ஒரு முக்கியமான முழுமையான ஆவணமாகும். அம்பேத்கரின் தொகுப்பு நூல்களை மிகுந்த செலவில் முழுமையாக வாங்க இயலாதவர்களுக்கு இக்குறுந்தகடு அளப்பரிய பயனைத் தரும். ஆகவே இக்குறுந்தகட்டை வாங்காதவர்கள் வாங்கி பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- இவ்வரிய குறுந்தகட்டை தொகுத்து உருவாக்கியவர் முனைவர். ஆனந்த் தெல் தும்ப்டே அவர்கள், மும்பை.

- விலை ரூ. 400/- தபால் செலவு ரூ.20/-

*கிடைக்குமிடம்:*

**புதிய கலாச்சார அலுவலகம் மற்றும்**

**கீழைக்காற்று வெளியீட்டகம்**

10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை,

சென்னை - 600 002. தொ.பே.எண்: 28412367

www.padippakam.com







ஒரு நூலை விரிவாக அறிமுகப்படுத்த வேண்டும் என்பதற்காக, பல நூல்களை உடனுக்குடன் அறிமுகம் செய்ய இயலாமல் இருந்தது. இனி, முடிந்த அளவு பல நூல்களை சுருக்கமாக அறிமுகம் செய்ய இருக்கிறோம். நூல் மதிப்புரைக்கு 2 புத்தகங்கள் அனுப்பி வைக்கவும்.

*- ஆசிரியர் குழு*

மதமாற்றத் தடைச் சட்டம் என்ற ஜனநாயக விரோதச் சட்டம் திணிக்கப்பட்டுள்ள தமிழகத்தில் - அம்பேத்கர் புத்தமதத்துக்கு மாறிய போது ஆற்றிய உரையைப் பதிப்பித்துள்ளார்கள்.

அம்பேத்கர் சொன்னார்:

''மானங்கெட்ட, மரியாதை கெட்ட நிலையிலிருந்து நீங்கள் விடுபட்டு, அசுத்தங்களில்லாத பயனுள்ள பெறற்கரிய வாழ்நிலையை அடைய வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் உண்டு. உங்களைப் பின்னிப் பிணைத்துள்ள இந்துமதச் சங்கிலியை அறுத்தெறிந்துவிட்டு வெளியேறுவது ஒன்றே அச்சிறந்த வழி என்று நான் உறுதியாகக் கூறமுடியும்...''

''தீண்டப்படாத மக்களுக்குச் சட்ட உத்திரவாதத்துடன் கூடிய உரிமையைவிட, சமூகச் சுதந்திரம் அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுகிறது...''

இன்று சிலர் கேட்கிறார்கள்: ''வெளியேறுங்கள் என்று சொல்லிவிட்டீர்கள். எந்த மதத்துக்கு என்று ஏன் சொல்லவில்லை? அப்படி வெளியேறிவிட்டால் இடஒதுக்கீடு போன்ற சலுகைகள் போய்விடாதா?''

இவர்களுக்கான பதிலை அம்பேத்கர் சொல்கிறார். ''தீண்டாமை என்ற கொடிய சாதி நடைமுறை வைத்துள்ள இந்துமதத்தைவிட்டு வெளியேறுவோம்!'' என்று தீர்மானிப்பதே முதலில் முக்கியம் என்றார் அம்பேத்கர். வேறு எந்த மதம் என்று தேர்ந்தெடுப்பது ஜனநாயக உரிமை என்றும் அவர் சொன்னார்.

இந்த நூல் அம்பேத்கரின் ஆவணம்.

நூல்: ***இரக்கமற்ற இந்துமதம் வேண்டாம் மதம் மாறுங்கள்: அண்ணல் அம்பேத்கர் அறைகூவல்***

பதிப்பாசிரியர்: ***நாத்திகம் பி. இராமசாமி***

***நாத்திகம் வெளியீடு:*** 97/55, என்.எஸ். கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024. தொ.பே.எண். 52134024. விலை: ரூ. **30.**

❑

ஈராக் மீதான போர்த் தயாரிப்புக்களை அமெரிக்கா செய்து வந்த நேரத்தில் அதன் நோக்கங்களை விமரிசித்து உண்மையை எடுத்துச் சொல்ல இந்நூல் எழுதப்பட்டது. பிறகு ஈராக் போர் தொடங்கியது; ஈராக்கைப் பூண்டோடு அழித்து அடிமை நாடாக்கிட அமெரிக்கா கொடூரமான போரை நடத்தியது. போர் இன்னமும் முடியவில்லை... இந்தப் போரின் உண்மை வரலாற்றை அறிய தற்போது என்ன வகையான செய்திகள் உதவினாலும் அவற்றை நாம் கவனிக்க வேண்டும். அந்த அளவில் பல்வேறு கட்டுரைகள், சில கேலிச் சித்திரங்கள் சேர்த்துத் தொகுக்கப்பட்ட இந்நூல் பல வழிகளில் நமக்கு உதவும்.

நூல்: ***அமெரிக்காவின் ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போர்-மறைக்கப்படும் உண்மைகள்***

ஆசிரியர்: ***அழகுமதி***

வெளியீடு: ***காவல் நீதி மற்றும் சித்திரவதை ஒழிப்புப் பிரச்சாரம்,*** தமிழ்நாடு.
10, தாமஸ் நகர், சின்னமலை, சைதை,
சென்னை - 600 015. விலை: ரூ. **20.**

❑

''கொல்லாமைக்கு இலக்கணமே பிராமணீயம்; பசு எங்களுக்குப் புனித மாதா!'' என்று வலம் வரும் பொய்களைப் போட்டு உடைக்க டி.என் ஜாவின் நூல் வந்திருக்கிறது; 13-ஆம் நூற்றாண்டுவரை பார்ப்பனர் பசு மாமிசம் சாப்பிட்டதை ஆதாரங்களோடு நிறுவுகிறது. எடுத்துக்காட்டாக, நூலிலிருந்து சில செய்திகள்:

''பார்ப்பன இலக்கியமான மகாபாரதத்தில் 'வனபர்வத்'தில் மன்னன் ரந்திதேவரின் அரண்மனைச் சமையலுக்காக 2000 பசுக்கள் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் பூணூல் சடங்கு செய்பவன் பசுத் தோலை மேலாடையாக அணிவது அவசியமாக்கப்பட்டிருந்தது.

''வேதகால நம்பிக்கைகள், சடங்குகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பௌத்தம், சமணம் இரண்டும் பசுவைப் புனிதமாகக் கருதவில்லை. ஆரம்பத்தில் அத்துறவிகள் மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி தின்றனர்; பிறகு விவசாயம் உருத்திரண்ட காலத்தில் அதற்கேற்ப கால்நடைகள் பராமரிக்கப்பட்டன - தேவையற்ற முதிய பசு போன்ற விலங்குகள் கொல்லப்பட்டன.

'பசுவதைத் தடைச் சட்டம்' பாராளுமன்றத்தில் சமைக்கப்படுவதற்கு முன்னாலேயே நாம் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வஞ்சகத்தை விரிவாக மக்களுக்கு விளக்கி அக்கும்பலை எதிர்க்க வேண்டும். டி.என்.ஜா தொகுத்துள்ள விவரங்கள் நமக்குத் துணை நிற்கும்.

டி.என்.ஜாவின் இந்நூலை எதிர்த்து இந்துமதவெறியர்கள் வழக்குப் போட்டும், நேரில் மிரட்டியும், 'ஜாவுக்கு மரண தண்டனை'க் கட்டளை என்கிற ஃபட்வா பிறப்பித்தும் கூட நூல் வெளிவந்துவிட்டது.

''இந்து அடிப்படைவாதத்தையும், சுரண்டல் சமூகத்தையும் எதிர்த்து ஒப்பில்லாத போரை நடத்தவேண்டிய நிலையில் உள்ள இந்திய வாசகர்களுக்காகவே உண்மையில் இந்நூல் எழுதப்பட்டது'' என்று சொல்கிறார் ஜா.

நூல்: ***பசுவின் புனிதம்: மறுக்கும் ஆதாரங்கள்***

ஆசிரியர் : ***டி.என்.ஜா***

வெளியீடு: ***புத்தா வெளியீட்டகம்,***
3, மாரியம்மன் கோயில் வீதி,
உப்பிலிப்பாளையம், கோவை - 641 015.

விலை: ரூ. **65.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

PUTHIYA KALACHARAM (T.....) Regd. No: TN/PMG (CCR)/239/03-05
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
www.padippakam.com
















"எல்லோரும் "இன்புற்றிருக்க"
நினைப்பதுவேயல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே"
- இது ஒரு விகடன் பிரசுரம்



பலான விசயங்கள் பாரம்பரிய ரசனையுடன்...
78 வருஷ அனுபவம்... ஐந்தே ரூபாயில் அளவிலா ஆனந்தம்

ஷகிலா படங்களைப் பார்க்கக்
கூச்சப்படும் அம்பிகளுக்குத்
தன்னம்பிக்கையூட்டும்
உபநிடதம்

கள்ளச்சாராயம் விற்று
போலீஸ், எம்.எல்.ஏ,
மந்திரிகளை அட்ஜஸ்ட் செய்து
வாழ்க்கையில்
முன்னேறுவது எப்படி?
- படியுங்கள்....
வீராங்கனை சரசக்காவின்
கண்ணீர்க் காவியம்!

பின்னடித்து
பாலிதீன் உறையில் போட்ட
25 ரூபாய் இலக்கியத்தை வாங்கி
ஒளிந்து மறைந்து படிக்கும்
வாலிப வயோதிக அன்பர்களே...
ஐந்தே ரூபாயில் அதே இன்பம்!
ஒளிய மறையத் தேவையில்லை...
ஒப்பனாகப் படிக்கலாமே

ஜூனியர் விகடன்

சலூனில் ஜிலு ஜிலு படங்கள் ஏன்?
விகடன் மாணவப் பத்திரிகையாளரின்
புலிட்சர் பரிசைக் குறிவைக்கும்
புலனாய்வு!

அலுவலகப் பெண்கள்
ஆண்களிடம் அன்றாடம்
அனுபவிக்கும் துன்பங்களை
ஜாலியாக எழுதி
அனுப்புங்களேன்
- "லேடீஸ் ஒன்லி"
ஒன்லி இன் ஜூ.வி.

பேசினால் பச்சை
பார்த்தால் நீலம்
படித்தால் மஞ்சள்...
பல வண்ணத்தில் பளிச்சிடும்
ஜூ.வி ஒரு பூலோக சொர்க்கம்!

டாக்டர் பிரகாஷின்
துச்சாதன வேலைகளை
மூன்று மாதம் கிளுகிளுப்புடன்
கவரேஜ் செய்த
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
உங்கள் ஜூ.வி.

பிராவுக்கும் பிரமிடுக்கும் உள்ள
உறவு என்ன?
முத்தமிடும்போது
கண்ணை மூடுவது ஏன்?
மந்த்ரா ரேஞ்ச் மார்பகம்
ஆணுக்கு ஏன்?
பழைய உதடுகளில் முத்தம்
தரும் கிக் சாத்தியமா?
- அறிவியல் அறிஞர் சுஜாதா
எழுதும் "ஏன், எதற்கு, எப்படி?"

இளமைத் துடிப்புள்ள காதல் படங்களே
ஊத்திக்கொள்ளும் இந்தக் காலத்தில்
சரவணபவன் அண்ணாச்சியின்
அந்தப்புர லீலைகளை வைத்தே
நூறு நாள் ஓட்டிய
சூப்பர் ஹிட் பத்திரிக்கை - ஜூ.வி.

படிப்பகம்

சமூக நலன் கருதி புதிய கலாச்சாரம் சொந்தச் செலவில் வெளியிடும் விளம்பரம்.